குவளைகள் அவர்களை சுற்றிக்கொண்டேயிருக்கும். அது மிகுந்த வெண்மையானதாகவும், குடிப்போருக்கு மிக்க இன்பமானதாகவு மிருக்கும். அதில் போதையே இராது; அதனால் அவர்களுடைய அறிவும் நீங்கிவிடாது. அவர் களிடத்தில், கீழ் நோக்கிய, அடக்கமான பார்வையையுடைய (ஹூருல் ஈன் என்னும்) கண் ணழகிகளும் இருப்பார்கள். அவர்களின் நிறம் (இறக்கைகளில்) மறைக்கப்பட்ட (நெருப்புக் கோழியின் இலேசான மஞ்சள் வர்ணமுடைய) முட்டை களைப் போலிருக்கும்.'' (37 - 43: 49)

அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்த உத்தமர்கள், ''அவர்கள் திருப்தியடையும்படியான சுகபோகத்தில், மேலான சுவனபதியில் இருப்பார்கள்.'' அதன் கனிகள் (இவர்கள் படுத்திருந்தாலும், உட்கார்ந்திருந்தாலும், நின்றுகொண்டிருந்தாலும், எந்நிலைமையிலும் கைக்கு எட்டக்கூடியதாக இவர்களை)நெருங்கி இருக்கும்.''

மனித வர்க்கத்தார் அனுபவிக்கும் முழு இன்பத்தின் உச்சக் கட்டமே சுவர்க்கம் எனப்படுவது; எந்த இன்பத்திற்குப் பின் திரும்பத் துக்கமும், துன்பமும் வராதிருக்குமோ? அந்த வாழ்க்கையே சுவர்க்கம் ஆகும்.

## சுவனபதிகளில் விளக்கம்

1 தாருல் குல்து: தண்டனை பெற்று மீண்டவர்கள் பெறும் சுவர்க்கம்.

2. தாருல் மகாம்: 'ஸதகா' ஜக்காத்து (ஏழை வரி) கொடுத்த கொடையாளிகள் பெறும் சுவர்க்கம்.

3. தாருஸ் ஸலாம்: பொறுமையைக் கைக்கொண்டோர் பெறும் சுவர்க்கம்.

4. தாருல் கரார்: சொல்லும் செயலும் ஒத்த உலமாக்கள் பெறும் சுவர்க்கம்.

5. ஜன்னத்துல் அத்னு: தவமெனும் வணக்கம் செய்தோர் அடையும் சுவர்க்கம்.

6. ஜன்னத்துல் மஃவா: மூவாசைகளையும் வெறுத்த வலிமார்கள் ஒதுங்கும் தலம்.



7. ஜன்னத்துன் நயீம்: அல்லாஹ்வுக்காக உயிர் துறந்த ஷுஹ தாக்கள் பெறும் சுவர்க்கம்.

8. ஜன்னத்துல் பிர்தவ்ஸ்:தீனின் தூண்டுகோலான நபிமார்கள் பெறும் சுவர்க்கம்.

இந்த எட்டு சுவன பதிகளுக்கும் 'ரிள்வான்' (அலை) அவர்களே அதிபர்.

''எவனொருவன் கீழ்வரும் ஏழு செய்கைகளை நடை முறையில் கொண்டு வருகின்றானோ? அவன் சுவன பதியைத் தேடுவதிலும், நரகத்தை விட்டுத் தூரமாவதிலும் உரிமையுடைய வனாகிறான்.''

1 அல்லாஹ்வை அறிந்து, அவன் கட்டளைக்கு வழிப்பட்டு நடத்தல்.

2 ஷைத்தானை அறிந்து, அவனுக்கு விரோதமாக நடத்தல்.

3 உண்மை எது? எனத் தெரிந்து, அதை எடுத்துக் கொள்ளல்.

4 தவறு, பொய் எவை? என்று அறிந்து, அவற்றை விட்டொழித்தல்.

5 துனியாவை உணர்ந்து, அதைப் பற்று வைக்காதிருத்தல்.

6 ஆகிரத்தைத் தேடி, அதை அடைய முயலுதல்.

7 தம்மைப் போன்ற சகோதரர்களுக்கு சொல் செயல் நினைவால் எவ்விதத் தீங்கும் இழைக்காதிருத்தல்.

(நா - வா)

ஒருநாள் பதாவிக் காபிர் ஒருவர் நாயகம் (ஸல்) அவர்கள் சன்னதியில் வந்து ''தாங்கள் சுவன பதியின் வழியைக் காண்பிக்கின்றீர்களாமே! எனக்கும் அந்த இலகுவான வழியைக் காட்ட வேண்டும்'' என்று வேண்டிக்கொள்ள, நாயகம் (ஸல்) அவர்கள்:

''வணக்கத்துக்குரியோன் அல்லாஹ்வாகும்; முஹம்மது (ஸல்) அவனது ரசூலாகும், எனக் கலிமாச் சொல்வதும், தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு இவற்றை அனுசரிப்பதுமே, அந்த இலகுவான வழியாகும்.'' எனக் கூறியதைக் கேட்ட அந்தக்காட்டரபி மிகவும் ஆச்சரியமுற்று ''இவ்வளவு தானா!'' எனக் கேட்க, ''ஆம்'' என நாயகம்

(ஸல்) அவர்கள் விடை பகர்ந்தார்கள். ''நாயகமே! ஆண்டவன் மேல் சத்தியமாக, நான் இவற்றில் யாதொன்றையும் விடாது நடப்பேன்'' எனக் கூறி இஸ்லாத்தைத் தழுவினார்.

அவர் செல்கையில் நாயகம் (ஸல்) தோழர்களை விளித்து, ''உலகில் சுவனவாதியைப் பார்க்க விரும்புவீர்களாகில், அதோ போகும் மனிதரைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' எனத் திருவுளமானார்கள்.

எனவே, இறைவனுடன் நெருங்கிய சம்பந்தமுண்டாகும் வழிகளைத் தேடி வணங்கி ஒழுகுவதே, சுவன பதியைப் பெறும் வழி.

சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்துக்குப் போகுங்கால், ஆண்டவன் அதன் அதிபர் ரிள்வானை நோக்கி ''அவர்கள் தாமாகவும் போக வேண்டாம்; நீவிர் அவர்களைக் கூட்டியும் செல்லவேண்டாம். ஏனெனில், அவர்கள் தாமாகப் போவதில் பரதேசிகள் போவது போலும், நீவிர் கூட்டிச் செல்வதில் அடிமைகள் போவதுபோலும் ஆகிவிடும். ஆகவே, எஜமானனைக் கண்ணியப்படுத்தும் மரியாதைக் கொப்ப, நானே என்னிடமுள்ள மரியாதைகளை அவர்களுக்கு அளித்துச் செல்ல வைப்பேன்.'' அவர்கள் சுவர்க்கத்தின் வாயிலில் வந்ததும், மலக்கு ரிள்வான் ஆகியோர் **“ஸலா முன் அலைக்கும் திப்த்தும் பத் குலூஹா காபிதீன்”** (''உங்களுக்கு சாந்தியும் சமாதானமும், உண்டாகுக; நீங்கள் பாக்கியவான்களாகி விட்டீர்கள்; நீங்கள் இதில் நுழைந்து என்றென்றுமே இதில் தங்கிவிடுங்கள்''.) என்ற வேத வாக்கியத்தை ஓதி, அவர்களுக்கு வாழ்த்துக் கூறி வரவேற்பார்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.



## ரிள்வான் (அலை) அவர்களுக்கு ஹத்யாக்கள் நான்கு

### 1-வது ஹத்யா

### அமானிதத்தைப் பேணிச் செலுத்தல்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَخُونُوا اللَّهَ وَالرَّسُولَ وَتَخُونُوا
أَمَانَاتِكُمْ وَأَنْتُمْ تَعْلَمُونَ ۝

**“விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹுவுக்கும் (அவனுடைய) தூதருக்கும் சதி செய்யாதீர்கள். தவிர நீங்கள் (செய்வது அக்கிரமம் என) அறிந்துகொண்டே உங்களிடம் உள்ள அமானிதப் பொருள்களிலும் சதி செய்யாதீர்கள்.”** (8 - 27)

அல்லாஹ் தானே மனிதனிடம் ஒப்படைத்த அமானம், தன்னை இயங்கச் செய்யும் ஆன்மாவாகும்.

''பேசும்போது பொய் பேசுகிறவனும், தான் செய்த வாக்குறுதியை மீறி நடப்பவனும், தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட அமானிதத்தில் நம்பிக்கை மோசம் செய்பவனும் எவனோ? அவன் என்னுடைய கூட்டத்தில் சேர்ந்தவனாகான். ஆனால் அவன், உண்மையில் மார்க்க விரோதியான கலகக்காரனாகயிருக்கிறான்.''
(நா - வா)

ஹதிஸில் பின்வருமாறு காணப்படுகிறது:- முஹர்ரம் பிறைபத்து வெள்ளிக் கிழமையன்று அல்லாஹு, ஆதம் (அலை) அவர்களின் முதுகிலிருந்து, அவர்களது சந்ததிகளாகிய நம் எல்லோரையும் வெளிப் படுத்தி, வரிசை வரிசையாக நிறுத்தி, நம்மைப் பார்த்து **“அலஸ்து Bபிறப்பிக்கும்.”** (நான் உங்கள் நாயன் அல்லவா?) என்று வினவினான். அதற்கு நாம் எல்லோரும் **“காலூBபலா”** ('மெய்தான், நீயே எங்கள் நாயன்') என்று பதில் கொடுத்தோம். இந்த வாக்குறுதியை உடனே இறைவன் வரைந்து சுவர்க்கத்திலிருந்து ஒரு கல்லைத் தருவித்து அதனிடம், அதனை அமானமாக ஒப்படைத்தான். அந்தக்கல் அதனை விழுங்கிக் கொண்டது.

(அதுவே ''அஹ்து மீதாக்குடைய நாள்'' என்று சொல்லப் படுகிறது.) அப்பால் அல்லாஹுத்த ஆலா, அந்தக்கல்லை

மக்காவிலுள்ள கஃபா ஷரீபில் வைத்துவிட்டான். அந்தக்கல்லே 'ஹஜ்ருல் அஸ்வத்' என்று சொல்லப் படுகிறது.

இறுதி தீர்ப்பு நாளன்று அது, அந்த அமானத்தை வெளிப்படுத்தி முஃமின்கள் விசயத்தில் சாட்சி சொல்லும்; அந்த அமானத்தின்படி உறுதிமானத்தை நிறைவேற்றியவர்களே முஸ்லிம்களாவர்; அதற்கு மாறு செய்பவர்கள் காபிர்களாவர்.

இறைவனது ஏவல் விலக்கல்களைக் கடைப்பிடித் தொழுக வேண்டிய அமானம் மனித வர்க்கத்தாருக்கு ஏற்பட்டது போன்று, மனிதர்கள் தத்தமக்கிடையில் ஏற்படும் அமானப் பொறுப்பை அவரவர்கள் காப்பாற்ற வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

''(நம்பி, உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட) **அமானிதப் பொருள்களை, அதன் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும்படியும், மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால், (பட்சபாதமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும், நிச்சயமாக, அல்லாஹுத்தஆலா உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். உங்களுக்கு அல்லாஹுத்தஆலா செய்யும் இந்த உபதேசம் மெய்யாகவே எவ்வளவு சிறந்தது! நிச்சயமாக, அல்லாஹுத்தஆலா, செவியுறுவோனாகவும், உற்று நோக்கு கிறவனாகவும் இருக்கின்றான்.''** ***(4 - 58)***

அமானிப் பொருளைத் தந்தவன் இறந்துவிட்டால், அவனது வாரிசுகள் யார்? யார்? என்று விசாரித்துக் கொடுத்துவிட வேண்டும். கொடுத்தவன் வந்து கேட்கும்போது, ஆள் தெரியாவிட்டால், தகுந்த சாட்சிகளின் மூலம் தெளிந்து கொடுத்துவிட வேண்டும். துப்பு விளங்காத அமானிதப் பொருள், பழைய துணிகளாக இருந்தால், அதை ஏழைகளுக்கு அளித்துவிட வேண்டும்; விலை மதிப்புள்ள பொருளாக இருந்தால், பைத்துல்மாலில் சேர்த்துவிட வேண்டும். அமானிதப் பொருளை வாங்கியவன் திரும்பக் கொடுக்காமல் மோசம் பண்ணுவானாயின், அவன் ஆண்டவனுக்கு மாறு செய்தவனாவான். அந்தப் பொருளுடையவனுக்குக் கொடுக்காதவரை, அவனது எந்த வகையான வணக்கமும் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

''அமானம் என்பது அல்லாஹுத்தஆலாவை சாட்சியாக்கி, நம்பி ஒப்படைக்கும் பொருள். அதற்கு மாறு செய்வது அல்லாஹுத்தஆலாவின் கொடிய ஆக்கினைக்கு ஆளாகுவதாம்.''

*(நா - வா)*



## 2 - வது ஹத்யா

## பொறுமையைக் கடைப்பிடித்தல்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

***''விசுவாசிகளே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்; ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளுங்கள்; எந்தநேரமும் சித்த மாயிருங்கள்; அல்லாஹுத்தஆலாவுக்குப் பயந்து (நடந்துகொள்ளுங்கள்) நீங்கள் (இம்மை மறுமைகளில்) வெற்றியடையலாம்.''*** *(3: 200)*

ஒருநாள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு போதனை செய்தார்கள். ''எவன் ஒருவன் தனக்கு அல்லா(ஹ்)வுத்தஆலா செல்வங்களைக் கொடுத்ததற்கு நன்றி செய்தானோ, இன்னும் துன்பங்களைத் தந்ததற்கு பொறுமை செய்தானோ, இன்னும் அநியாயங்களைப் பொறுத்துக்கொண்டானோ, இன்னும் அநியாயம் செய்து பொறுத்துக் கொள்ளத் தேடினானோ.'' என்று கூறி வாயை மூடிக்கொண்டார்கள். அப்போது ''அல்லா(ஹ்)வின் ரசூலே! அவனுக்கு என்ன?'' என்று ஸஹாபாக்கள் வினவ, நபி(ஸல்) அவர்கள் ''அப்படிப்பட்ட வனுக்குத்தான் இறுதி நாளில் ஈடேற்றமும் சாந்தியும் உண்டு'' என்று மொழிந்தார்கள். *(நா - வா)*

''நான் என்னுடைய அடியார்களில் ஒருவனுடைய சரீரத்தின், அல்லது அவனுடைய முதலின், அல்லது அவனுடைய பிள்ளைகளின் பேரில் கஷ்டத்தை அனுப்பி, அவன் பொறுமையுடன் பொருந்திக் கொண்டால், அவனுடைய முன்னிலையில் நான், அவனது நன்மை தீமையை நிறுக்கத் தராசு பிடிக்கவும், அவனது பட்டோலையை விரித்துப் பரிசோதிக்கவும் வெட்கி, சுவர்க்கத்தின் அதிபராகிய 'ரிள்வானு'க்கு அன்பு உண்டாகும்படிச் செய்வேன்.''

*(ஹதீதுகுத்ஸி)*

இரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் மொழிந்திருப்பதாவது:-

'பொறுமையாகிறது, ஈமானின் பாதியாக இருக்கும். இன்னும் சுவர்க்கத்தின் புதையல்களில், ஓர் புதையலாகயிருக்கும். அன்றியும் நான் எனது முஃமினான அடியானைத் துன்பத்தால் சோதிப்பேன்.

அவன் தன்னிடம் சேமம் விசாரிக்க வருவோர்களிடம், அதைப்பற்றி முறையிடவில்லையாயின், அவன் மேலுள்ள இக்கட்டுகளை அவிழ்த்து விடுவேன். இன்னும் அவனது தேகத்தைக் காண நல்ல தேகத்தையும், அவனது இரத்தத்தைக் காண நல்ல இரத்தத்தையும் பகரமாகக் கொடுப்பேன். இன்னும் அவனது பாவங்களைப் பொறுத்து, இனிமேல் நீ நற்செயலைப் பற்றிப் பிடித்துக்கொள், என்றும் சொல்வேன்'' என அல்லா(ஹ்)வுத் தஆலா கூறுவான்'.

*(நா - வா)*

மூஸா (அலை) அவர்கள் ஆண்டவனை நோக்கி, ''இறைவா! சுவர்க்கத்தில் உனக்கு உகப்பான தலத்தின் பெயர் என்ன?'' என்று கேட்க, அதற்கு ஆண்டவன் 'ஹலரத்துல் குத்ஸு' என்று பதில் கொடுத்தான். 'அதில் யார் குடியிருப்பார்?' என்று கேட்க, ''துன்பங்களைச் சகித்துக் கொண்டவர்'' என்று தெரிவித்தான். பின்னர் அவர்கள் ''எந்தவிதத் துன்பங்களைச் சகித்துக் கொண்டோர்கள்?'' என்று கேட்டபோது, ஆண்டவன் ''கொடிய பஞ்சம், நோய் முதலியவைகளால் நான் சோதித்தால், அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்; நிறைந்த செல்வங்களைக் கொடுத்தால், நன்றி செலுத்துவார்கள். இன்னும் அல்லல் நேரிட்டால் 'இன்னா லில்லாஹிவ இன்ன இலைஹி ராஜிஊன்' (நாம் அல்லா(ஹ்)வின் அடிமைகள். அவன் நம்மை நாடியபடி செய்வான், இறுதியில் நாம் அவனளவிலேயே மீளுகிறவராகயிருக்கிறோம்) என்று எவர்கள் சொல்வார்களோ, அவர்களே ஆவர்''. இன்னும் ''நாம் செய்த செயல்களுக்கேற்ற கூலி அவனிடத்தில் உண்டாகியிருக்கிறது; நம்மை அவன் சும்மா விடமாட்டான்'' என்று எவர்கள் சொல்வார்களோ? அவர்களுமாவார்கள்'' என்று பதிலளித்தான்.

## துன்பத்தின் முடிவே இன்பம்

லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்கள் தங்கள் மகனை நோக்கி:-

**''என்னருமை மகனே! நீ தொழுகையைக் கடைப்பிடித்தொழுகு; நன்மையான காரியங்களைக் கொண்டு ஏவி, பாவமான காரியங்களி லிருந்து (மனிதர்களை) விலக்கிவை. உனக்கேற்படும் கஷ்டங்களை நீ பொறுமையுடன் சகித்துக்கொள். நிச்சயமாக இது சகல காரியங்களிலும் மிக்க வீரமுடையதாகும்.''**

*(31: 17-)*



''உனக்குப் பொருத்தமான அல்லது பொருத்தக்கேடான எந்தக் காரியமும் உன்னை நோக்கிவரினும், அதை நீ பொறுத்துக் கொள். அது அந்தரங்கத்தில் உனக்கு நலவாக இருக்குமேயன்றி தீமையாக இருக்காது.'' என்று உபதேசித்துப் பின் வருமாறு வேண்டினார்கள்:-

''மகனே! அல்லாஹுத்தஆலா இன்ன ஊரில் ஒரு நபியை அனுப்பியுள்ளான். அந்த ஊர் மக்கள் அவரை நபி என ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். நாம் இருவரும் போய் அவரை உண்மையாக்கி வைப்போம்.''

எனக்கூறி ஒருநாள் அந்த இருவரும் வழிச்செலவுக்கு வேண்டியதைத் தயார் செய்துகொண்டு, கழுதைமேல் சவாரிசெய்து, சிலநாள் இரவு பகலாக பிரயாணம் செய்து, ஒரு காட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு வெயில் கொடூரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. நடு உச்சிவரைக்கும் காட்டைக் கடந்து போனார்கள்; கைவசமுள்ள உணவும் தண்ணீரும் செலவாகி விட்டன. பின்னர் அவர்கள் கழுதைகளை இழுத்துக்கொண்டு, பாதசாரியாய் நடக்கலானார்கள். அவர்களுக்கெதிரே தொலை தூரத்தில், அடர்ந்த கரு நிறமும், அங்கங்கே புகை கிளம்புவதும் தென்பட்டன. அதிலிருந்து சோலை வனங்களும் மனிதர் குடியிருப்புமுள்ள ஊர் என்று விளங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் கழுதைகளை அப்புறப்படுத்திவிட்டு, அந்தத் திசையை நோக்கி நடக்கும்பொழுது, ஹலரத் அவர்களது மகனின் காலில் பல முட்கள் குத்தின. அதன் வலியாலும், பசி தாகத்தின் கொடுமையாலும், மகன் மயங்கிக் கீழே சாய்ந்து விழுந்தார்.

ஹல்ரத் அவர்கள் மகனை நெஞ்சோடு அணைத்து, காலிலுள்ள முட்களைப் பல்லால் பிடுங்கி எடுத்துவிட்டு, அவர் படும் உபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் கண்ணீர் சிந்தினார்கள்.

அப்போது மகன் தந்தையைப் பார்த்து ''தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்? எனக்கு எப்படிப்பட்ட சம்பவங்கள் நேரிட்ட போதிலும், அது எனக்கு நலவாகவே இருக்குமென்று தாங்கள் தானே பலதடவை சொல்லி இருக்கிறீர்கள்''. தவிர ''நம்மிடமுள்ள உணவெல்லாம் செலவாகி விட்டன. இந்தநடு வனாந்திரத்தில், கொடும் வெயிலில் நாம் அகப்பட்டுக் கொண்டோம். தாங்கள் என்னை இதே நிலையில்விட்டு உணவிற்காகப் போவீர்களாகில்,

துக்கமும் வருத்தமும் தங்கள் மனத்தைவிட்டும் மாறாது. அல்லது தாங்கள் இங்கு என்னுடன் இருந்துவிடுவீர்களானால் நாமிருவரும் இறந்து விடுவோம்.'' என்று சொல்ல, ஹல்ரத் அவர்கள் மகனைப் பார்த்து ''மகனே! நீ என்னைவிட்டுத் தனித்துவிடுகின்றாய் என்று தான் அழுகின்றேன், இல்லாவிட்டால் இது உனக்கு நான் சொன்னதுபோல், எப்படி நலவாக இருக்கமுடியும்? ஆதலின் இப்போது உன்னைத் தொட்டுள்ள துன்பத்தைவிட, இனிமேல் நேரிடவிருக்கும் பெரிய துன்பங்கள் உன்னைவிட்டு அகன்று போகக்கூடும். அல்லது இந்தத் துன்பத்தால் இனி சம்பவிக்கக்கூடிய துன்பங்கள் அதிகமாகக்கூடும்''. என்று சொன்னார்கள்.

பிறகு எதிரே தோன்றிய கரும் படலத்தையும், அங்கங்கே கிளம்பிய புகையையும் காணவில்லை. பொழுது சாயும் வேளையில் ஒரு மனிதர் கறும்சிகப்புநிறக் குதிரைமேல் வேகமாக வந்து கொண்டிருந்தார். அவர் வெள்ளைத் தலைப்பாகையும், வெண்மை உடையும் அணிந்தவராகக் காணப்பட்டார். அவர் ஹல்ரத் அவர்களின் சமீபத்தில் வந்து ''ஓய்! நீர் லுக்மான் அல்லவா! உமக்குச் சந்தோஷம் உண்டாகுக! உம்முடைய மகன் என்ன சொன்னார்''. என்று கேட்டார். அதற்கு லுக்மான் ''நீவிர் யார்? உம்மை நான் இதற்கு முன் கண்டதில்லையே! உமது வரலாற்றைச் சொல்வீராக!'' என வினவ, அதற்கு அவர் ''நான் ஜிப்ரீல். நீர் நாடிச்செல்லும் ஊரையும், அதிலுள்ளவர்களையும் புரட்டி அழித்து விடும்படி என் ரப்பு எனக்குக் கட்டளையிட்டான். நல்லடியாராகிய நீங்கள் இருவரும், இந்த ஊரை நோக்கி வந்து கொண்டிருந்ததால், இது அழிந்துபடுவதற்கு முன் உங்களை வராமல் தடுத்துக் கொள்ளும்படி என் ரப்பிடம் பிரார்த்தித்தேன். உடனே அல்லா(ஹ்) உம்முடைய மகனுக்கு இந்த அல்லல்களை உண்டாக்கித் தடுத்துக் கொண்டான். இங்ஙனம் அவன் உங்களைத் தடை செய்திராவிட்டால், நான் உங்கள் இருவரையும் அந்த ஊர்க்காரரோடு மண்ணுக்குக் கீழாக ஆழ்த்தியிருப்பேன்'' என்று தெரிவித்தார்.

பிறகு அவர் ஹல்ரத் அவர்களது மகனின் கை, கால், முகம் முதலிய உறுப்புகளைத் தமது கரங்களால் தடவி, வலியை, குணப்படுத்தினார். தண்ணீர் உணவு முதலியவைகளும் கொடுத்து, அவர்களிருவரையும் தமது குதிரைமேல் ஏற்றிப் பறவைகளைப் போல் பறந்துசென்று, அவர்களுடைய வாசஸ்தலத்தில் சேர்த்து விட்டு மறைந்துசென்றார். *(தப்ஸீருல் கதீபுஷ் ஷற்பீனி)*



நபி சுலைமான் (அலை) அவர்களின் குழந்தை ஒன்று இறந்து விட்டது. அதைப்பற்றி நபி அவர்கள் மிக வருத்தம் கொண்டிருந்தார்கள். அப்போது இரு மலக்குகள் அவர்கள்முன் தோன்றி, வாதி பிரதிவாதியாக நின்று ''அல்லாஹூவின் நபியே! நான் ஒரு இடத்தில் பயிர் செய்திருந்தேன். அதை இந்த மனிதர் மிதித்து நாசப்படுத்திவிட்டார்.'' என்று வாதி கூறியபின், பிரதிவாதியிடம் ''நீவிர் அப்படிச் செய்தது சரி அல்லவே!'' எனக் கூறினார்கள். அதற்கு அந்த மனிதர், ''நபியே! மனிதர்கள் எப்பொழுதும் நடந்து திரியுமிடத்தில் இவர் பயிர் செய்ததினால், நான் அந்த வழியாக நடந்தேன்'' என்றார். இதைக் கேட்ட நபி அவர்கள், ''அப்படியானால் அது உம்மீது குற்றமில்லை'' என்றார்கள். அப்போது அந்த வாதியானவர், ''நபியே! மவ்த்து என்பது ஆகிரத்திற்குச் செல்லும் பாதையாகயிருக்க, தாங்கள் குழந்தை இறந்து போனதைப்பற்றி துக்கிக்கலாமா?'' என்றதும், நபி அவர்கள் தங்களின் சலிப்பை மாற்றிக்கொண்டார்கள்.

**''வஸ்பிரு இன்னல்லாஹ மஅஸ்ஸாபிரீன்.''**

***(நீங்கள் துன்பங்களை) ''சகித்துக்கொள்ளுங்கள்; திட்டமாக அல்லாஹ் பொறுமையாளருடனே இருக்கின்றான்.''***

## 3 - வது ஹத்யா
## இணையில்லா இறைவனுக்கு வழிபடுதல்

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوا بِهٖ شَيْـًٔا

***''அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்.''***

ஷிர்க்கான செய்கைகளிலிருந்து மக்களை விலக்கவேண்டியது அவசியம். இல்லையாயின் அந்த ஷிர்க்கின் காரணமாக, அந்த நாடு அல்லாஹ்வின் சோதனைக்கு இலக்காகி விடக்கூடும்.

## ஷிர்க்கு நான்கு வகைப்படும்

1. அல்லாஹ் அல்லாத ஒன்றை, வணக்கத்திற்குரிய இறைவனாகக் கொள்ளல்.
2. அல்லாஹ் அல்லாத ஒன்று, மக்களுக்கு நன்மை தீமை ஆகியவைகளை அளிக்கும் சக்தியுடையதாகயிருக்கிறது என நம்புதல்.
3. அல்லாஹ் அல்லாத ஒன்றிற்கு, 'உஜூது' என்னும் சுயத் தோற்றம் இருப்பதாக நம்புதல்.
4. அல்லாஹ் அல்லாத ஒன்றை 'மஷ்ஹூது' என்னும் கற்பனை வடிவப்பொருளாகக் காணுதல், என்பதாம்.

முதலாவது ஷிர்க்கு பரலோக ஈடேற்றத்தைத் தடுத்து மக்களை நிரந்தர நரக தண்டனைக்கு ஆளாக்கும். நபிகள் நாதரின் மன்றாட்டம், அவ்லியாக்களின் சிபாரிசு ஆகியவைகளும், அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். (இவர்களே முஷ்ரிகீன்களாவர்). இத்தகையோரையே இறைவன் **'வ இன்னஷ் ஷிர்க்க லளுல்முன் அளீம்'** ஷிர்க்கு என்பது மிகப் பெரிய அக்கிரமமான குற்றம். எனக்கூறியுள்ளான்.

இரண்டாம் ஷிர்க்கு அல்லாஹ்வை நெருங்க முடியாதபடி தடுத்துவிடும். மூன்றாவது நான்காவது ஷிர்க்குகள் அல்லாஹ்வுக்கும் அடியாருக்குமிடையே திரையையுண்டாக்கி, அவர்கள் அல்லாஹ்வை தரிசிக்காதபடி தடுத்துவிடும். அவனது ஐக்கியத்தை அடைய முடியாது.

இஸ்லாமிய ஷரீஅத்து, மக்களை, முதலாவது ஷிர்க்கைக் கண்டித்து விலக்கி இருக்கிறது. அந்த ஷிர்க்கைச் செய்தவர்கள், இஸ்லாத்தின் எல்லைக்கோட்டைக் கடந்துவிடுகின்றனர் - மற்ற மூன்று ஷிர்க்குகளையும், செய்பவர்கள் இஸ்லாத்தைவிட்டு வெளிப்பட்டவர்களாகார். ஏனெனில், அவர்களிடம் முதலாவது ஷிர்க்கு இல்லை ஆகையால் அவர்களை 'பாஸிக்' துன்மார்க்கர் என்று கூறலாமேயன்றி, 'முஷ்ரிக்', எனக் கூறுவதற்கில்லை. எனவே, அவர்கள் மூன்று ஷிர்க்குகளின், (அவற்றின்) தீயசெயல்களை உணர்ந்து, சென்றுபோன தவறுகளுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக்கோரி, மீட்சி பெறாதவரை: மறுமையில் அல்லாஹ்வை அடைய முடியாதது போலவே, இம்மையில் அவர்கள் ஆத்மீகத் துறையிலுள்ள உன்மை முஃமின், ஸாலிஹீன், ஷுஹதாக்கள்,



சித்தீக்கீன்கள் முதலான பதவிகளை நெருங்க முடியாமல் ஆகிவிடுவர். அன்றியும் அவர்கள் நரக வேதனை அனுபவித்த பிறகே ஈடேற்றம் பெறுவர்.

**''எவர்கள் மெய்யாகவே விசுவாசம் கொண்டு, தங்கள் விசுவாசத்துடன், யாதொரு அக்கிரமத்தையும் கலந்துவிடவில்லையோ, அவர்களுக்கு, நிச்சயமாக அபயமுண்டு. அவர்கள்தான் நேரான வழியிலும் இருக்கின்றனர்''.** *(6 - 82)*

**(அல்லாஹ்) தன்னையே வணங்கும்படியாகவும், யாதொன்றையும் தனக்கு இணையாக்கக் கூடாதென்றும், அவன் கட்டளை இட்டிருக்கிறான். அதன் பின்னர் எவரேனும் நிராகரிப்பவர்களாகி விட்டால், நிச்சயமாக அவர்கள் பெரும் பாவிகள்தான்.' (25-55)**

அல்லாஹ் ஒருவனே வணங்குதற்குரிய இறைவன் எனக் கொள்ளும் முஃமின்கள், தங்கள் விசுவாசத்தில் மேற்கூறிய மூன்றுவித ஷிர்க்கான செயல்களில் எதுவும் கலந்துவிடாதபடி, பாதுகாத்துக் கொள்பவர்களுக்குக் கிடைக்கப்பெறும் மேன்பதவியையும்; 'விசுவாசத்துடன் ஷிர்க்கான செயல்களைக் கலப்புச் செய்வோர் நஷ்டத்திற்குரிய பெரும்பாவிகளாவர் எனவும், மேற்கூறிய வசனங்கள் தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

***(நபியே) 'நீர் கூறும்: நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய (மற்ற) வணக்கங்களும், என் ஜீவியமும், என் மரணமும் உலகத்தாரை படைத்துப் போசித்துப் பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை.''***

***''அவனுக்கு யாதொரு இணையுமில்லை (துணையுமில்லை). இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். ஆகவே அவனுக்கு வழிப்பட்டவர்களில் நான் முதன்மையானவன்''. (என்று கூறுவீராக!)***
***(6: 162 - 163)***

ஒப்புவமை கூற முடியாத பரம்பொருளாகிய இறைவனை நாம் நன்கு அறிந்து, நம் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வழிபடுவதற்கு வேண்டியே அவன் நம்மைப் படைத்துள்ளான்.

அந்தக் காலம் முதல் இந்தக் காலம்வரை, எத்தனையோ நபிமார்களும், அவர்களின் பக்தர்களும், மற்றும் அநேக

ஞானவான்களும் இறைவன்மேல் பக்திபூண்டு, அவனது பாதையில் 'ஜிஹாத்' (மார்க்க யுத்தம்) செய்தும் வந்ததற்குப் பகரமாக, இறைவன் தனது உதவி ஒத்தாசைகளை கண்ணியத்தோடு அன்னோருக்கு, இந்த உலக வாழ்க்கை, மறு உலக வாழ்க்கைச் சிறப்புக்களை அளித்துப் பலனடையுமாறு செய்திருக்கின்றான். இதற்குத் திருமறையிலிருந்து சில ஆதாரங்களை எடுத்துக்காட்டுகின்றோம்.

## அஸ்ஹாபுல் கஹ்புகளின் வரலாறு

### தியாகிகளுக்கு மரணமில்லை

நபி மூஸா (அலை) அவர்களுக்குப் பின்னும், நபி ஈஸா (அலை) அவர்களுக்கு முன்னுமான, இடைக்காலத்தில் 'தக்யானூஸ்' என்ற அரசன் இருந்தான். அவன் மிகவும் கர்வமுள்ளவன். அவன் தன்னை 'ஆண்டவன்' என்றழைக்கும்படித் தன் குடிகளை வற்புறுத்தினான். அங்ஙனம் அழைக்காதவர்களைத் தண்டிக்கவும் முனைந்தான். அவனுக்குப் புத்திசாலிகளான ஆறு அமைச்சர்களிருந்தனர். மக்ஸல்மீனா, தம்லீக்கா, மர்தூனுஸ், ஸாதனூஸ், தூனுவாயில், பைநூனுஸ் என்பன அவர்களின் பெயர். அரசனுடைய விபரீதப் போக்கைக் கண்ட 2-வது அமைச்சர் 'தம்லீக்கா' என்பவருக்கு அரசன்மேல் மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது.

ஒருநாள் அந்த அரசன், 'தர்மஸீல்' என்ற பக்கத்தூர் அரசன் தன்னோடு சண்டைக்கு வருவதாகக் கேள்விப்பட்டதும், தனது ஆசனத்திலிருந்து கீழே அடித்து மோதி விழுந்தான். 2-வது அமைச்சர் 'தம்லீக்கா' என்பவர் அரசனைப் பார்த்து ''அரசே! கலங்க வேண்டாம். தாங்கள் ஆண்டவனாக இருந்தால், எவராலும் உங்கள் ஆசனத்தை அசைக்க முடியாது,'' என்று கூறிக் கொண்டே, அந்த இடத்திலிருந்து வெளியேறிவிட்டார். பின்னர் அவர் இரகசியமாக மற்ற அமைச்சர்களோடுகூடி யோசித்து, ''நம்முடைய அரசன் தன்னை ஆண்டவன் என்று கூறுவதோடு, நம்மையும் அவனுக்கு வழிபடும்படி வற்புறுத்தி ஏவுகின்றான். இந்த வம்புத்தனமான அரசனுக்குக் கீழடங்கி இருப்பதைவிட, நாம் எங்காவது சென்று, நம்மைப் படைத்தவனாகிய ஏக பராபரனைச் சர்வ சுதந்தரமாக வழிபட்டு நடப்பதே மேல்'' என்ற முடிவுக்கு வந்து, ஓர் இரவு வழிச்செலவுக்குச் சில வெள்ளிக் காசுகளை எடுத்துக்கொண்டு, அந்த ஆறு வாலிப அமைச்சர்களும், மனைவி



மக்களையும் சொத்து சுகங்களையும் விட்டுப் பிரிந்தனர். அரசனின் ஆட்கள் தங்களைக் கண்டுபிடிக்காதிருக்க வேண்டி, ஒவ்வொருவரும் குதிரைமேல் ஏறி ஒவ்வொரு திசையாகச் சென்று, பின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுசேர்ந்து குதிரைகளை விட்டுவிட்டு பாதசாரியாக நடந்தார்கள்.

சில காதவழிகள் கடந்து, ஒரு காட்டின் வழியே போகும் போது, ஆடுகள் மேய்த்துக்கொண்டிருந்த ஓர் இடையரைக் கண்டு, அவரிடம் தாககாந்திக்கு ஏதேனும் கொடுக்கும்படி கேட்டார்கள். அந்த இடையரின் பெயர் இக்பை ஷய்தநூனுஸ். அமைச்சர்களாகிய வாலிபர்கள் உயர் குலத்தோராகவும், ஏதோ ஊரை வெறுத்துப் போகிறவராகவும் அந்த இடையருக்குப் புலப்பட்டதால், அவர் அவர்களிடம் உள்ளதைச் சொல்லும்படி கேட்டார். இடையர் சத்தியவந்தரெனத் தெரிந்த, அமைச்சர்கள் அவரிடம் தாங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்ட காரணத்தைக் கூறினார்கள். உடனே இடையர் அவர்களை வணங்கி நின்று, தாமும்கூட வருவதாகக் கூறி ஆடுகளை உடையவரிடம் ஒப்புவித்து விட்டு, அவர்களின் தாகசாந்திக்குப் போதிய பால் கொணர்ந்து கொடுத்து, தானும் அவர்களோடு சேர்ந்து நடந்தார். அவருடைய 'கித்மீறு' என்ற நாயும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றது. மறைந்து வாழ்வதற்கு நாய் பெரிதும் குந்தகம் என்று எண்ணி அந்த வாலிப அமைச்சர்கள், அதை அடித்துத் துரத்த, அது உட்கார்ந்து கொண்டு 'அல்லா(ஹ்)வின் உள்ளமையின்மீது நன்னம்பிக்கை கொண்டு, ஆண்டவன் பாதையில் தன்னைத் தியாகம் செய்ய ஆசையுற்றிருப்பதாக' சாடைகாட்டி, அந்த நாயும் அவர்களைப் பின் தொடர்ந்தது. அவர்கள் காட்டின்வழி நடக்கலானார்கள். சூரிய அஸ்தமன வேளையில் ஒரு மலை தென்பட்டது. இரவைக் கழிப்பதற்காக அதன்மேல் ஏறினார்கள். அங்கு ஒரு குகையும், அதைச் சுற்றிக் கனிமரங்களும், நீர்ச்சுனையும், கண்டார்கள். ஆகவே அவர்கள் கனிகளை அருந்தி பசியாற்றிக் கொண்டபின்,

**''நம்முடைய இந்த ஜனங்கள் அவனையன்றி வேறு நாயனை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். இதற்குத் தெளிவான அத்தாட்சியை இவர்கள் கொண்டுவர வேண்டாமா? அல்லா(ஹ்)வின் மீது கற்பனை களை (இட்டுக்கட்டி) பொய் கூறுபவனைவிட, அக்கிரமக்காரன் யார்?''**

*(18: 15)*

''அவர்களிலிருந்தும், அவர்கள் வணங்கும் அல்லா(ஹ்) அல்லாதவைகளிலிருந்தும் நாம் விலகிக்கொண்ட பின்னர் (பகைவனை விட்டும் தப்ப) இந்தக்குகைக்குள் சென்றுவிடுவோம்; நம் இறைவன் நம்மீது தன் அருளைச் சொரிந்து (ஜீவனோபாயம் போன்ற) நம் காரியங்களை எளிதாகவும் நமக்கு சித்தப்படுத்திவிடுவான்''. (என்று தங்களுக்குள் கூறிக்கொண்டே) *(18: 16)*

(இளைப்பாறுவதற்கு வேண்டி) ''வாலிபர்கள் குகைக்குள் சென்றபொழுது ''எங்கள் இறைவனே! உன் அருளை எங்களுக்கு அளிப்பாயாக! நீ எங்களுக்கு நேரான வழியை சித்தப்படுத்தி விடுவாயாக!'' என்று பிரார்த்தனை செய்தார்கள்.'' *(18: 10)*

''அவர்களுடைய நாயோ தன் இரு முன்னம் கால்களையும் விரித்துக்கொண்டு (குகையின்) வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது.'' *(18: 18)*

''சூரியன், உதிக்கும்போது அவர்கள் (இருக்கும் அந்தக்) குகையின் வலது பக்கத்தில் சாய்ந்தும், அஸ்தமிக்கும்போது அவர்களின் இடது பக்கத்தைக் கடந்தும் சென்றுவிடுகிறது. அவர்களோ அதன் விசாலமான இடத்தில் (நிழலில்) இருக்கின்றனர்.'' ''அவர்களை வலது பாரிசமாகவும், இடது பாரிசமாகவும் (மாற்றி மாற்றி) நாம் திருப்பிக் கொண்டிருக்கிறோம்.'' *(18: 17)*

''அன்றி அவர்கள், குகையில் முன்னூறு வருடங்கள் இருந்தனர். என்று (சிலரு)ம், அதற்கு அதிகமாக ஒன்பது வருடங்கள் இருந்தனர்'' (என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.)

''அவர்கள் அதில் இருந்த காலத்தை அல்லா(ஹ்)தான் நன்கறிவான்.'' *(18 - 25: 26)*

''அவர்கள் (குகையில் எவ்வளவு காலம் இருந்தனர் என்பதை) தங்களுக்குள் கேட்டறிந்து கொள்ளும்பொருட்டு இவ்வாறு (குகையிலிருந்த) அவர்களை நாம் எழுப்பினோம், அவர்களிலொருவர் (மற்றவர்களை நோக்கி) ''நீங்கள் எவ்வளவு நேரம் நித்திரையிலிருந்தீர்கள்'' என்று கேட்டார். அதற்கு அவர்களில் சிலர், ''ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சிறிது பாகம் (இருந்திருப்போம்)'' என்று கூறினர். (மற்றவர்கள்) ''நீங்கள் நித்திரையிலிருந்த காலத்தை உங்கள் இறைவன் தான் நன்கறிவான்.'' என்று கூறி, உங்களிலொருவரிடம் இந்த (வெள்ளி) நாணயத்தைக் கொடுத்து, அவரைப் பட்டணத்திற்கு



அனுப்பிவையுங்கள். அவர் (அங்கு சென்று,) நல்ல ஆகாரப் பொருள் எது, (எங்கிருக்கிறது) என்பதைத் தேடிப் பார்த்து, அதில் சிறிது வாங்கி வரவும், எனினும் உங்களை (அவர்களில்) ஒருவரும் அறிந்து கொள்ளாதவாறு மிக்க எச்சரிக்கையாகவே அவர் இருந்து கொள்ளவும்.'' *(18: 19)*

''ஏனென்றால் (ஊரில் வசிக்கும் மக்கள்) உங்களை (இன்னாரென) அறிந்துகொண்டால், நிச்சயமாக அவர்கள் உங்களைக் கல்லெறிந்து கொன்றுவிடுவார்கள், அல்லது உங்களைத் தங்களுடைய மார்க்கத்தில் சேர்த்துவிடுவார்கள். (சேர்ந்தாலோ) ஒருக்காலத்திலும் நீங்கள் சித்திபெற மாட்டீர்கள்.'' (என்றார்கள்) *(18: 20)*

அவர்கள் குகைக்குள் நுழையும்போது பொழுது அடைந்தது; அவர்கள் அங்கிருந்து வெளியேறும்போது பொழுது உதித்தது. ஆகவே, அவர்கள் அங்கு தூங்கிக்கிடந்த 309 வருடமும் அவர்களுக்கு ஓர் இரவெனத் தோன்றியது. குகைக்குள் புகும்போது கண்ட மரங்களும், சுனையும் இப்போது காணப்படவில்லை. அவர்களுக்குப் பசி அதிகரித்தது. ஆகவே சிறிது உணவு கொண்டு வரும் பொருட்டு அவர்களில் 'தம்லீக்கா' என்பவர் தம்மை இன்னார் என்று ஊரிலுள்ளோர் தெரிந்துகொள்ளாதிருக்க வேண்டி, இடையருடைய சின்னங்களை அணிந்து சில வெள்ளிக் காசுகளும் எடுத்துக்கொண்டு, பட்டணத்திற்குள் பிரவேசித்தார். பட்டணத்தின் எல்லையில் 'லாஇலாஹ இல்லல்லாஹு ஈஸாரூஹுல்லாஹ்' என்று எழுதப்பட்டிருப்பதையும் 'இன்ஜீல் ஓதப் படுவதையும் கண்டு, மிகவும் ஆச்சரியமடைந்தார். கடைவீதிக்குச் சென்று ஒரு ரொட்டிக் கடைக்காரன் மூலம், அந்த ஊரின் பெயர் 'தறதூஸ்' பட்டணம் என்றும், அந்தப் பட்டணத்தின் அரசன் பெயர் 'அப்துர் ரஹ்மான்' என்றும் கேட்டறிந்து சந்தோசித்தவராக தம்மிடமுள்ள வெள்ளிக் காசைக் கொடுத்து ரொட்டி கேட்டார். அந்தக்காசு நடப்பிலுள்ள நாணயத்தைவிடக் கனமாக இருந்ததைக் கண்ட கடைக்காரன், அவர் ஏதோ புதையல் எடுத்திருப்பதாக நினைத்து, புதையலில் பங்கு கொடுக்கும்படி கேட்டான். அதற்கு 'தம்லீக்கா' என்பவர், 'தக்யாநூஸ்' அரசனை மக்கள் ஆண்டவன் என்று வணங்கும்போது நாம், அந்த ஊரைவிட்டும் போனவர்,'' என்று சொன்னார். அப்போது கடைக்காரன் அவர், முந்நூறு வருடங்களுக்கு முன் தன்னை ஆண்டவன் என்று வாதித்து மடிந்த, ஒரு வம்பனுடைய பெயரைச்

சொல்லி, பரிகாசம்பண்ணுகிறார், என்று நினைத்து அவரை அரசனிடம் கொண்டுவிட்டான். அரசன் அவரைப் பார்த்து ''எங்கள் நபி ஈஸா அவர்கள் புதையல் எடுத்தவர்களிடம் 5-ல் ஒரு பங்கு வாங்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். அதன்படி தந்துவிடுவதே முறை'' என்றான். அதற்குத் தம்லீக்கா என்பவர்:-

''நான் புதையல் எடுக்கவில்லை. நான் இந்த ஊரில் வாழ்ந்தவன்தான். எனக்கு இங்கு வீடும் உண்டு.'' என்று கூறினார். உடனே அரசன் சில ஆட்களை அனுப்பி அவருடைய வீட்டைப் பார்த்துவரும்படி ஏவினான். 'தம்லீக்கா' ஒரு பெரிய வீட்டைக் காட்டி அதுவே தம்டு'டைய வீடு என்றார். அந்த வீட்டில் இருந்த வயோதிகர் 'தம்லீக்கா' என்ற பெயரைக் கேட்டதும், தன்னுடைய பாட்டனா என்று நிச்சயமாக அறிந்து அவருடைய காலில் விழுந்து வணங்கினார். இந்தச் சாட்சியம் அரசனுக்கு எட்டியதும், அவன் தனது பரிவாரங்களோடு வந்து, தம்லீக்காவுக்கு மரியாதை செலுத்தினான். தம்லீக்கா தமது விருத்தாந்தங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார். அரசன் அவரைக் கூட்டிக்கொண்டு மலைக் குகைக்கு மற்ற **'அஸ்ஹாபுல் கஹ்பு'**களையும் பார்ப்பதற்காகப் புறப்பட்டான்.

**'(மரித்தோரை உயிர்ப்பிப்போம் என்ற) அல்லா(ஹ்)வினுடைய வாக்குறுதி உண்மையானது என்றும், மறுமை வருவதினாலும் யாதொரு சந்தேகமில்லை என்றும்; (அந்தப் பட்டண வாசிகளான) அவர்கள் உறுதியாக அறிந்துகொள்ளும் பொருட்டு, இவ்வாறு (ஆகாரம் தேடி பட்டணத்திற்குச் செல்லும்படிச் செய்து) அவர்களுக்கு (இவர்களை)க் காட்டிக்கொடுத்தோம்.''** *(18: 21)*

மலையின் சமீபம் வந்ததும் 'தம்லீக்கா', அவர்களை நிறுத்தி விட்டுத் தாம் மட்டும் சென்று, அவர்களை அழைத்துவருவதாகக் கூறிச் சென்றார். குகைக்குள் சென்று தமது சகாக்களிடத்தில் அவர் கூறியதாவது:-

''நாம் இந்தக்குகைக்குள் 309 வருஷம் தூங்கி இருக்கிறோம். நமது அரசன் 'தக்யானூஸ்' இறந்து, அதற்கப்பால் எத்தனையோ கூட்டத்தார் தோன்றி மறைந்திருக்கிறார்கள். இப்போதுள்ள அரசனும் மக்களும் அல்லா(ஹ்)வுக்கு ஈமான் கொண்டவர்கள். அவர்கள் நம்மை அழைத்துப்போக வந்திருக்கிறார்கள்'' என்று கூறினார். அதைக் கேட்டு அவர்கள் கலக்கமுற்று ''நீவிர் எங்களை ஆபத்திலும், ஏமாற்றத்திலும் வீழ்த்திவிடாதிருப்பீராக.'' என்று முறையிட்டார்கள்.



உடனே 'தம்லீக்கா' ''உங்கள் எண்ணத்தின்படி. நாம் இறைவனிடம் நம்மை மவ்த்தாக்கும்படி வேண்டிக் கொள்வோம்''. என்றதும், எல்லோரும் ஒருமுகமாக ஆண்டவன்பால் ''இறைவா! எங்கள் ஆன்மாக்களை உன் சமூகம் அழைத்துக் கொள்.'' என்று பிரார்த்தித்தார்கள். உடனே ஆண்டவன் அவர்களை மவ்த்தாக்கி, அந்தக்குகையின் வாசலையும் அடைத்து விட்டான்.

**''இவர்களுக்கு நிலையான சுவனபதிகள் உண்டு. அவற்றில் நீரருவிகள் சதா ஓடிக்கொண்டேயிருக்கும், அவர்களுக்கு (பரிசாக)ப் பொற்கடகம் அணிவிக்கப்படும், மெல்லிதாகவோ, அழுத்தமான தாகவோ (அவர்கள் விரும்பிய) பசுமையான பட்டாடைகளை அணிவார்கள். ஆசனங்களிலுள்ள தலையணைகள்மீது சாய்ந்து (மிக்க உல்லாசமாக) இருப்பார்கள், இவர்களுடைய கூலி மிக்க நன்றே!.... இவர்கள் இன்பம் சுகிக்கும் இடமும் மிகவும் அழகானது.''** *(18: 31)*

அரசனும் மக்களும் சில நாட்களாகப் பொதும்பைத் தேடித் திரிந்தும் அதன் அடையாளம் புலப்படாமல் போயிற்று. சில நாட்களுக்குப் பிறகு, அதே அப்துர் ரஹ்மான் என்ற முஸ்லிம் அரசரும், அவரது மக்களும் அங்கு கல்லால் சமைந்த நாயின் அடையாளத்தைக் கண்டு, பொது மக்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். அதை அறிந்த நஸாராக்கள், ''அவர்கள் எங்கள் மார்க்கத்தில் மரித்தவர்கள், அந்த இடத்தை நாங்களே பரிபாலனம் செய்வோம்.'' என்று தர்க்கித்தார்கள்.

**''இவர்கள் யார் என்பதைப்பற்றி தர்க்கித்துக்கொண்டும், இவர்களை இறைவன்தான் நன்கறிவான் என்றும், இவர்கள் இருக்கும் இடத்தில் (உயர்ந்த) ஒரு கோபுரத்தை (ஞாபகார்த்தமாக) எழுப் புங்கள்.'' என்று கூறினார்கள் (இந்தத் தர்க்கத்தில்) எவர்களுடைய அபிப்பிராயம் மேலோங்கியதோ (அந்த முஸ்லிமானவர்கள்) ''இவர்கள் இருக்கும் இடத்தில் ஒரு பள்ளியை நிச்சயமாக நாம் அமைத்து விடுவோம் என்று', (பள்ளிவாசல் அமைத்தார்கள்)** *(18: 21)*

நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம், யூதர்களும், கண்ணிய மிக்க ஸஹாபாக்களும், மேன்மைமிக்க 'அஸ்ஹாபுல் கஹ்புகள்' விஷயமாகக் கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள் மேற்கண்டபடி திருவுளமானார்கள்.

இவைபோன்ற அற்புதச் செயல்கள் மகான்களுக்கும், நபிமார்களுக்கும் எண்ணிக்கையற்ற விதத்தில் நிகழ்ந்திருக்கின்றன.

## பத்ருஸ் ஸஹாபாக்கள் (ரலி)

நம் நபிகள் பிரான் (ஸல்) அவர்களுச்குப் 'பத்ரு' சண்டையின் போது வானத்திலிருந்து அமரர்கள் இறங்கி உதவி செய்திருக்கிறார்கள். விபரம் வருமாறு:-

'பத்ரு' என்பது ஒரு கிணற்றின் பெயர். மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலிருக்கிறது. 'பத்ரு' என்ற அரசன் அந்தக்கிணற்றை வெட்டியதால், அந்தப்பெயர் அந்த இடத்திற்கு உண்டாயிற்று.

ஹிஜ்ரி 2-ம் வருடம் ரமலான் 17-ம் நாள் இங்கு நாயகம் (ஸல்) அவர்களுக்கும், மக்கத்துக் காபிர்களுக்கும் சண்டை நிகழ்ந்தது.

நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் சார்பில் 76 மக்கா வாசிகள் 237 மதீனா வாசிகள் ஆக 313 பேர் உண்டாகி இருந்தனர். ஒரு குதிரை, தொண்ணூறு ஒட்டகை, ஆறு கவசம், எட்டு வாள் இவ்வளவே அவர்கள் வசம் உண்டாகி இருந்த யுத்தப் பொருள்.

காபிர்கள் 1000-க்கு மேல் உண்டாகி இருந்தனர். நூற்றுக்கு மேல் குதிரை சவாரிகள் அவர்களிடம் இருந்தன. ஏராளமான தளவாடங் களும் உண்டாகி இருந்தன.

பகைவர்கள் எண்ணிக்கையிலும், யுத்த சாதனங்களிலும் அதிகமாக இருந்ததைக் கண்ட முஃமீன்கள், தங்கள் வெற்றி விசயத்தில் நம்பிக்கை இழந்தனர்.

''(இந்த யுத்தத்தில்) **உங்களில் இரு பிரிவினர் தைரியத்தை இழந்துவிட இருந்த சமயத்தில், அல்லா(ஹ்), அவர்களுக்கு உதவி செய்வோனாக இருந்தான்.** (ஆகவே) **விசுவாசிகள், அல்லா(ஹ்)வின் மீதே நம்பிக்கை வைப்பார்களாக.''** **(3: 122)**

**'பத்ரி'ல்** (நடந்த யுத்தத்தில்) **நீங்கள்** (எதிரிகளைவிட ஆயுதத்திலும், தொகையிலும்) **குறைந்தவர்களாக இருந்த சமயத்தில் நிச்சயமாக அல்லாஹு உங்களுக்கு உதவிபுரிந்தான். ஆகவே, அல்லா(ஹ்)வுக்கு நீங்கள் நன்றிசெலுத்தும் பொருட்டு, அவனுக்குப் பயந்து** (வழிபட்டு) **நடவுங்கள்.''** **(3: 123)**

''(நபியே!) **நீர், விசுவாசிகளை நோக்கி** (வானத்திலிருந்து) **மூவாயிரம் மலக்குகளைக் கொண்டு, உங்களை இறைவன்,**



**உங்களுக்கு உதவி செய்தது போதாதா? என்று கூறியதையும் ஞாபகமூட்டுவீராக.''** **(3: 124)**

(இன்னும்) **''நீங்கள்** (அல்லாஹ்வுக்குப்) **பயந்து பொறுமை யுடனிருந்தால், இதே சமயத்தில்** (எதிரிகள்) **உங்கள்மீது அடர்ந்தேறிய போதினும்,** (மூவாயிரமென்ன?) **விருதுபெற்ற ஐயாயிரம் மலக்குகளைக் கொண்டு, உங்கள் இறைவன், உங்களுக்கு உதவி செய்வான்''.** (எனக் கூறுவீராக) **(3: 125)**

மேற்கண்ட திருமறை வாக்கியத்திலிருந்து ஸஹாபாக்கள் 'பத்ரு' யுத்தத்தின்போது, இறைவன் வழிபாட்டைப் பூரணமாகக் கடைப்பிடித்து, அவன்மீது தங்கள் முழுப் பொறுப்பையும் சாட்டியதால், பத்ருடையவர்களுக்கு இறைவனிடமிருந்து உதவி திண்ணமாகக் கிடைத்ததென்பது விளங்கும்.

தங்களுக்கு உதவிசெய்ய அல்லா(ஹ்) வாக்களித்திருப்பதாக நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

ஆண்டவன் முதலில் 1000-ம் மலக்குகளையும், பிறகு 3000-ம் மலக்குகளையும், அப்பால் 5000-ம் மலக்குகளையும் அனுப்பி முஃமீன்களுக்கு உதவி செய்ததாகச் சொல்லப்படுகிறது.

மலக்குகள் வெள்ளைத் தலைப்பாகை அணிந்து வந்திருந்தார்கள் என்றும், ஹல்ரத் ஜிப்ரயல் (அலை) அவர்கள் மட்டும், ஹல்ரத் 'சுபைர் இப்னு அவாம்' (ரலி) அவர்களைப்போல், மஞ்சள் தலைப்பாகை அணிந்திருந்தார்கள் என்றும், மிக்தாது (ரலி) அவர்கட்கு உண்டாகியிருந்த குதிரைபோன்ற ஒன்றின்மீது சவாரி செய்தார்கள் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

''(விசுவாசிகளே!) **அல்லா(ஹ்)வின் பாதையில்** (யுத்தம் செய்து) **வெட்டுப்பட்டோரை இறந்துவிட்டார்களென நீங்கள் ஒருபோதும் எண்ணவேண்டாம், அவர்கள் தம் இறைவனிடத்தில் நிச்சயமாக உயிரோடு இருக்கிறார்கள்.** (அன்றி) **அவர்களுக்கு ஆகாரமும் அளிக்கப்படுகிறது.''** **(3: 169)**

**''அல்லாஹ்; தன் அருளால் தங்களுக்கு அளித்தவற்றைக் கொண்டு அவர்கள் ஆனந்தம் அடைந்தவர்களாக இருக்கின்றார்கள்.** (அன்றியும் யுத்தத்தில் இறந்த) **தங்களுடன் சேராமல் தங்களுக்குப்பின்**

**(இந்த உலகில் உயிரோடு) இருப்பவர்களைப்பற்றி, ''அவர்களுக்கு எந்தவித பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்.'' என்றும் சந்தோசமடைந்தவர்களாகவும் இருக்கின்றனர்.''**

**''அல்லா(ஹ்)வின் (அருளினால்) தாங்கள் அடைந்த பாக்கியத்தைப் பற்றியும், மேன்மையைப் பற்றியும் ''நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளின் (நற்) கூலியை (ஒரு சிறிதும்) வீணாக்கி விடவில்லை'' என்றும் சந்தோசப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.''**

***(3: 171)***

இரசூல் நாயகத்தைப் பின்பற்றி, அல்லா(ஹ்)வுக்கு வழிபட்டு, மனிதனுடைய செயல்கள் அனைத்தும், அவனது நாட்டம் போலவே நடக்கின்றன என்று தவக்கல் வைத்து, இன்பங்களை வெறுத்து, துன்பங்களைச் சகித்து நடக்கும், முஃமீன்களின் சகல செய்பாடுகளிலும், அவர்களுக்கு இறைவனது உதவி ஒத்தாசை கிடைக்குமென்பதும், இப்படிப்பட்டவர்களே சிறந்த தியாகிகள் ஆவர் என்பதும், மேற்கண்ட திருவசனங்களிலிருந்து உறுதியாகின்றது.

## ஷுஹதாக்கள்

இவர்களுக்கு அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களில் ஒன்றான 'ஷஹீத்' (மனத்தால் தெரிசிக்கப்பட்டவன்(ர்) என்று அழைக்கப்படுகிறார்கள். 'இவர்கள் மரணிக்கவில்லை. நிச்சயமாக, உயிரோடிருக்கிறார்கள்.' என்று அல்லாஹ் கூறியதற்கேற்ப, யார்? யார்? அவர்களை மஹப்பத்து வைத்துத் தம்முடைய நாட்டம் தேட்டம் சித்திபெறவும், ஆபத்தான நிலைமைகளிலும் அழைக்கின்றார்களோ? அவர்களுக்குத் தங்கு தடையின்றி, அந்தக்கணமே தரிசனம் தந்து காரியச் சித்தியையும் நிறைவேற்றி, காக்கப்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டுண்டு ஷஹீதானவர்களுக்கு, அல்லாஹ் அளவுக்கதிமான மேல்பதவி (தரஜாக்)களை கொடுத்துக் கொண்டே இருக்கிறான். என்பதாக பரிசுத்த குர்ஆன் கூறிக்கொண்டே இருக்கிறது. அந்த வரிவைகளில் சில பின்வருமாறு:

1. அல்லாஹ்வுக்காக, பகைவரால் வதை செய்வதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது.
2. அவர்களைக் குளிப்பாட்டுவது 'ஹராம்'. இது அவர்களின் சரீரம் பரிசுத்தமுடையது என்பதை அறிவிக்கிறது.



3. இவர்களைத் தொழுவிப்பது 'ஹராம்'. இது அல்லாஹ் அவர்களை பிறருடைய துஆக்களை விட்டும் தேவையறச் செய்கிறான் என்பதை அறிவிக்கிறது.
4. இவர்களை இரத்தம் படிந்த உடையுடன் கபனிட்டு அடக்குவது.
5. அவர்களை மவுத்தானவர்கள் என்று எண்ணுவதை குர்ஆன் விலக்குகிறது.
6. இவர்களுடைய நப்ஸுகளை சுவர்க்கத்திற்குப் பகரமாக அல்லாஹ்வுக்கு விற்று, அதை அவன் வாங்கிக்கொண்டான் என்பதையும் குர்ஆன் கூறுகிறது.
7. சகலருடைய உயிர்களையும் மலக்குல் மவுத்து கைப்பற்றுகிறார், இவர்களுடைய உயிரை அல்லாஹ தானே நேரடியாகவே கைப்பற்றுகிறான்.
8. இவர்களுடைய உயிர்கள் மீண்டும் இந்த உலகிற்கு வந்து காபிர்களுடன் போரிட்டு வதைசெய்து, அவர்களின் வாளுக்கு ஆளாகி மரணமடைய ஆசிப்பதாக அல்லாஹ்விடம் மீட்சியைக் கேட்கிறது, எதற்கென்றால் பீஸபீலினுடைய இன்பத்தை மேலும் பெற்று மகிழ்வதற்காக வேண்டித்தான்.

**ஹதீது:-**

மவுத்தான (மற்ற)வர்களிடம் அல்லாஹு (ஜல்) கேட்பான் 'நீங்கள் உலகத்திற்கு மீளுகிறீர்களா? உங்களுக்கு நீண்ட ஆயுளைத் தருகிறோம் என்று. அதற்கு அவர்கள் ''இறைவா! அதற்குப் பின் ஆவது என்ன?'' என்று கேட்க, அதற்கு இறைவன் ''மறுபடியும் உங்களை மவுத்தாக்குவோம்'' என்று கூறுவான். இதைக் கேட்ட அவர்கள் திடுக்கிட்டு, 'மவுத்தென்னும் குடிப்பை ஒருதரம் குடித்த கசப்பின் கிரக்கம் எங்களைவிட்டும் நீங்கவில்லையே. மீண்டும் அந்தக்கசப்பைக் குடிக்கச் செய்யவேண்டாம்', எனச்சொல்லுவார்கள். (நபி மொழி)

9. ஷபாஅத்துக் கொடுக்கப்படும் கூட்டம் அடங்கலுக்கும் கியாமத்து நாளையில்தான் கொடுக்கப்படும். ஆனால், பீஸபீலில் ஷஹீதானவர்கள், ஷஹீதான நேரமுதல் கியாம நாள்வரையிலும், கியாமத்திலும் ஷபாஅத்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

10. ஸய்யிதுனா ஹுஸைன் (ரலி) அவர்களின் ஷஹாதத்தைப் பற்றி முன் வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு, மேல் கூறப்பட்டதில் நின்றும் 3-தரஜாக்கள் கூடுதல். (1) அநீதமாகக் கொல்லப்பட்டது. (2) தங்களுடைய பந்துக்களைவிட்டும் (பரதேசியாய்) போனது. (3) தீனுக்காக இறுதிவரை போராடி உயிரைத் தியாகம் செய்தது. இதற்காகவே இவர்களுக்கு 'ஷஹாதத்துல் உலமா' (வலுப்பமிக்க ஷஹாதத்து) எனச் சொல்லப்படும். மேலும் ஹதீதில்:- ஆகிரத்தில் பீஸபீலில் ஷஹீதானவர்களுடன், பத்துக் கூட்டத்தார் நன்மையான பதவியில் சேருவார்கள். அவற்றின் விபரம்:-

1. அநீதமாகக் கொல்லப்பட்டவர்கள்.
2. வபா என்னும் வாந்திபேதியினால் மரித்தவர்கள்.
3. மொளிகளில் குத்துத்தரிப்புகளுண்டாகி, அவைகளில் மரித்தவர்கள்.
4. பரதேசியாக (பந்துக்களை விட்டு)ப் போய் அனாதையாக மரித்தவர்கள்.
5. நெருப்பில் கரிந்து மரித்தவர்கள்.
6. நீரில் மூழ்கி மரித்தவர்கள்.
7. வீடுகள், சுவர்களின் இடிபாடுகளில் அகப்பட்டு மரித்தவர்கள்.
8. பாம்பு போன்றவைகளின் விஷக்கடியால் மரித்தவர்கள்.
9. பிரசவ வேதனையால் மரித்தவர்கள். (பிரசவ ருது தீருவதற்குள் மரித்தவர்களும் இதில் சேருவர்.)
10. கல்வி கற்றுக்கொண்டிருக்கும் காலத்திலும், 'இஷ்கு' என்னும் பேரின்பக் காதலிலும் மரித்தவர்கள். ஆகிய இந்தப் பத்துக் கூட்டத்தாருக்கும் ஷஹீதுகளுடைய நன்மைப் பயன்கிடைக்கும்.
(நா - வா)

இவர்களைக் கழுவி குளிப்பாட்டி, வேறு சுத்தமான கபனிட்டு, தொழுது (சட்டப்படி)தான் அடக்கவேண்டும்.

சமுத்திரத்தில் கப்பலில் மரித்தால், கபனிடுதல் முதல் சகல பர்ளுகளையும் நிறைவேற்றி, இரண்டு பலகை அல்லது இரண்டு கைத்தடிகள் வைத்துக்கட்டி கனத்தை வைத்துக் கடலுக்குள் இறக்கி விட வேண்டும்.



# 4-வது ஹத்யா
# திரு நபிக்கு வழிபட்டு, தீனுக்குச் செலவு செய்தல்

مَنْ يُّطِعِ الرَّسُوْلَ فَقَدْ اَطَاعَ اللّٰهَ ۚ

**''இரசூலுக்கு எவர் வழிபட்டாரோ? அவர் நிச்சயமாக அல்லாஹுவுக்கு வழிபட்டவராவார்.''**

''என்னை நேசிப்பவர் அல்லாஹுவை நேசித்தவராகின்றார்; எனக்குக் கீழ்ப்படிகின்றவர், அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தவரா கின்றார்.''
(நா - வா)

கீழ்ப்படிதலின் கருத்து: ஷரீஅத் (நபி பெருமானாரின் சொல்) தரீகத் (நபி பெருமானாரின் செயல்) ஹகீகத் (நபி பெருமானாரின் நிலை) மஃரிபத் (நபி பெருமானார் அடைந்த பேரின்பம்) இவற்றை நன்கு அறிந்து, அவர்கள்மீது பக்தியின் பேரால் காதல் கொண்டு ஒழுகுவதாகும்.

நேசிப்பதன் கருத்து: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த தீனுல் இஸ்லாத்தைப் பின்பற்றி, அதற்கு மாற்றமும், குறைவும் படுத்தாது, மென்மேலும் பெருகச் செய்ய இயன்ற அளவு முயற்சி எடுத்து, அல்லாஹுவின் பாதையில் பொருள் செலவு செய்வதுமாகும்.

**''அழகான முறையில் அல்லா(ஹ்)வுக்காகக் கடன் கொடுப்பவர் யார்? (அங்ஙனம் தீனுக்காகக் கடன் கொடுத்தால்) அதை அவன் அவர்களுக்குப் பலமடங்கு அதிகரிக்கும்படிச் செய்வான். அல்லாஹு (பொருளை, சிலருக்குச்) சுருக்கிப் பிடிப்பான். (சிலருக்குப்) பெருக்கிக் கொடுப்பான். அன்றி, அவனிடமே நீங்கள் மீண்டும் கொண்டு வரப்படுவீர்கள்.''**
(2: 245)

அல்லாஹு தேவையற்றவன். ஆதலால், அவன் நம்மிடம் வாங்கும்படியான தேவையுள்ளவனாகி விடவில்லை; ஆனால், அவனது சன்மார்க்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு, புண்ணியத்தை

நாடி நாம் நமது செல்வங்களைப் பிரித்துக் கொடுப்போமாயின்; அதற்குப் பதிலாக், அவன் இம்மையில் செல்வங்களைப் பெருகச் செய்கின்றான்: மறுமையில் நமக்குப் புண்ணியப் பலனைத் திரும்ப அளிக்கின்றான். இந்தக் கருத்தில்தான் அல்லாஹ்வுக்கு அழகான கடன் கொடுப்பவர் யார்?'' என்பதாக வினவப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்டவருக்கு இந்த உலகிலும், மறுவுலகிலும் இன்பப் பெருவாழ்வு கிட்டும்.

இது விஷயத்தில் மனிதர்கள் உலோபித்தனம் செய்யக் கூடாது என்பதையும், சன்மார்க்கத்திற்கு வேண்டிச் செலவு செய்வதால் தரித்திரத் தசை அடையமுடியாது என்பதையும், அல்லாஹு” நாடினால் ஒருவருக்கு அதிகமாகவும், ஒருவருக்குக் குறைவாகவும் கொடுப்பான் என்பதையும் திருமறை விளக்கியுள்ளது. அன்றியும்:

ஷரீஅத்தின் மூலம் ஒவ்வொரு மனிதன்மீதும் நான்குவிதக் கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை:-

1. அல்லாஹ்வுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமைகள்.
2. ஒருவனுக்குத் தன்மீதிருக்கும் கடமைகள்.
3. இதரர்களுக்கு அவன்மீதிருக்கும் கடமைகள்.
4. அவனுடை நன்மையைக் கருதி; அவன் வசம் ஆண்டவன் ஒப்புவித்திருக்கும் இதரப் படைப்புகளுக்கு அவன்மீதுள்ள கடமைகள்.

இந்தநான்கு கடமைகளையும் உணர்ந்து, அவற்றைச் சரியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தனது உடல், பொருள், ஆவி ஆகியவைகளைச் செலவிடுதல், ஒவ்வொரு உண்மை முஸ்லிமின் மீதும் கடமையாக இருக்கிறது. ஷரீஅத்தான இந்தக்கடமைகளில் ஒன்றைக்கூட விட்டுவிடாது, எல்லாவற்றையும் ஒன்றுபோல் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

ஷரீ அத்துச் சட்டப்படி ஜிஹாத் என்பதும், இஸ்லாத்தின் பாதுகாப்பு வகையைச் சேர்ந்ததாகும். ஜிஹாத் என்னும் பதத்திற்கு, மார்க்கத்தைப் பாதுகாப்பதில் தன்னுடைய கடைசிப் பலத்தை உபயோகிப்பது என்பது பொருள். இந்தக்கருத்தின்படி ஒருவன் தன்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றினாலும், முழு மூச்சோடு ஆண்டவனுடைய பெயரை ஓங்கச் செய்யப் பாடுபடுவானாயின், அதுவே ஜிஹாத் ஆகும். ஆயினும் ஜிஹாத் என்னும் பதமானது உலக



சம்பந்தமான நோக்கு யாதுமின்றி, இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக செய்யப்படும் புனிதப் போராட்டத்திற்குச் சிறப்பாக உபயோகிக்கப் பட்டு வருகிறது; இத்தகைய போரானது ஷரீஅத்துச் சட்டப்படி 'பர்ளு கிபாயா' முஸ்லிம்கள்மீது பொதுக் கடமையாக இருக்கிறது.

(நபியே! நீர் கூறும்.) **நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில்** (தாராளமாகச்) **செலவு செய்யுங்கள். தவிர** (ஜிஹாது போன்ற சமயத்தில் செலவு செய்யாது) **உங்களை, நீங்களே ஆபத்திற் குள்ளாக்கிக் கொள்ளா தீர்கள். அன்றி** (பிறருக்கு நலவை உணர்த்தி) **நன்மையும் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ்** (பிறருக்கு) **நன்மை செய்வோரை நேசிக்கிறான்.** **(2 - 195)**

தற்போது முஸ்லிம்களின் மத்தியில் ஹராமான பேச்சுகளைப் பேசுவதும், பண்பாடற்ற செயல்களைச் செய்வதும், மிகவும் மலிந்துவிட்டன. ஹராமைப் பேணுகிறவர்களையும், அதனைக் கண்டிக்கிறவர்களையும் நையாண்டி பண்ணுவதும், கேவலமாக நினைப்பதும் வழக்கமாகிவிட்டது. இந்த நிலையில் 'ஹலால்' 'ஹராமை'ப் பேணி நடப்பதும், ஏவல் செய்வதும் 'ஜிஹாது' என்னும் நிலையிலிருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் விட்டுப்போன ஒரு சுன்னத்தை எடுத்து நடத்துபவருக்கு, நூறு ஜிஹாது (ஜிஹாதில் இறந்தவர்)களின் பலன் கிடைக்குமென்று பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள்.

மேற்கூறிய நான்கு ஹத்யாக்களுமே, சுவனத்ததிபர் ரிள்வான் (அலை) அவர்களுக்குரியனவாகும்.

## 6-வது தகுதியாளர் ஸிராத் (பாலம்)

**14**

முஃமினான பேர்க் குதவிப்பாடும்
　　முனியும் கோபத்தை அடக்குதலும்
நேமிக்கப்பட்ட ஜும்அத் துக்கும்
　　நேக்கு ஜமாஅத்துக் கேகுதலும்
ஆமில் முப்பதாயிரம் வருடத்
　　தடிபாடுள பாலம் ஸிராத்துக்கென்றே
ஹாமீம் முஹம்மது கவலலுற்றார்
　　ஹத்யா இதுகள்தாம் வாஜிபெறன்றே.

**அரும்பதவுரை:-**

முஃமின் = விசுவாசி. முனிவு = வெறுத்தல். ஜும்அத் = ஜும்ஆத் தொழுகை. நேக்கு = நல்ல. ஜமாஅத் = கூட்டுத் தொழுகை. ஆமில் = வருடம். ஸிராத்து = நல்வழி. வாஜிப் = கட்டாயம்.

### ஸிராத் (பாலத்)தின் விளக்கம்

إِنْ مِّنكُمْ إِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلَىٰ رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا ۝

**“உங்களில் எவருமே (பாலத்தின் வழியே) நரகத்தைக் கடக்காது தப்பிவிட முடியாது; இது உமது இறைவனிடம் முடிவு செய்யப் பெற்ற மாற்றமுடியாத தீர்மானமாகும்.”**

மேற்சொல்லப்பட்ட பாலம் ‘ஜஹன்னம்’ என்னும் நரகத்தின் மேலுள்ளது; உரோமத்தைப் பார்க்கினும் மென்மையானது; வாளைக் காட்டினும் கூர்மையானது; மக்கள் எல்லோரும் அதனைக் கடந்துசென்று அக்கரையிலுள்ள சுவனபதியில் சேர்தல் வேண்டும். இதற்கே ‘ஸிராத்’ என்று பெயர். இதை ‘ஸிராத்துதல் முஸ்தகீம்’ என்றும் கூறுவதுண்டு.

எவர் இந்த அகிலத்தில் ‘ஸிராத்துல் முஸ்தகீம்’ நேரான வழியில் சறுகாது நடந்தாரோ? அவரே, அந்த ஸிராத்தின்மீது இலகுவாய் நடந்து செல்வார். நேர்வழியைப் பின்பற்றாதவன், அதன்மீது நடந்து செல்ல முடியாமல் நரகில் வீழ்வான்.



“ஒவ்வொரு முஸ்லிமும் தாம் தாம் செய்த வணக்கத்தின் பலனுக்குத் தக்கபடி, பாலத்தின்மேல் செல்வார்கள். சிலர் பலஹீனத்தால் தத்தளித்து உடலில் காயம்பட்டு நடப்பார்கள். சில முஸ்லிம்கள் இறைவன் விதிப்படி நடக்காத காரணத்தால், கால் சறுகி, அந்த ‘ஜஹன்ன’மாகிய நரகத்தில் விழுந்து, தமது குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்று, பின்னர் மீட்சி பெறுவார்கள். “அவிசுவாசிகள் அந்தப் பாலத்தை அறவே கடக்க முடியாமல் முகங்கவிழ எரி நரகத்தில் விழுந்து, முடிவில்லாத வேதனைக் காளாவார்கள்” என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக்கொடிய வேதனையிலிருந்து உயிரையும் உடலையும் காப்பதற்குக் கீழே சொல்லப்படும் நான்குவித வணக்க ஒழுக்கங்கள் சம்பந்தமான ஹத்யாக்களைக்கொண்டு செல்ல வேண்டியது ‘வாஜிபு’ (கட்டாயம்) என நபிகள் நாயகம் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

### ஸிராத் (பாலத்) திற்குரிய ஹத்யாக்கள் நான்கு

**1-வது ஹத்யா**

**முஃமின்களுக்கு உதவி புரிதல்**

لَقَدْ مَنَّ اللَّهُ عَلَى الْمُؤْمِنِينَ

**“அல்லாஹுத்த ஆலா முஃமினானவர்கள்மீது திட்டமாக உபகாரம் செய்திருக்கிறான்.”**

**“மெய்யான விசுவாசிகள் யாரென்றால்? அல்லாஹ்வுடைய திருநாமம் (அவர்கள் முன்) கூறப்பட்டால், அவர்களுடைய இருதயங்கள் பயந்து நடுங்கிவிடும்; அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், அவர்களுடைய விசுவாசம் இன்னும் அதிகரிக்கும்; அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள். அவர்கள் தொழுகையையும் கடைபிடித்தொழுகுவார்கள்; நாம் அவர்களுக்குக் கொடுத்த பொருளிலிருந்து செலவு செய்வார்கள்; இத்தகையோர்தான், மெய்யான விசுவாசிகள். அவர்களுக்கு, அவர்கள்**

**இறைவனிடத்தில், பல உயர் பதவிகளும், மன்னிப்பும் உண்டு; அன்றி கண்ணியமான ஆகாரமும் உண்டு.''** *(8: 2-3-4)*

இறைவனால் வர்ணித்துக் கூறப்பட்ட இந்தத்தன்மையான முஃமின்கள், இரவும் பகலும் ஹக்கின் பாதையிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள் - உலக ஆசாபாசங்களை வெறுத்துத் தள்ளுகிறார்கள். இந்தக் காரணத்தால் அவர்களுக்கு உலகில் பல இடைஞ்சல்களுண்டாகின்றன. எனினும், அவற்றை அவர்கள் பொருட்படுத்துவதுமில்லை; சந்தோச நிகழ்ச்சிகளால் அவர்கள் மகிழ்வதுமில்லை. ஏன்? அவர்கள் தங்கள் காரியம் யாவற்றையும் அல்லாஹுவின்மேல் சுமத்திவிடுகிறார்கள். அவன் ரஹீமாக (முஃமின்களுக்கு) பிரத்தியேகமாய் அருள்புரிபவனாக இருக்கிறான். ஆதலால், இவர்களே சன்மார்க்கத்தில் நம் உடப்பிறப்புகள் ஆவர் என்று உணர்தல் வேண்டும்.

''முஃமினானவர் எப்பொழுதும் சுகத்தையே அனுபவிக்கிறார். ஏனெனில், அவருக்குச் சுகமான காரியம் நிகழும்போதும், மகிழ்ச்சியால் ஆண்டவனைச் சிந்தித்து வந்திருக்கின்றார். ஆனால் துக்கமான காரியம் நிகழும்போதும், அந்த ஆண்டவனையே சிந்தித்து, அந்தத் துன்பத்தைப் பொறுத்துக்கொள்கின்றார்; ஆகவே ஒரு முஃமினுக்கு எல்லா விதத்தாலும் நன்மையே கிடைக்கிறது.''

*(நா - வா)*

## ஓர் உண்மை விசுவாசியின் உள்ளம்

புகாரா என்ற ஊரில் தாபித் என்ற ஆபிது ஒருவர் வசித்து வந்தார். (அவர் வணக்கவாளி) ஒருநாள் அந்த ஊர் ஆற்றங்கரையில் உட்கார்ந்து ஒளுச்செய்து கொண்டிருக்கும்போது, சேபு (ஆப்பிள்) பழம் ஒன்று தண்ணீரில் மிதந்துவர, அதை எடுத்துக் கொஞ்சம் புசித்தார். உடனே நாம் புசித்தது ஹலாலா? ஹராமா? இறுதி நாளில் இதுபற்றி இறைவன் கேள்வி கேட்டால், என்ன பதில் கூறுவது? என்ற அச்சம் ஏற்பட்டு மனவேதனைப்பட்டு அந்தப்பழத்துடன், அது வந்த வழியாகவே ஆற்றோரமாய் நடந்து, கரையோரமுள்ள தோட்டத்தில் புகுந்து, தோட்டக்காரனிடம் ''இந்தக்கனி ஆற்றின் வழியாக வந்தது; அதைச் சற்றும் யோசிக்காமல் கொஞ்சம் புசித்துவிட்டேன்; அதனால், தாங்கள் அதை ஹலால் செய்யவேண்டும்'' என்று பணிவுடன் வேண்டினார்.



அதற்கு அங்கிருந்தவர் இந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர் கூபா நகரவாசி. அவர் தற்போது பல்கு என்ற ஊரில், இதுபோன்று ஒரு தோட்டமுண்டு; அங்கு சென்றிருக்கிறார். அங்கு போய், அவரிடம் கூறுங்கள்'' என்று சொல்லவே, ஆபிது மனம் வருந்தி, அந்நியரின் உரிமையை அனுமதியின்றி அனுபவித்த குற்றத்திற்காக நாம் நரகம் புகுவது நல்லதா? அன்றி தூரத்தையும் சிரமத்தையும் பாராமல் பல்குக்குப் போய், அவரது மன ஒப்புதலைப் பெறுவது நல்லதா? என்று தன் மனத்தோடு போராடி, முடிவாக சொந்தக்காரரிடம் ஹலால் தேடுவதுதான் நல்லது என்று முடிவுசெய்து, பல்குக்குச் சென்று தோட்டச் சொந்தக்காரரைக் கண்டு நிகழ்ந்த சம்பவத்தை விபரமாகக் கூறி, ''இந்தப் பழத்தில் கொஞ்சம் புசித்ததற்காக, அதைத் தனக்கு ஹலால் சொல்லி விடுங்கள்'' என்று பணிவுடன் கேட்டனர். அந்தத் தோட்டக்காரர் வியப்படைத்து, தானாக நீரில் மிதந்து வந்த ஒரு பழத்தில் கொஞ்சம் தின்றதற்காக கஷ்டத்தையும், சிரமத்தையும் பாராமல் புகாராவிலிருந்து வந்த இவர், அல்லாஹுவின் பாதையில் பேணுதலுள்ள உண்மை முஸ்லிமாக இருத்தல் வேண்டுமென் றெண்ணி, அவரை மிகவும் அன்புடன் உபசரித்து, ''அந்தத் தோட்டம் எனது மகளுக்குச் சொந்தமானது; விபரத்தை அவளிடம் கூறினால், ஹலால் ஆக்கித்தருவாள்;'' என்று கூறி அவளிருக்கும் ஊராகிய கூபாவிற்கு அவரைக் கூட்டிச்சென்று, தன் மனைவி மக்களிடம், அவர் வந்திருக்கும் விபரத்தைக் கூறினார். மேலும், இந்த மனிதர் அல்லாஹ்வுக்குப் பயந்த தக்வா உடைய ஓர் உண்மை முஃமின்; பரிசுத்த இருதயமுடையவர்; இவருக்கே நமது மகளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று கூறவும், அவர் மனைவி, கணவன் சொல்லைத் தட்டாது சம்மதித்தாள்.

பின்னர், அந்த ஆபிதிடம் ''நீங்கள் தின்ற சேபுப் பழத்தை ஹலால் சொல்ல வேண்டுமானால், என் மகளை நீங்கள் நிகாஹ் - திருமணம் செய்துகொள்ள வேண்டும்; அவளுக்கு மூன்று குறைகள் இருக் கின்றன. (1) கண் தெரியாது. (2) காது கேளாது. (3) கைகால் முடம், என்று கூறினர். இதனைச் செவியுற்ற ஆபிது மிகச் சஞ்சலப்பட்டு, தன் மனத்துடன் போராடி, மறுமையில் நரக வேதனையை அனுபவிப் பதிலும், இந்த உலகில் ஏற்படும் கஷ்டங்களை அனுபவித்து மடிவது மேல் என்று முடிவு செய்து, சம்மதித்து விவாகம் செய்து கொண்டார். விவாகத்திற்குப் பின் பெண்ணின் வடிவத்தைக் கூர்ந்து கவனித்த ஆபிது, அவளது பேரழகையும், குறைவற்ற அங்கங்களையும் கண்டு

அதிசயப்பட்டு, பெண்ணின் தந்தையிடம், ''தாங்கள் சொல்லியது போல் உங்கள் மகளுக்கு எந்தவிதக் குறைவுமில்லையே! தாங்கள் அவ்வாறு கூறக் காரணம் யாது?'' என்று வினவினார். அதற்கவர் நான் கூறியது முற்றிலும் சரியே, என் மகள் ஒருபோதும் ஹராமான பார்வையில் கண்களை உபயோகித்தது கிடையாது. அதனால் அவளுக்குக் கண் தெரியாது என்றேன்; ஹராமான விசயங்களைக் காதால் கேட்டிராத காரணத்தால், செவிடு என்றேன்; விரும்பத்தகாத விசயங்களுக்குப் போகாமலும், அதைச் செய்யாமலும் இருந்தபடியால், கைகால் நொண்டி என்றேன்'' என மொழிந்தனர். இதைக் கேட்ட ஆபிது மகிழ்ச்சியடைந்து இறைவனை வாழ்த்தினர்.

இந்தச் சம்பவத்தைப் படித்த விசுவாசிகளே! ஹராமான உணவை ஒழிப்பதில் எவ்வளவு கண்டிப்பாக அன்றைய முஸ்லிம்கள் இருந்தார்கள் என்பதை உணர்ந்து, நாமும் இயன்ற வரை அல்லாஹுவைப் பயந்து பேணி நடக்க, இறைவனிடம் பாதுகாவல் தேடுவதோடு, இப்படிப்பட்ட பெரியார்களின் நற்பழக்கவழக்கங் களை நன்கறிந்து, அவர்களைக் கௌரவித்து, நம்மாலான உதவியும் புரிதல் வேண்டும். பொருளால் உதவ முடியாதவர்கள், அன்புநிறைந்த வார்த்தைகளால் அவர்களை சந்தோசப்படுத்துதல் வேண்டும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்துகள் மீது மஹப்பத்து - பிரியம் வைப்பது, அவர்களுக்காக அடிக்கடி துஆச் செய்வது, வியாதியத்தர்களைப் பார்ப்பது, மையத்துடன் செல்லுவது, அன்பாகப் பழகுவது ஆகியவையும் சின்னஞ்சிறு குற்றங்களுக்காக அவர்களை கோபப்படாமலும், காபிர் என்று ஏசாமல் இருப்பதும் அவசியமாகும். இந்தக் குணங்கள் யாரிடம் அளவு கடந்து ஏற்படுகிறதோ, அவர்களே 'விலாயத்' தின் படித்தரத்தை அடைந்து, அவ்லியாக்களாவர் எனக் கூறப்படுகின்றது.

''ஒரு மனிதன் தனது முஃமினான சகோதரனுக்காக அல்லாஹுத் தஆலாவிடம் ஒரு முறை 'துஆ'க் கேட்டால், அவருடைய தலைக்குப் பின்னால் ஒரு மலக்கு இருந்துகொண்டு, 'உமக்கும் அந்த 'துஆ'வின் பலன் அப்படியே கிடைக்கட்டும் என்று 'துஆ'ச் செய்கிறார்'. (நா.வா)

''ஒரு முஃமினுடைய நாட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, பகலிலாவது, இரவிலாவது ஒரு சாஅத் நேரம் நடப்பானாயின், அந்த



நாட்டம் நிறைவேறினும் சரி, நிறைவேறாவிட்டாலும் சரி, அந்தக் கொஞ்ச நேரத்திய நடையானது, இரண்டு மாதம் பள்ளியில் 'இஃதிகாபு' இருப்பதிலும் மிகச் சிறந்ததாகும்.'' ''துன்பத்தில் ஆழ்ந்த ஒருவனுக்கு சந்தோசத்தை ஒருவன் உண்டுபண்ணுவானாயின், அல்லது கொடுமையில் அகப்பட்ட ஒருவனை அதைவிட்டும். விடுவிப்பானாயின், அல்லாஹ் அவனுக்கு எழுபத்துமூன்று மன்னிப் புகளை அருள்வான்.'' (நா - வா)

## 2-வது ஹத்யா
## கோபத்தை அடக்குதல்

وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ

**''கோபத்தை மென்று விழுங்கியவர்களுக்கும், மனிதர்களின் குற்றத்தைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கும், நாம் சுவர்க்கத்தைச் சித்தமாக்கி வைத்திருக்கிறோம்.''**

''கோபம் ஈமானைக் கெடுத்துவிடும்; கரியபவளம் தேனைக் கெடுப்பதுபோல். அன்றியும் கோபம் ஷெய்த்தானுடைய குணமாகும்; ஷெய்த்தான் நெருப்பால் படைக்கப்பட்டவன். நெருப்பை அணைத்து விடுவது தண்ணீர். ஆகவே கோபம் வரும்போது **'அஊது பில்லாஹி மினஷ் ஷெய்த்தானிர் ரஜீம்'** என்று ஓதி ஒளுச்செய்து கொள்ளுங்கள்; அப்பொழுது கோபம் மாறிவிடும்.'' (நா - வா)

கோபமானது கெட்ட குணங்களில் ஒன்றாகும். இதனைக் கொஞ்ச நேரப் பைத்தியமென்று, பல அறிவாளிகள் கூறுகின்றனர். கோபம் மனத்தில் நின்றும் தோன்றுவதால் ஏற்படும் புண் மனதினுள்ளேயே இருக்கும். அக்கினியானது ஷெய்த்தானைச் சேர்ந்ததாக இருக்கிறது. இதற்குச் சான்றாக, ''என்னை நெருப்பால் படைத்தாய், ஆதமை மண்ணினால் படைத்தாய்'' என்று இப்லீஸ் சொல்லியதாக 'அல்லாஹ்' குர்ஆனில் கூறுகிறான். நெருப்பின் குணம் அடக்கமும் அமைதியுமற்ற தன்மையாகும். மண்ணுடைய குணம், அடக்கமும் அமைதியுமாகும். கோபம் அதிகமுடையவனுக்கு உலகத் தந்தை ஆதம் (அலை) அவர்களுடனிருக்கிற தொடர்பைவிட, ஷெய்த்தானுடனிருக்கிற தொடர்பே அதிகம் எனச்சொல்லலாம். இதனாலேதான்:-

இபுனு உமரு (ரலி) அவர்கள் ரசூல் (ஸல்) அவர்களிடத்தில், ''யாரசூலல்லாஹ்! என்னை அல்லாஹுவின் கோபத்திலிருந்து நீக்குகிற ஒரு பொருள் எது'' என்று வினவியபோது ''நீர் கோபப் படாமல் இருப்பதே அது'' என்று மறுமொழி பகர்ந்தார்கள்.

'' எவன் ஒருவன் தன்னைவிட்டும் கோபத்தை நீக்கி விடு கிறானோ? அவனைவிட்டும் இறைவன் அதாபை (வேதனையை) விலக்குவான். யாரேனும் தன்னுடைய ரப்பிடத்தில் பாவ மன்னிப்புத் தேடினால், அதை இறைவன் ஏற்றுக் கொள்வான். எவனாவது தன் நாவைப் பேணுவானாயின், இறைவன் அவனது மானத்தைக் காப்பாற்றுவான். கோபம் மூட்டப்பட்ட ஒருவன், அதை அடக்கி விட்டால், அவன்மேல் இறைவனின் பிரியம் வாஜிபாகிவிட்டது ; கோபத்தை அடக்கியவனுடைய இருதயத்தைச் சாந்தம், ஈமான் இவற்றால் நிரப்புகின்றான்.'' (நா-வா)

ஆண்மை என்பது குஸ்திச்சண்டை செய்தல் அன்று. கோபம் வந்த சமயம் தன்னைத்தானே அடக்கி வைப்பதே ஆண்மை. (மிஷ்காத்)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒருசமயம், போர்க்களத்தில் ஒரு எதிரியோடு மல்லாடுவதற்கு நேரிட்டது. முடிவில் அவர்கள் பகைவனைக் கீழேத் தள்ளி, அவனது நெஞ்சின்மேல் உட்கார்ந்து கொண்டு, அவனது கழுத்தின் பக்கம் வாளை ஓங்கினார்கள். அவன் அவர்களது முகத்தில் துப்பினான். உடனே அவர்கள், அவனது நெஞ்சிலிருந்து கீழே இறங்கி நின்றுவிட்டார்கள். அதைக்கண்ட பகைவன் வியப்படைந்தவனாக எழுந்து நின்று, ஹஸ்ரத் அவர்களிடம், தன்னை வெட்டாது விட்டுவிட்ட காரணத்தை வினவினான். அதற்கு அவர்கள் ''ஏ, என் விரோதியே! நான் அல்லா(ஹ்)வுக்கு வேண்டிப் போர் புரிந்து, உன்னை வென்றேன்; வெற்றியின் கடைசிக் கட்டத்தில் நீ என் முகத்தில் எச்சில் துப்பி விட்டாய்! அஃதனால் எனக்குக் கோபம் மூண்டது. அதே கோபத்தில் உன்மீது வாள் பிரயோகம் செய்வேனாயின், அல்லா(ஹ்)வுக்கு வேண்டியல்லாது, என் கோபத்திற்காக வேண்டியே உன்னை வெட்டியவன் ஆவேன். அதனால்தான் உன்னை விட்டுவிட்டேன்'' என்று விடை கூறினார்கள்.

இதுகேட்ட எதிரி இஸ்லாத்தின் தூய்மையையும் உன்னதத் தையும் அறிந்து, உடனே இஸ்லாத்தைத் தழுவி விட்டான். இத்தகைய நேர்மையான செய்கைகளால் எத்தனையோ சந்தர்ப்பங்களில் சேனாதி பதிகளும், அவர்களுடைய சேனைகளும் இஸ்லாத்தைத் தழுவி



யுள்ளார்கள். இதிலிருந்து கோபத்தை அடக்குவது அல்லா(ஹ்)வுக்குப் பொருத்தமான காரியம் என்பது புலனாகின்றது.

## 3-வது ஹத்யா
## ஜும்ஆத் தொழுகைக் கேகுதல்

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ
فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ ۚ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ
تَعْلَمُوْنَ ○ فَاِذَا قُضِيَتِ الصَّلٰوةُ فَانْتَشِرُوْا فِى الْاَرْضِ وَابْتَغُوْا
مِنْ فَضْلِ اللّٰهِ وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ ○

**''விசுவாசிகளே! வெள்ளிக்கிழமையன்று ஜும்ஆத் தொழுகைக்காக (பாங்கு சொல்லி) நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டொழித்து அல்லாஹுவை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள், அறிவுடையோராக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நன்று'' (இதனை நீங்கள் அறிந்துகொள்வீர்களாக!) ''ஜும்ஆத் தொழுகை முடிவு பெற்றால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் சென்று அல்லாஹுவினுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள்; நீங்கள் சித்தியடையும் பொருட்டு, அடிக்கடி அல்லாஹுவின் திரு நாமத்தை தோத்திரம் செய்யுங்கள்.''**

இரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருசமயம் ஜும்ஆவில் 'குத்பா'ப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். அது சமயம் திஹ்யதுல் கல்பி (ரலி) அவர்களுடைய வியாபார ஒட்டகங்கள் ஷாமி லிருந்து வந்து சேர்ந்தன. வர்த்தகப் பிரயாணிகளின் வருகையை அறி வித்து முரசு அடிக்கப்பட்டது; மக்கள் சந்தோசத்தால் எழுந்து போய் விட்டார்கள். பின்னர் பள்ளி வாசலில் 12 பேருக்கு மேல் யாரும் இருக்க வில்லை. அவர்கள், அஷ்ரதுல் முபஷ்ஷிராக்களான பத்து பெயர் களும், 'ஜஃபரிப்னு அப்துல்லாஹ், அம்மாரிப்னு யாஸிர்' என்ற இரு வரும் ஆக பன்னிரெண்டு பெயர்களே இதைக் குறித்து இறைவன்:-

(நபியே! சில மனிதர்கள்) **''அவர்கள் யாதொரு வர்த்த கத்தையோ, அல்லது வேடிக்கையையோ கண்டால் (குத்பா ஓதும்)**

**உம்மை (தனியாக) நிறுத்திவிட்டு அதனளவில் சென்றுவிடுகின்றனர். (ஆகவே நபியே! அவர்களை நோக்கி) நீர் கூறும்; அல்லாஹுவினிடத்தில் உள்ளது இந்த வர்த்தகத்தையும், வேடிக்கையையும்விட மிக்க மேலானதாகும், அன்றி ஆகாரமளிப்போரிலும் அல்லாஹு மிக்க மேலானவன்.''**

***(63: 11)***

இரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருந்த பன்னிருவர்களையும் நோக்கி, ''என் உயிர் யார் வசம் இருக்கிறதோ? அந்த ஆண்டவன்மீது ஆணையாக, நீங்கள் இந்த இடத்தில் இருக்காமல் போயிருந்தால், அந்த ஓடக்கரை (வியாபாரத்தலம்) நெருப்பால் எரிக்கப் பட்டுப் போயிருக்கும்.'' என்று கூறினார்கள்.

## ஜும்ஆத் தொழுகையின் வரிசை

நமக்கு அல்லாஹுவினிடம் இருந்து அழகிய சன்மார்க்கத்தைக் கொணர்ந்து கொடுத்த நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்துக்களாகிய நாம், ஏகப் பரம்பொருளாகிய அல்லாஹுவை அதிகம் தியானித்து வணங்குவதற்கென்று பிரத்தியேகமான சில காலங்களையும், நேரங்களையும் அல்லாஹு, ரசூல்(ஸல்) அவர்களால் எடுத்துக் காட்டப் பட்டுள்ளோம். இவற்றுள் வெள்ளிக் கிழமை ஓர் புனித நாளாகும். இந்தநாளில் ஜும்ஆத் தொழுகையை மிக முக்கியமான ஓர் அருட்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அமரர்கள் ஒன்றுகூடி, அல்லாஹுவைப் பல வகையாலும் வணங்கி, தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பதைத் தெரிந்த, பூர்வகாலத்து நபிமார்கள் (அலை), அந்தநாள் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இறைவன்பால் வேண்டிக்கொண்டனர். அதற்கு இறைவன் ''அந்தநாள் எனது ஹபீபு இரசூல் (ஸல்) அவர்களுக்காக வேண்டி பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றது.'' எனக் கூறிவிட்டான். (பின்னர்)

**'மூஸா நபி'** (அலை) அவர்களுக்கு சனிக்கிழமையையும்,

**'ஈஸா நபி'** (அலை) அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையையும்,

**'இப்ராஹிம் கலீல்'** (அலை) அவர்களுக்கு திங்கட்கிழமையையும்,

**'சகரிய்யா நபி'** (அலை) அவர்களுக்கு செவ்வாய்க்கிழமையையும்,

**'எஹ்யா நபி'** (அலை) அவர்களுக்கு புதன்கிழமையையும்,

**'ஆதம் நபி'** (அலை) அவர்களுக்கு வியாழக்கிழமையையும்,



புனித வணக்க நாட்களாகக் கொடுத்தருளி, ''அந்த நாட்களை கண்ணியப்படுத்தி, இறைவனைத் தொழுது பிரார்த்தித்தல் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்'' என அல்லாஹு கட்டளையிட்டிருந்தான். அந்தக் கட்டளைக்கிணங்கவே, அந்தந்த நபிமார்களும், அவர்களைப் பின்பற்றி ஒருவர்பின் ஒருவராக தொடர்ந்து வந்து கொண்டிருந்த 313 முறுசல்களும், அன்னாரின் பக்தர்களும், அந்தப் புனித தினங்களைப் பெருநாளென மதித்து, கிழமை தவறாது ஆண்டவனை முற்றிலும் பணிந்து தலைசாய்த்து வணங்கி வந்தனர். (ஆனால்)

நபி பெருமான் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்துக்களாகிய நமக்கு, ஹிஜ்ரத்திற்குச் சற்று முன்பாக திரு மக்கா நகரில் வைத்து வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையை இறைவனால் கடமையாக அருளப்பட்டது. அது சமயம் கூடித்தொழ மக்கள் இல்லாததாலும், குரைஷிக் குப்பார்களின் கெடுதல்கள் மிகைத்த காரணத்தாலும், ஸஹாபாக்கள் தங்கள் தங்கள் இல்லங்களிலேயே இந்தத் தொழுகையை நடத்தி வந்தனர். மதீனா வாசிகளும் இதே முறையைக் கைக்கொண்டனர். சில நாட்களுக்குப்பின், மதீனா வாசியான 'அஸ்அத் இப்னுஸுராரா' என்ற பெரியார், ''இந்த மகத்தான தொழுகையை வீட்டில் வைத்து மறைமுகமாக நடத்துதல் சரி அல்ல.'' என்று மதீனாவிற்குச் சற்று அப்பாலுள்ள 'பகீஹுல் ஹுதமா' என்ற சிற்றூரில், எல்லா ஸஹாபாக்களையும் ஒன்று கூட்டி, 'ஜும்ஆத் தொழுகை' (கூட்டு வணக்கம்) என்ற பெயரோடு தொழுகையை நடத்தி வந்தனர்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத்துச் சென்ற போது, அங்கு நடத்தப்படும் ஜும்ஆத் தொழுகையைக் கண்டு மகிழ்ந்து, குத்பாப் பிரசங்கத்திற்குப் பின், இமாம் ஜமாஅத்தாகத் தொழுவதை மஸ்ஜிதில் வழக்கமாக்கினார்கள். இந்தப்புனித நாளின் மகாத்மியத்தைப் பற்றி நபி பெருமானார் (ஸல்) அவர்களின் பொன் மொழிகளில் சில:-

**''அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு ஜும்ஆவுடைய நாளிலும், ஆறு லட்சம் அடியார்களை நரகத்தில் நின்றும் விடுவிக்கின்றான்.''**

**''ஒவ்வொரு நாளும் சூரியன் நடுவானத்தில் வரும் போது, நரகமானது எரிக்கப்படுவதால், நீங்கள் அந்த வேளையில் தொழ**

வேண்டாம்; ஆனால் ஜும்ஆவுடைய நாளில் மாத்திரம் அவ்வாறு எரிக்கப்படுவதில்லை.''

''பட்டணங்களில் மக்கா ஷரீபையும்; மாதங்களில் ரமலானையும், நாட்களில் வெள்ளிக்கிழமையையும், அல்லாஹு சிறப்பாக்கி வைத்திருக்கிறான். ஜும்ஆவுடைய நாளில் ஒருவன் அவனது கடமைகளையெல்லாம் சரிவரச் செய்வானாயின், அவனுக்கு மற்ற நாட்களெல்லாம் ஸலாமத்தாக இருக்கும்.'' இன்னும்:-

''அந்த நாளில் பறவை இனங்கள் ஒன்றோடொன்று இணைந்து 'ஸலாமுன், ஸலாமுன், யவ்முன், ஸாலிஹுன்' - ஈடேற்றம், ஈடேற்றம், இது ஸாலிஹான நாள் எனச் சொல்லிக் கொள்கின்றன. ஆகவே, நீங்கள் ஒவ்வொரு முஸ்லிமும் ஜும்ஆவுடைய நாளில் மஸ்ஜிதுகளுக்குப் போய், இறைவணக்கத்தை நிறைவேற்றியதும், ஒருவருக்கு ஒருவர் முஸாபஹா செய்து கொள்வது, இருதய சுத்தத்திற்கும் ஐக்கியத்திற்கும் ஏதுவாகும்.''

''இந்த உலகில் ஜும்ஆவுடைய நாளைவிடவும் மேன்மையான நாள் யாதொன்றுமில்லை. அந்த நாளில் மனிதர்களையும் - ஜின்களையும் தவிர, மற்றும் படைப்புகளெல்லாம் 'கியாமத்' (இறுதி) நாள் வந்துவிடுமோ என்று பயந்து திடுக்கமுறுவார்கள்.'' இன்னும்:-

''ஒவ்வொரு பள்ளிகளிலும், குத்பா நாளன்று, ஒவ்வொரு வாசலின்மீதும் இரண்டு மலக்குகள் நின்றுக்கொண்டு, வருபவர்களில் முந்தி வருபவருக்கும், பிந்தி வருபவருக்கும் தராதரப்படி ஒட்டகை, மாடு, ஆடு, பறவை, முட்டை இவைகளை ஜக்காத்துக் கொடுத்த பலனை, இந்த ஐந்து நேரத்தவருக்கும் எழுதிவிட்டு, இமாம் மின்பரில் உட்கார்ந்தவுடன் பட்டோலையைச் சுருட்டிக் கொண்டு, குத்பாவைக் கேட்க வருவார்கள். (நா - வா)

சொர்க்கலோகத்தில் 'குத்துபுல் விவா' என்று கஸ்தூரியாலான பெரிய மணல் வெளியுண்டு. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் சொர்க்கவாதிகள் அதாவது:- ஜும் ஆத் தொழுகையை பேணுதலாக நிறைவேற்றுபவர்கள், அங்கே அழைத்துச் செல்லப்படுவார்கள். சற்று நேரம் சுகம் அனுபவித்தபின், அல்லாஹுத் தஆலா அங்கே அவர்களுக்கு, அவரவர் நாடிய விதத்தில் திருக்காட்சியை அருள்வான். அதைக் கண்டு ஆனந்தித்து விட்டு, அவரவர்களின் சொர்க்க மாளிகைக்கு திரும்ப வந்து கொண்டிருப்பர். அதன் அருகேயுள்ள



பாதைகளில் 'ஹூருல் ஈன்' என்ற அழகிகள் அமர்ந்து, அழகிய தொனியில் 'குர்ஆன் ஷரீப்' ஓதிக் கொண்டிருப்பார்கள். சொர்க்க வாதிகள் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பெண்களை புதிது புதிதாகத் தமது மாளிகைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்கள். இவ்வாறே, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடந்து கொண்டே இருக்கும். இந்தப் பாக்கியம் உலகத்தில் ஐங்காலத் தொழுகையுடன் ஜும்ஆத் தொழுகையைப் பேணியவர்களுக்கும், வீணை, வாத்தியங்கள், பியானோ, தம்பூரா முதலிய வாத்தியத் தொனிகளையும், அந்நியப் பெண்களுடைய கீத சத்தங்களையும்விட்டு தம்மைக் காத்துக் கொண்டவர்களுக்கும் மாத்திரமே கிடைக்கக்கூடிய பாக்கியமாகும். **(ஹதீது)**

بُعِثْتُ لِاُكَسِّرَ الْمَزَامِيْرَ

''நான் வீணை வாத்திய (இசை)க் கருவிகளை உடைத்து நொறுக்கவே அனுப்பப்பட்டுள்ளேன்''.

'சங்கீதம் நய வஞ்சகப்போலி விசுவாசத்தன்மையை இருதயத்தில் வளரச்செய்யும்; தண்ணீர் விவசாயத்தை வளரச் செய்வதுபோல்.' (நா-வா)

'ஒரு காலம் வரும்; அப்போது நீங்கள் யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் முழம் முழமாகவும்; சாண் சாணாகவும் பின் பற்றுவீர்கள். எதுவரை என்றால், அவர்கள் பாம்பின் புற்றுக்குள்ளே நுழைந்தால், நீங்களும் அதற்குள்ளே நுழைய விரும்புவீர்கள்.' என்ற கருத்தில் ஒரு ஹதீது வந்துள்ளது. இதற்கேற்ப தற்போது முஸ்லிம்களில் பலர் தமது வீடுகளை மற்றைய மதத்தவர்களைப்போல் அலங்கரிப்பதும்; உருவங்கள் ஆகியவற்றை வைத்துக்கொள்வதும் பெருமை என்று நினைத்துக் கையாள்வது பழக்கமாகிவிட்டது. இது நமது ஷரீஅத்திற்கு முற்றும் அப்பாற்பட்ட செய்கையாகும்.

'நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ''உங்கள் துனியாவில் நின்றும், மணம், மாதர் இன்னும் என் கண்ணினது குளிர்ச்சியாகிய ஒளியான தொழுகை, இந்த மூன்றும் எனக்கு உவப்பாக்கப்பட்டன'' என்று தொழுகையைச் சிறப்பித்துக் காட்டினதில், அதுவே அவர்களின் நாட்டமென்றும், மணமும் மனைவியும் மனோ சுகத்திற்கென்றும், அதாவது: மணத்தை உபயோகிப்பதாலும், மனைவியோடு அன்புடன் பேசுவதினாலும், இந்த இரண்டின்

வலுவால் தொழுகையில் புகுந்து, அதிலிருந்து கண் குளிர்ச்சியாகிய ஒளியை அடைவதே அவர்களின் முக்கிய நோக்கம்.

சில சமயம் மணத்தைக்கொண்டு, தங்கள் மூளைக்குப் பலத்தையும், தெளிவையும் கொடுப்பார்கள்.

சில சமயம் அவர்களின் தேகம் தாங்கமுடியாத அளவு மிகவும் கஷ்டமாகயிருக்கும். அப்பொழுது அவர்கள் பீவி ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள்மீது தங்கள் திருக்கரத்தை வைத்து **'கல்லிமீனீ யா ஆயிஷா'** 'ஓ ஆயிஷாவே! என்னோடு வசனி என்று சொல்லுவார்கள். இதில் தங்களுக்கு வலுவைக் கொடுக்க வேண்டுமென்பதும் ,அதனால் வஹியைச் சுமக்கும்படியான சக்தி பிறக்க வேண்டுமென்பதும் அவர்களுடைய நாட்டமாக இருந்தது.

இதிலிருந்து நாம் தெரியவேண்டியது: நல்ல மனைவியும் மணமும், நமது வணக்கத்திற்கும், மற்ற நற்காரியங்களுக்கும் மிகவும் பயன்படுவதால் அதைத் தெரிந்து செயல்படுவது சுன்னத்தாகும்.

## வாசனை திரவியம்:

பூக்கள், சந்தனம் ஆகியவற்றால் வடிக்கப்படும் பலவகை அத்தர் போன்றவைகளே சிறந்தவை. ஆண்கள் நிறம் தெரியாத பரந்த மணமும், பெண்கள் நிறம்படியும்படியான அமர்ந்த மணமும் உபயோகிப்பதுவே நமது ஷரீஅத்தாகும். (சுன்னத்து).

தற்காலம் மேல்நாடுகளிலிருந்து தயார் செய்யப்பட்டு வருவதும், சீக்கிரமே ஆவியாகப்போவதுமான 'சென்டு,' 'ஸ்பிரே' முதலியவை, சாராயம் கலந்து தயாரிக்கப்படுவதால், பொதுவாக அவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

போதைப் பொருட்களை உட்கொள்ளுவது பெரும் பாவம் என்பதுடன், திரவ ரூபமான லாகிரிப் பொருள்கள் எல்லாமே, அதாவது: பீர் உள்ளிட்ட மது வகைகள் ஆடையில்படுவதும், சிறுநீரைப்போன்ற நஜீஸ் என்பதால் 'சென்டு' வகைகளை உபயோகிக்காமலிருப்பது உத்தமம்.

## லிப்ஸ்டிக்:

உதட்டுச்சாயம், நகப்பூச்சு ஆகியவைகள் தண்ணீர் உள்ளே செல்வதைத் தடுக்கும். அதைப் பூசிக்கொண்ட நிலையில்



செய்யப்படும் ஒளுவும், முழுக்குடைய குளியலும் நிறைவேறாது. தவிரவும் 'லிப்ஸ்டிக்' பலவற்றில் 'லாடு' என்ற பன்றிக்கொழுப்பு சேர்வதாக உறுதியுடன் சொல்லப்படுகிறது. இவ்வாறிக்கப் பெண்கள் தங்கள் அலங்கரிப்புகளில், இதுவும் ஒரு அம்சம் எனக்கருதி, அதையும் இட்டுக்கொண்டு அந்நியர் முன் தன்னைக் காட்டிக் கெடுகின்றனர். அந்தோ! இது மிகவும் பரிதாபத்திற்குரியது.

கணவனைத்தவிர பிற ஆடவர்களுக்கு முன், ஒரு பெண் தன்னை அலங்கரித்துக்கொள்வதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப் பதில்லை.

## தங்க ஆபரணம்:

ஆண்களுக்குத் தங்கம், வெள்ளி ஹராமாக்கப்பட்டிருக்கிறது. ஆண்கள் ஒரு வெள்ளி மோதிரம் மாத்திரம் அணிவது சுன்னத்து. அதற்குமேல் கூடாது.

பெண்கள் தங்கம், வெள்ளி ஆபரணங்கள் மாத்திரம் அணியலாம். இதுவன்றி இருபாலரும் தங்கம், வெள்ளியால் ஆக்கப்பட்ட பாத்திரங்கள், தட்டுமுட்டு சாமான்கள், அகப்பை, கத்தி போன்ற பொருட்களை உபயோகிப்பது ஹராமாகும்.

தங்கம், வெள்ளியில் பல்கட்டிக் கொள்வது ஆகும். ஹல்ரத் உதுமான் (ரலி) தங்கத்தில் பல் கட்டி இருந்தார்கள் என்று ஆதாரமாகக் கூறப்படுகிறது. இங்கே ஓர் முக்கிய விசயம் கவனிக்கத்தக்கது.

**மிகப் பேணுதலான பக்தியுள்ள நல்லவர்களையும்கூடப் பின்வரும் தவறான கருத்தால் ஷெய்த்தான் ஆசை உண்டாக்கி, ஏமாற்றித் தங்க மோதிரம், தங்கச் சங்கிலி போன்றவைகளை அணிந்து கொள்ளத் தூண்டுகிறான். எங்கேயாவது ஒரு அபாயத்தில் மாட்டிக்கொண்டால் அல்லது பொருட்களை இழந்துவிட்டால், அந்த ஊரார் நம் கையில் அல்லது கழுத்தில் கிடப்பவற்றைக் கழற்றி மையித்துச் செலவு செய்வார்கள் என்ற எண்ணங்களை உண்டாக்கி, இந்த ஹராமான செயலைச் செய்யும்படி ஷெய்த்தான் தூண்டுகிறான்.**

**"ஓ சன்மார்க்க சகோதரரே நீர் எதற்காகப் பொருளை எல்லாம் பறி கொடுக்கும் நிலைக்குப் போகவேண்டும்? அனாதைப் பிணமாகச் சாகவேண்டும்? என்பதை ஏன் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அந்தத் தரித்திர எண்ணம் எதற்கு? தவிரவும் அந்தக்**

கெட்டநிலை உமக்கு வரும்போது, இந்த ஹராமான தங்க ஆபரணம் கை கொடுக்கும் என்பது என்ன நிச்சயம்? அதுவும் சேர்ந்து போய் விட்டால் என்ன செய்வது? இவை ஆபத்திற்கு உதவும் என்றிருந்தால், அதை அல்லாஹ் ஹராமாக்கி இருப்பானா? என்பதை உணர்ந்து, இந்தப் பெரும் பாவத்தைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும், ஆண்களுக்கு ஹராமாக்கப் பட்ட தங்க மோதிரம், சங்கிலி இவற்றை அணிந்திருப்பவர்களின் தொழுகைக்கும், கையேந்திக் கேட்கும் துஆவிற்கும் பரிகாரமுண்டா? என்பதற்கு வாசகர்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும்.

**ஜும்ஆ** நாளன்று காலை முகச்சவரம் செய்து, மூக்கு, கக்கம், ரோமங்களைக் களைந்து, நகம் நறுக்கி (நிய்யத்துடன்) குளித்து, நல்லாடை தரித்து (நோன்பல்லாதபோது) மணம் (அத்தர்) இட்டுக் கொண்டு, தொழுகைக்குச் செல்வது (சுன்னத்து). இவைகள் கஷ்டத்தை நீக்கும். நல்வாழ்வை இழுத்துக்கொண்டு வரும். மலக்குகள் அவருடைய பாவத்தைப் பொறுக்கும்படி அல்லாஹ் விடம் கேட்பார்கள். இன்னும் இந்தப் புனித நாளின் தொழுகை யானது, பக்கீர்களுக்கு ஹஜ்ஜாகவும், மிஸ்கீன்களுக்கு பெரு நாளாகவும் இருக்கும். அன்றியும்:-

''நீங்கள் ஜும்ஆத் தொழுகையைக் கடைப்பிடித்து வருவீர் களாயின், ஈருலகத்திற்கும் அது முன்மாதிரியாக இருப்பதுமல்லாமல், உங்கள் துஆக்களும் அங்கீகரிக்கப்படுகின்றன'' எனவும் நமதருமை நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

## பள்ளி வாசலின் ஒழுக்கங்கள்

1. பள்ளி வாசலுக்கு வந்தவுடன் அங்கு யாராவது இருந்தால் அவர்களுக்கு சலாம் சொல்ல வேண்டும். எவரும் இல்லை யானால் ''அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லா ஹிஸ்ஸா லிஹீன்'' எனக் கூறிக்கொள்ள வேண்டும்.

2. பள்ளியினுள் நுழையும்போது, வலது காலை முன்வைத்து ''அல்லாஹும்மஃபித்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்'' எனக் கூறிச்சென்றதும் தஹிய்யத் துல் மஸ்ஜிது இரண்டு ரக்அத்து சுன்னத்துத் தொழவேண்டும்.

3. பள்ளியினுள் ஊண், உறக்கம், விற்பனை, கொடுக்கல், வாங்கல் செய்யக்கூடாது (இவை இஃதிகாஃப் இருப்பவர்களுக்கு ஆகும்.)



4. பள்ளியினுள் கத்தி, வாள் முதலான ஆயுதங்களை உறையி லிருந்து உருவி எடுக்கக்கூடாது.

5. காணாமல் போன பொருட்களைப் பள்ளியினுள் தேடவோ விசாரிக்கவோ கூடாது.

6. பள்ளியினுள் திக்ரு, அல்லாமல் மற்றவைகளைச் சப்தமிட்டுப் பேசலாகாது.

7. பள்ளியினுள் உலக விவகாரங்களைப் பேசலாகாது. அவ்வாறு பேசுவது நல்அமல்களை அழித்துவிடும்.

8. பள்ளியினுள் அமர்ந்திருப்பவர்களை விலக்கிக்கொண்டு உள்ளே செல்லலாகாது.

9. தொழுகைக்கு இடம் பிடிப்பதற்காக, மற்றவர்களுடன் சச்சரவு செய்யலாகாது.

10. சப்பில் (வரிசையில்) நிற்கும்போது, பிறரை இடித்து இடையூறு செய்யக்கூடாது.

11. தொழுபவருக்குமுன் குறுக்கே செல்லக்கூடாது.

12. பள்ளியினுள் மனிதர்கள் வந்து போகும் வாசலினருகே நின்று தனித்துத் தொழக்கூடாது.

13. பள்ளியினுள் எச்சில் துப்புவதும், ஜன்னல் வழியாக எச்சில் துப்புவதும் கூடாது.

14. பள்ளியினுள் விரல்களைச் சொடக்கு (நெட்டி) விடல், சத்த மிட்டுக் கொட்டாவிவிடல், காற்றுக்கழித்தல் இவைகள் கூடாது.

15. பள்ளிக்குள் பைத்தியக்காரர்களையும், சிறுவர்களையும் வரவிடக்கூடாது.

16. பள்ளிவாசலைக் கூளம், குப்பை முதலிய அசுத்தமான வைகளை விட்டும் பரிசுத்தமாக்கி வைக்கவேண்டும்.

17. பள்ளியினுள் இருக்கும்போது திக்ரு, திருக்குர்ஆனை ஓதுவது, தஸ்பீஹ் செய்வது முதலிய நல் அமல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

18. பள்ளிவாசலைவிட்டு வெளியாகும்போது, இடது காலை முன்வைத்து 'அல்லாஹும்ம இன்னீஅஸ்அலுக மின்பள்லி ரஹ்மதிக்க' எனக்கூறி வெளியில் செல்லவேண்டும்.

மேற்கூறிய ஒழுக்கப்படி பள்ளிவாசலில் போய்த் தொழுவது, அதைப் பரிபாலிப்பது, அதிகமாக அதோடு தொடர்பு வைப்பது இவைகளைப் பேணுபவர்களுக்கு, அகம் புறம் இரண்டும் சுத்தமாவதுடன், வாக்கும் மனமும் தெளிவடைகிறது. இத்தகையோரை பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

பள்ளிவாசலைச் சுத்தம் செய்து கூட்டிப் பெருக்குவது, ஹூருல் ஈன்களுக்குக் கொடுக்கும் மஹர் தொகையாகும். (நா - வா)

## ஜும்ஆத் தொழுகையை விடுவதன் விளைவு

''எவரொருவர் காரணமின்றி மூன்று ஜும்ஆவை விடுகின்றாரோ, அவர் தாம் இஸ்லாமை முதுகுப் புறத்தில் எறிந்து விட்டவர் போலாகின்றார். அவரது இதயத்தில் முனாபிக் என்று முத்திரை இடப்படும்.'' (நா - வா)

''ஜும்ஆ நாளில், ஜும்ஆவுக்கு முன் (வழியில் ஜும்ஆ கிடைக்காதென்றிருந்தால்) பிரயாணம் விலக்கப்பட்டிருக்கிறது.'' இது பற்றி அவ்த்தாயீ (ரஹ்) அவர்கள் கூறியிருப்பதாவது:-

''எங்கள் ஊரில் ஒரு வேட்டைக்காரன் இருந்தான். அவன் ஜும்ஆ அன்று வேட்டைக்குப் போனதில், அவனும் அவனது கோவேறு கழுதையும், பூமிக்குள் இழுக்கப்பட்டு விட்டனர். நாங்கள் போய் பார்க்கும்போது, கழுதையின் செவியைத்தவிர மற்ற பாகங்களெல்லாம் பூமிக்குள் இறங்கிவிட்டதைக் கண்டோம்.''

முஜாஹிது (ரலி) அவர்கள் கூறியிருப்பதாவது:-

''சில மனிதர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுடைய நேரம் ஸபர் (யாத்திரை) போனார்கள். அவர்கள் தங்கியிருந்த தலத்தில், ஆகாய மார்க்கமாக நெருப்பு இறங்கி, அந்தத் தலத்தையும், அதில் இருந்தவர்களையும் கரித்துவிட்டது'' (இது மட்டுமல்ல)

முன்காலத்து நபிமார்களின் சமூகத்தாருக்கு குறிக்கப்பட்டிருந்த புனித நாட்களை அவர்கள், கண்ணியப்படுத்தாமலும், வணக்க ஒழுக்கங்களில் ஈடுபடுத்தாமலும் இருந்த காரணத்தால், பெரும், பெரும் சோதனைகள், அதாவது உருமாற்றம், பூமிக்குள் ஆழ்த்தப் படுதல், காற்றடித்து ஊர் புரட்டப்படுதல், நெருப்பால் எரிக்கப்படுதல், நோய் துன்பங்களால் அழிக்கப்படுதல், போன்ற பயங்கரச் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இதுபற்றி மூஸா நபி (அலை) அவர்கள் காலத்தில் நடந்த சம்பவத்தை இறைவன் திருமறையில் கூறுகிறான்:-



''நபியே! சமுத்திரக் கரையிலிருந்த ஓர் ஊர் ஜனங்களைப்பற்றி நீர் அவர்களைக் கேளும்; (ஓய்வு நாளாகிய) சனிக்கிழமையன்று (மீன் பிடித்தல் கூடாதென்று விலக்கப்பட்டிருந்தும்) அவர்கள் (அதைப் பொருட்படுத்தாது) மீறி மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால், சனிக்கிழமையன்று (அந்தச்சமுத்திர) மீன்கள் அவர்கள் முன்வந்து (நீர்லமட்டத்திற்குத்) தலைகளை நீட்டிக் கொண்டிருந்தன; சனிக்கிழமை அல்லாத நாட்களில் அவர்களிடம் வருவதில்லை; அவர்கள் பாவம் செய்துகொண்டிருந்ததன் காரணமாக, அவர்களை இவ்வாறு (மிகக் கடினமான) சோதனைக்குள்ளாக்கினோம். (7 - 163)

(இதனை) அந்த ஊரிலிருந்த நல்லோர் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்து தடை செய்தார்கள். (அதனைக் கண்ட வேறு) ஒரு கூட்டத்தினர் (இவர்களை நோக்கி) ''அல்லாஹு எவர்களை அழித்துவிட வேண்டுமென்றோ கடினமான வேதனைக்குள் ஆக்க வேண்டுமென்றோ நாடியிருக்கின்றானோ? அந்த மக்களுக்கு நீங்கள் ஏன் நல்லுபதேசம் செய்கின்றீர்கள்?'' என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், ''இதனால் நாம் உங்கள் இறைவனிடம் நம் பொறுப்பிலிருந்து நீங்கி விடுவதற்காக (நாங்கள் நல்லுபதேசம் செய்கிறோம்) என்றும், இதனால், (மீன் பிடிக்கும்) அவர்கள் (ஒருக்கால்) விலகிவிடலாம்'' என்றும் பதில் கூறினார்கள். (7 - 164)

''அவர்களுக்கு எச்சரிக்கப்பட்டதை, அவர்கள் (பொருட்படுத்தாது) மறுத்துப் பின்னும் மீன்பிடிக்க முற்பட்டுவிடவே, பாவத்திலிருந்து விலகி வந்தவர்களை நாம் ரட்சித்துக்கொண்டு, வரம்பு மீறிய அவர்களை; அவர்கள் செய்துகொண்டிருந்த பாவத்தின் காரணமாகக் கொடிய வேதனையைக் கொண்டு நாம் பிடித்துக் கொண்டோம்.''

''ஆகவே தடுக்கப்பட்டிருந்த வரம்பை அவர்கள் மீறவே, அவர்களை நோக்கி 'நீங்கள் சிறுமைப்பட்ட குரங்குகளாகி விடுங்கள்' என்று (சபித்து) கூறினோம்.'' (அவ்வாறே அவர்கள் ஆகிவிட்டனர்.)
(7: 165 - 166)

நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் தங்கள் உம்மத்துகளுக்கு அந்தவித சோதனைகள் உடனுக்குடன் நேரிடாதிருக்க வேண்டுமென்று, மிஃராஜின்போது இறைவன் பக்கம் மன்றாடிக்கேட்டுக் கொண்டதற்கிணங்க, அல்லாஹ் அவற்றை இறுதி நாள்வரை ஒத்தி வைத்து விட்டான்.

முன்னர் எடுத்துக் கூறியதுபோல, எவ்வளவோ சிறிய பெரிய தீமைகள் சம்பவித்துக்கொண்டிருந்தும், அவற்றைப் பொருட்படுத்தாது, இந்தக் காலத்திலும்கூட நம்மில் பலர் ஜும்ஆக்களைத் தவறவிட்டு வாளாவிருக்கின்றனர். இப்படிப்பட்டோரின் கதி என்னவாகுமோ, இறைவனே அறிவான்!

வேதக் கட்டளையின்படி வெள்ளிதோறும் ஜும்ஆத் தொழுகையைப் பேணுதலோடு நிறைவேற்றி, இறைவனது அருளைப்பெற்ற நல்லடியார் போன்று, நாமும் அனுசரித்து நடக்க அல்லாஹ் நல்லருள் புரிவானாக. ஆமீன்.

## 4- வது ஹத்யா
## ஐங்காலத் தொழுகையைப் பேணுதல்

حَافِظُوا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلَوٰةِ الْوُسْطَىٰ وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ

**''(விசுவாசிகளே!) தொழுகையையும் (சிறப்பாக) மத்தியானத் தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணித் தொழுது கொள்ளுங்கள். மேலும் (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்.''**

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் திருவுளமாகி இருப்பதாவது:-

''அல்லாஹுத்தஆலா தவ்ஹீதுக்கு அடிப்படையான தொழுகையைவிடத் தனக்கு உவப்பான ஒரு செயலை அவனுடைய அடியார்மீது விதியாக்கவில்லை. தொழுகையைவிட மேலான வணக்கம் ஒன்றுண்டாயின், அதை அவனது அமரர்கள் கையாண்டிருப்பார்கள். அவர்கள் அப்படி எதையும் கையாளவில்லை. அவர்களில் சிலர் 'ருகூஉ' செய்தவர்களாகவும், சிலர் 'சுஜூது' செய்தவர்களாகவும், சிலர் நின்றவர்களாகவும், சிலர் இருந்தவர்களாகவுமே, அவனை வணங்குகின்றனர்.'' (நா - வா)

தொழுகையானது இறைவனது கட்டளைப்படி, அவன் சொல்லிய முறைப்படி நிறைவேற்றப்படுவதால், அது இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதோடு இந்தத் தொழுகையை மேற்கொண்டு தொழுதுவரும் முஸ்லிம்கள், இம்மையிலும் மறுமையிலும் பல நற்பலன்களை அடைகின்றனர். இதைப்பற்றி இறைவன் கூறுகிறான்:-



**''(நபியே!) வஹி மூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட இந்த வேதத்தை ஓதி, தொழுகையைக் கடைபிடித்து வாரும். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகையானது மானக்கேடான காரியங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடுகிறது.'' (29 - 45)**

இந்த வேத வாக்கியத்திற்கேற்ப, தொழுகையை உண்மையாகவே நிறைவேற்றுபவர், இந்த உலகிலும் மிக மேன்மையானவர்களாக விளங்குகின்றனர். அதாவது, அவர்கள் தங்களிடமிருக்கும் துர்க் குணங்களும், அசுத்தங்களும், தாமாக நீங்கி, உன்னத நிலைக்கு வந்து விடுகின்றனர். இதற்கேற்ப:-

நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் சமூகத்தில் அன்சார் (மக்காவாசி)களில் ஒரு வாலிபர், ஐங்காலத் தொழுகையை நியமமாய் நாயகம் (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்து விடாமல் தொழுவதும், கெட்ட நடத்தைகளில் எதையும் விடாதபடி செய்துகொண்டும் இருந்தார்.

ஸஹாபாக்கள் அவருடைய பாவச் செயல்களைப்பற்றி நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையிட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''தொழுகை அவரை அந்த கெட்ட கருமங்களை விட்டும் நீக்கி விடும்'' என அருளினார்கள்.

சில நாட்கள் செல்லவில்லை. அந்த வாலிபர் தன்னிடமுள்ள பாவச் செய்கைகளை நினைத்து வருந்தி, முறைப்படி தவ்பாச் செய்து மீண்டும், சில மாதங்களுக்கிடையே உலகத்தை வெறுத்த 'ஸாஹிது' ஆகி உயர்பதவி பெற்றார் என அறிவிக்கப்படுகிறது.

தொழுகை என்பதற்கு பணிதல் என்பது பொருள். நீங்கள் அப்து (அடிமை)களாக இருக்கின்றீர்கள்; அல்லாஹு உங்களுடைய ''மஃபூது'' வணக்கத்திற்குரியவனாக இருக்கின்றான். அடிமையானவன் மஃபூதிற்கு, கீழ்ப்படிந்து நடப்பதற்கே (இபாதத்து) வணக்கம் என்று சொல்லப்படும். மனிதர்களை இத்தகைய வணங்குபவர்களாக ஆக்குவதே, இஸ்லாத்தின் முக்கிய நோக்கம்.

அந்தத் தொழுகையானது நீங்கள் விசுவாசம் கொண்டுள்ளவைகளைச் சொல்லாலும், செயலாலும் தினமும் ஐந்து முறை திருப்பித் திருப்பி ஞாபகமூட்டிக் கொண்டும், உறுதிப்படுத்திக்கொண்டும்

இருக்கிறது. இந்தத் தொழுகையின் பயன் ஆண்டுக்கொருமுறை ரமலான் நோன்பு நோற்கும்படி மனிதனை எழுப்புகிறது. (ஜக்காத்து) ஏழை வரியும், ஹஜ் யாத்திரையும், (தனவந்தர்களாக இருப்பின்) நிறைவேற்றத் தூண்டுகிறது. அன்றியும், இதர பல நற்செயல்களைச் செய்வதற்கும், வழிகாட்டியாக அமைந்து விளங்குகிறது. மேலும், அந்தத் தொழுகையை முடித்துக் கொண்டு உலக விவகாரங்களில் ஈடுபடுவானாயின், அந்த இடத்திலும், அவன் ஆண்டவனை அஞ்சி, அவனுடைய சட்டங்களைப் பின்பற்றி நடப்பான் என்றும், பாவங்கள் செய்யச் சந்தர்ப்பம் வாய்க்கும்போதும், ஆண்டவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், என்னும் அச்சம் அவனுக்கு வந்துவிடும் என்றும் நம்ப இடமிருக்கிறது.

பிறர் புகழுக்காகத் தொழும் ஒருவன், ஆண்டவனை அஞ்சாத வனாகவும், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படியாதவனாகவும் இருப்பா னாயின், அது அந்த மனிதனின் குற்றமேயன்றி, தொழுகையின் குற்றமல்ல.

''தொழுகையானது முஃமின்களுக்கு மிஃராஜைப் போன்ற தாகும்'' என்று ஆண்டவனின் திருநபி (ஸல்) அவர்கள் நவின் றுள்ளார்கள்.

மிஃராஜ் என்பது ஆண்டவனது திருச் சன்னிதானத்தை அடைவ தையும், அவனது திவ்விய தரிசனத்தைக் கண்டானந்திப்பதையும் குறிக்கும்.

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், வான மண்டலங்களை ஒரு நொடிப் பொழுதிலே கடந்து, இறைவனுடைய சந்நிதானத்தை அடைந்து, அல்லாஹ்வுடன் வசனித்து, அவனிடமிருந்து தம் உம்மத்துக்களுக்கு இறைவனது தரிசனம் கிடைப்பதற்கு ஏதுவாகிய கண்ணியமிக்கத் தொழுகையையும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அந்தத் தொழுகையின் உட்பொருளை நாம் கூர்ந்து நோக்குவோ மாயின், இதுவும் ஒரு 'மிஃராஜு' என்றே இயம்ப வேண்டியதாக இருக்கிறது. ஏனெனில், உள்ளச்சத்தோடும், திரிகரண சுத்தியோடும், பரிபூரண பக்திமான்களின் உள்ளம், அந்த அல்லாஹ்விடம் லயித்து விடுமல்லவா! நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜின்போது அல்லா ஹுவின் திருலிகாவை அடைந்ததும்; முதன்முதலாக அவனுக்குக் காணிக்கை வைத்து, அதற்குப் பிரதிபலன்களை அடைந்து கொண்ட வைகளில் ஒன்றான 'அத்த ஹிய்யாத்' என்பதுவும், இந்தத் தொழுகை



யில் அடங்கி இருக்கின்றது. மேலும் மனிதன் அல்லாஹ்வைப் பயந்தும் புகழ்ந்தும், அவனை எதிரில் காண்பவனைப் போலவே எண்ணித் தொழுகின்றான். இந்த மாதிரியான தத்துவ அம்சங்களைப் பொதிந்து கொண்டிருக்கும் தொழுகையானது உண்மை முஃமின் களுக்கு ஏன் மிஃராஜாகாது?

பேசும் சக்தி இல்லாத, சின்னஞ்சிறு குழந்தைகளின் முகத்தைப் பார்த்துப் பெற்றோர்கள், தினமும் பல முறை பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருப்பது வழக்கம். குழந்தையிடமிருந்து ஒரு பதிலும் வராது. ஆயினும் மீண்டும், மீண்டும் பெற்றோர்கள், ''பால் வேண்டுமா? பசிக்கிறதா?'' என்றெல்லாம் மனத்தைச் செலுத்திப் பேசிக் கொண்டே இருப்பார்கள். நாள் ஆக ஆக குழந்தை 'ஊ' 'ஆ' என்று சொல்ல ஆரம்பித்துப் படிப்படியாக, மழலைச் சொற்களால் உரையாடிப் பின் பதில் கூறும் நிலைக்கு வந்துவிடுவதுபோலவே, கருணையாளருக்கெல்லாம். மகா கிருபையாளனான அல்லாஹ் விடம், தொழுகையில் நின்று, மனம் ஒருமிக்கும் வரை மீண்டும் மீண்டும், 'உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம்'' என்று கேட்டுக்கொண்டே இருந்தால், கொஞ்ச காலத்திற்குள் நிச்சயம் பதில் கிடைக்கவே செய்யும். அந்த நிலை ஏற்படும்போது, அது உண்மையான மிஃராஜாகவே ஆகிவிடுகிறது. இன்றும் பல நல்லடியார்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துக்கொண்டு தான் இருக்கின்றது.

''முஃமினான அடியான் நபிலான வணக்கங்களைக் கொண்டு என்னிடம் நெருங்குகின்றான்; அப்பொழுது நான் அவனின் கேட்கும் காதாகவும், பார்க்கும் கண்ணாகவும், பிடிக்கும் கையாகவும் ஆகிவிடுகிறேன்.'' (ஹதீது குதுஸி)

**''தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடும் மனம் பரிசுத்தத்தோடு இருக்கும் நன்னம்பிக்கை கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றுவிட்டார்கள்''** (அல்குர் ஆன்)

''ஐந்து வேளைத் தொழுகைக்கு உவமையாவது: அது உங்களின் வீட்டு வாசலில் ஓடும் தெள்ளிய ஆற்றுக்கு ஒப்பாகும். ஒருவன் ஒவ்வொரு நாளும், அந்த ஆற்றில் ஐந்து தடவை குளித்து வந்தால், அவனுடைய உடல், அழுக்கு இன்றிச் சுத்தமாக ஆகிவிடுதுபோல், தொழுகையும் எத்தகைய பாவத்தையும் அணுகவிடாமல் மனிதனைச் சுத்தப்படுத்தும்.'' (நா -வா)

## கலாத் தொழுகை

தொழுகை, நோன்பு முதலிய வணக்கங்களை (கலா) சில சமயங்களில் விட்டுவிட்டவர்கள், அலட்சியத்தின் காரணமாக அவை விடுபட்டிருந்தால், உடனடியாக அவற்றை நிறைவேற்றுவது கடமையாகும். உறக்கம், மறதி போன்றவற்றால் விடுபட்ட நோன்பையும் உடனடியாக நிறைவேற்றுவது சுன்னத்தாகும்.

விரைவில் கலாவை நிறைவேற்ற வேண்டியவர்கள், அவ்வாறு செய்யாமல் சுன்னத்தான வணக்கங்களில் நேரத்தை செலவழிப்பது கூடாது. முக்கியமான கடனைக் கொடுத்தபின் அல்லவா கைங்கரியம் செய்யவேண்டும்? ஜக்காத்துக் கொடுக்காதவர்கள், ஒவ்வொரு வருடமும் கணக்கில் நாற்பதுக்கு ஒன்று வீதம் (இரண்டரை சதவீதத்துக்கும்) சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

**எடுத்துக்காட்டாக:-**

ஒரு மனிதன் தனது 25 வயது வரை தொழாமல் இருந்து விட்டதாக வைத்துக்கொள்வோம். அவர் தொழ ஆரம்பித்தவுடன், பின்வருமாறு கணக்கு வைத்துக்கொள்வது நன்று. அதாவது:- அவருக்கு சுமார் 14 வயதிலிருந்து தொழுகை கடமையாகின்றது. அவ்வாறாயின் 11 வருடத் தொழுகையை 'கலா' செய்யவேண்டும். அந்த 11 வருடத்தில் சில சமயங்களில் ஜும்ஆவுக்குப் போயிருப்பார். சிலவேளை நண்பர்களுடைய முகத்துதிக்காகத் தொழுதிருக்கலாம். இந்தத் தொழுகைகளை ஒரு உத்தேசமாக கணக்கிட்டு, ஒரு வருடமோ அல்லது அதற்கு அதிகமாகவோ கழித்துக்கொண்டு, மீதியுள்ள நாட்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் ஓய்வு நேரங்களில் தொடர்ந்து தொழுது வருவதுடன், அந்தத் தொழுகைகளை கழித்துக்கொண்டே வரவேண்டும், அல்லாஹுத் தஆலா சீக்கிரத்தில் நிறைவேற்றி விடுவான்.

இதற்கிடையில் அவருக்கு மரணம் ஏற்பட்டுவிட்டால், அல்லாஹு தஆலா பூரணமாக மன்னித்துவிடப் போதுமானவன்.

கலாத் தொழுபவர்கள் சுன்னத்தான ஓதுதல்களை எல்லாம் தொழுகையில் விட்டுவிட்டு, 'பர்ளான' ஓதுதல்களையும், செயல்களையும் மாத்திரமே செய்துமுடித்து சீக்கிரம் நிறைவேற்றுவது அவசியம்.



عَجِّلُوا بِالصَّلٰوةِ قَبْلَ الْفَوْتِ وَعَجِّلُوا بِالتَّوْبَةِ قَبْلَ الْمَوْتِ

''நேரம் பிந்துமுன் தொழுகைக்கு விரைந்து கொள்ளுங்கள். இன்னும் மவுத்து வருமுன் தவ்பாச் செய்வதில் முந்திக்கொள்ளுங்கள்'' என்ற நபி மொழி (ஹதீது)க்கொப்ப, வணங்குவதற்குரிய சமயம் பிந்துமுன், அதை நிறைவேற்றுவதிலும், இன்ன நேரம் என்று நிச்சயிக்கமுடியாத மரணம் வருமுன், தனக்கு நிகழ்ந்த பாவத்திற்காகத் தவ்பாச் செய்து மீளுவதிலும், தாமதமின்றி முன் எச்சரிக்கையாக இருப்பதுவே உண்மை முஃமின்களின் நற்செயல்.

## ஜமா அத்துத் தொழுகை

فَاَقِيْمُوا الصَّلٰوةَ ۚ اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتٰبًا مَّوْقُوْتًا

**''(முறைப்படி) தொழுங்கள்; ஏனென்றால் நிச்சயமாகத் தொழுகையோ விசுவாசிகள் குறிப்பிட்ட நேரங்களில் (தவறாமல்) செய்யவேண்டிய கடமையாகவேயிருக்கிறது.''**

''ஜமாஅத்துடன் தொழுகிற ஒரு தொழுகை, தனித்துத் தொழுகிற இருபத்தி ஏழு தொழுகைக்குச் சமமாகும்.'' (நா - வா)

அல்லாஹு ஜல்ல ஷஃநுஹூவத ஆலா கூட்டாகத் தொழும்படி நமக்குக் கட்டளை இட்டிருப்பதோடு, சிறப்பாக ஐங்காலத் தொழுகைகளையும், வாரத்திற்கு ஒருமுறை வெள்ளிக்கிழமையன்று கூட்டமாகச் சேர்ந்து தொழுவதையும் நம்மீது கடமையாக்கி இருக்கிறான். இவ்வாறு தொழுவது முஸ்லிம்களுக்கிடையே சகோதரத்வத்தையும் ஐக்கியத்தையும் உண்டாக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், அவர்களை ஒன்று திரட்டி, வைரம் போன்ற ஓர் உறுதியான சமூகமாக அமைத்தும் விடுகிறது. இவ்வாறு தொழுபவர்கள் யாவரும் ஒன்று கூடி, ஒரே ஆண்டவனை வணங்குகிற காரணத்தால், அவர்களுடைய உள்ளங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து, யாவரும் சகோதரர்கள் என்ற சக்தி மிகுந்த உணர்வும் பிறந்து விடுகிறது.

அன்றியும்:- கூட்டாகத் தொழுவதால், ஒரு தலைவருக்குக் கீழ்ப் படிந்து நடக்கும் தன்மையை அளிப்பதோடு, தாம் ஒரு கட்டுப்பாட்டிற் குள்ளடங்கி நடக்க வேண்டுமென்ற பாடத்தையும் போதிக்கின்றது.

இதன் விளைவாக தமக்குள் ஒப்பற்ற பரசுபர அபிமானமும், சமத்துவ மனப்பான்மையும், சமத்துவ சமூக வளர்ச்சியும் உண்டாகிறது. ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன், பெரியவன், சிறியவன், பலவான், பலவீனன், யாவரும் ஒரே அணியில் தோளோடு தோள் சேர்ந்து ஒரு தலத்தில் நிற்பதால், அங்கே உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற பேத உணர்ச்சியும், ஏழை, பணக்காரன் என்ற பிரிவினை உணர்ச்சியும் தலைகாட்ட மாட்டாது. இவை கூட்டமாகத் தொழுவதால் கிடைக்சப்பெறும் அளவிறந்த நன்மைகளில் சில. இந்த நன்மைகள் இவ்வாறு தொழக்கூடியவர்களுக்குக் கிடைக்கின்றனவேயன்றி ஆண்டவனுக்குக் கிடைக்கக் கூடியதன்று. எனவே, கூட்டமாகத் தொழுவதன் நன்மைகளை நன்கு தெரிந்து, அதனைக் கடைபிடித்து நடப்பது மிக முக்கியமானதாகும்.

ஹாத்தமுல் அஸம்மு (ரஹ்) என்ற பெரியார், ஒரு தடவை ஜமாஅத்தாகத் தொழுவது தவறிப்போனது பற்றி விசனமாக இருப்பதைத் தெரிந்த அபீ இஸ்ஹாகுல் புகாரி (ரஹ்) அவர்கள், அன்னாரிடம் சென்று கை கொடுத்து ''ஸப்ரு செய்யுங்கள்'' என்று சொல்ல, அதற்கு அவர்கள்:- ''எனக்கு ஒரு குழந்தை இறந்துபோனால், எவ்வளவு வருத்தமிருக்கும்; இந்த ஊரில் பதினாயிரத்திற்கு அதிகமான மக்கள் வந்து எனக்குக் கை கொடுத்து சமாதானப்படுத்துவார்களே! ஆனால், ஒன்றல்ல, என் பிள்ளை களெல்லாம் இறந்து போவதில் கூட எனக்கு ஒரு வருத்தமுமில்லை. தீனுடைய கடமை துனியாவுடைய கடமையை விடவும் மிகப் பெரியதாக இருப்பதால், இன்று இந்தத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவதற்குத் தவறிவிட்டோமே, இதுதான் எனக்குப் பெரிய முஸீபத்தாக இருக்கிறது'' என்று கூறினார்கள்.

ஸாலிஹீன்களில் ஒருவருக்குக் கண் தெரியாது. ஆனால் தொழுகையை நியமமாக ஜமாஅத்தோடு தொழுகிறவராக இருந்தார். அதுபற்றி அவரின் மனைவி:- ''கண் தெரியாமல் தொழுகைக்குப் போய்வந்து கொண்டிருக்கிறீர்களே! அங்கு தொழுக்கைகாகச் செல்கின்றீர்களா? அல்லது வீண் பொழுது போக்குதற்காகவா?'' என்று வருத்தப்பட்டு, சில சமயம் கடிந்து கூறுவது வழக்கம். அவளுடைய கேள்விக்குப் பொறுமையுடன் ஒன்றும் பேசாமலே இருந்துவிடுவார். ஒரு நாள் மனைவி கடுமையாகப் பேசிவிட்டாள். அதனால், அவர் மன வருத்தமடைந்து ஜமாஅத்தோடு இஷாத் தொழுகையை முடித்துக் கொண்டு, மிகச் சஞ்சலத்துடனே வீட்டிற்குப் போகாமல், அன்றிரவு



பள்ளியில் தங்கி நித்திரை கொண்டார். மறுநாள் காலை தூக்கத்திலிருந்து எழுந்து பார்த்தபோது, இரு கண்களின் குருடு நீங்கி வெளிச்சமாகிவிட்டது. அல்லாஹுவைப் புகழ்ந்து ஷுகூர் செய்து கொண்டார். அன்றியும் இறை வணக்கத்தை, அவன் கட்டளைக் கிசைந்து, ஜமாஅத்துடனே தொழுததின் பொருட்டால், குருடு நீங்கிச் சிறப்பான பார்வையும் கிடைத்தது ''என மற்றவர்களிடம் தெரிவித்தார்.

(நுஸ்ஹதுல் மஜாலிஸ்)

தொழுகையின் முக்கியத்தை எவ்வளவு வருணித்த போதிலும் அது மிகையாகாது; ஏனெனில், அல்லாஹ் தம் திருமறையில் அநேக இடங்களில் தொழுகையைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறான்; அன்றியும் நமது நாயகம் (ஸல்) அவர்களும், தொழுகை எவ்வளவு முக்கியமானதென்பதற்குப் பலமுறை சொல்லளவில் மாத்திரமின்றி, செய்கையிலும் காட்டியிருக்கிறார்கள். அன்றியும் ஜமாஅத்தோடு கூடித் தொழுவதால் விளையும் அளவற்ற நன்மைகளையும், அதைப் பேணாதிருப்பதினால் விளையும் அளவற்ற தீமைகளையும், விவரித்து தப்ஸீர்களிலும், ஹதீது ஷரீபிலும் கூறியுள்ளதைப் பரவலாகக் காணலாம். இவ்வாறிருந்தும் கூட, நம்மில் பெரும்பாலோர் தொழுகையைப் பொருட்படுத்தாது புறக்கணிப்பது வருந்தத்தக்கது.

## உள்ளச்சமில்லாமல் தொழுவதின் விளைவு

**''தொழுகையில் பராமுகமாகவிருக்கும் (நயவஞ்சக) தொழுகையாளிகள் வய்ல் எனும் கொடிய நரக வீழ்ச்சியையே அடைவர். (அவர்கள்) தொழுதபோதிலும் (மக்களுக்குக்) காண்பிக்கவே தொழுவார்கள்.''** (107 - 4: 6)

''ஒரு மனிதன் உள்ளச்சமில்லாமல் ருகூஉ, ஸுஜூது நிரப்பாகாமல் விரைந்து, பிறர் மெச்சத் தொழும் தொழுகை, ஓர் இருள்போல் கோலம் கொண்டு, அவனைப் பார்த்து, ''என்னை நீ கெடுத்ததுபோல், உன்னுடைய கூலியை இறைவன் கெடுத்து விடுவானாக'' என்று கூறும்; உடனேயே அந்தத் தொழுகையை பழைய துணியைப்போல் சுருட்டித் தொழுதவன் முகத்தில், ''இது ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. நீயே பெற்றுக்கொள்'' என்று எறியப்படும்.'' என எம்பெருமானார் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

''தெருக்களைச் சுற்றிப் பார்த்து, தொழாதவர்களை அவர்களின் வீடுகளோடு நெருப்பிட்டுக் கொளுத்தி எரித்து விடுவதே தகும்.

ஆனால், அந்த வீடுகளில், பெண்களையும் பிள்ளைகளையும் கருதி அங்ஙனம் செய்வதை நான் விரும்பவில்லை.'' (நா - வா)

ஐங்காலத் தொழுகை, பாலிக்கான (பருவமடைந்த) ஆண் பெண் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும், என்பதைத் திருமறையும், திருநபி (ஸல்) அவர்களின் போதனைகளும், வற்புறுத்திக் கூறிக்கொண்டே இருக்கின்றது. இதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதை அகில உலக முஸ்லிம்கள் அனைவரும் அறிந்திருந்தும்கூட, இந்தக் காலத்தில் சிலர் இப்லீஸின் குணமெடுத்து, தம்மை பெரிய அறிவாளியாகப் பாவித்து, சில ஞான மேதைகளின் பாடல்களுக்குத் தப்பான பொருளை உண்டுபண்ணியும், அதற்கு ஆதாரமாகக் குர்ஆன் ஷரீபில், சில முதஷாபி ஹத்தான ஆயத்துகளையும், அதற்கிசைந்தாற் போல் ஆரிபீன் அவ்லியாக்களின் மதிப்பிற்குரிய சொற்களில் சிலவற்றைத் திரித்துக் கூறியும், தமது புத்திக்கு எட்டியவாறு விளக்கம் கொடுத்து, ரகசியத் தொழுகை, அகமிய நோன்பு இவைகள்தாம் முக்கியமென்றும், வெளிப்படையாக இவைகளைச் செய்யாவிட்டாலும், பாதகமில்லை என்றும் கூறி, பாமர மக்களின் மார்க்கப் பற்றைக் குறைக்கின்றனர். அன்னார் இஸ்லாத்தின் கோட்டையை விட்டும் அப்பால்பட்டவர்களாக வழிகேடான போக்கில் விரைந்து செல்கிறார்கள்; அந்தோ! அன்னார், மார்க்கக் கடமைகளை அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் முனைவதுமில்லை.

விண்ணில் பறக்கவும், நீர்மேல் நடக்கவும், தீ மேல் குளிக்கவும், இறந்தோரை உயிர்ப்பித்து; அ ரோடு உரையாடவும், இன்னும் குருடர், செவிடர், முடவர் ஆகிய அங்கவீனர்களையும், தீராத பெரு நோயுடையோரையும், தம் ஓதுதலினாலும், பார்வையின் சக்தியினாலும் சுகமாக்கும் வலிமை வாய்ந்த ஒரு மனிதனாக இருந்தாலும்கூட, அவன் சமீபம் நம்மில் யாராவது அடுத்து, 'ளுஹர்' 'அஸர்' 'மக்ரிப்' இந்த நேரங்களில், தொழுகையை அவன் தொழாமலிருந்தால் (ஹத்து) மார்க்கத் தண்டனை விதிக்க நமக்கு அனுமதி உண்டு; ஆனால், சூழ்நிலை அவ்வாறு செய்ய அனுமதிக்காவிடில், ''(அஊது பில்லாஹி மின் ஹாதஸ் ஷெய்த்தானி) இந்த ஷெய்த்தானுடைய தீங்கில் நின்றும் இறைவன்பால் காவல் தேடுகிறேன்;'' என்று சப்தமிட்டுக் கூறி, அவனை விட்டும் விலக வேண்டும். இப்படி நாம் கூறுவதைச் செவி மடுத்த ஒருவன் அவரைப் புகழ்ந்தும், நம்மை இகழ்ந்தும் செயல் புரிவானாகில், அவனைக் கதல் செய்வது மிக மேலானதாகும்;'' என்று இமாம் கஸ்ஸாலீ (ரஹ்)



இப்னு ஹஜர் (ரஹ்) போன்ற பெரும் மார்க்க நிபுணர்கள் (பத்வா) தீர்ப்புக் கூறியுள்ளார்கள்.

'மஜாலிசுல் அப்ரார்' என்ற நூலில், ஹஜ்ரத் பயாஸீது பிஸ்தாம் (ரஹ்) அவர்கள் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஒருவர் நீர்ப்பரப்பின்மேல் நடந்து சென்ற போதினும் சரி, அல்லது ஆகாயத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்த போதினும்சரி, விதி விலக்குகளிலும், ஷரீஅத்தைப் பேணிக் கொள்வதிலும், அவர் எப்படி என்பதை நீங்கள் நன்கு கண்டு கொள்ளுகின்ற வரையில், அவருடைய மாய வலைக்குள் சிக்காதீர்; ஒருவரைக் குறிப்பிட்டு ''இன்ன மனிதர், ஓர் இரவுக்குள் மக்கா நகர் போய் வருகின்றாரே?'' என்று அவர்களிடம் கேட்டதற்கு', 'ஷெய்த்தான் என்பவன் ஓர் இமைப் பொழுதில் கீழ்த் திசையிலிருந்து, மேல்திசைக்குப் போகவில்லையா? அப்படி இருந்தும் அவன் மீது அல்லாஹ்வின் நிந்தை உண்டாயிருக்கிறதே!' என்று பதில் சொன்னார்களாம்.

ஒரு பெண்ணை நிகாஹ் செய்து கொண்டவன், அவளோடு சேர்ந்து வெளிப்படையாக குடும்ப வாழ்க்கை நடத்தாமலும், ஒன்றாக இருக்காமலும், தனியாக ஒரு அறையில் இருந்து கொண்டு ''நான் ம திினால் குடும்ப வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டிருப்பானாயின் அவனை, உலகம் எவ்வாறு அறிவிலி - மூடன் என்று கேவலமாகப் பேசுமோ, அதைப் போன்றது தான் இந்த மூடர்களின் நிலைமையும்.

## அவனுக்கேன் ஜனாஸாத் தொழுகை

எவன் ஐங்காலத் தொழுகையைத் தொழவில்லையோ, அவன் இறந்துவிட்டால், அவன்மீது ஜனாஸாத் தொழுகையைத் தொழுவிக்க வேண்டாம்; மேலும் அவன் இறைவனின் சாபத்திற்குரியவனாக இருப்பதால், அவனை முஸ்லிம்கள் கபுருஸ்தானிலும் புதைக்க வேண்டாம். (கன்துல் அஃலம்)

'நவவி' இமாம் என்ற காஜா அவர்கள் கூறுகிறார்கள்:-

''தொழுகையை விட்டவனுடைய சாட்சியம், இஸ்லாமிய நீதித் தலங்களிலும், முஸ்லிம்கள் சார்பிலும், ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. பொதுமக்கள் கூடும் இடங்களில், 'நீங்கள் அவர்களுக்கு ஸலாம் சொல்வதும், அவர்களுடைய ஸலாத்திற்கு நீங்கள் பதில் சொல்லுவதும் கைக்கொள்ளத்தகாதது.'' (அன்றியும்)

தொழுகை இல்லாதவனை நம்பக்கூடாது; அவன் எப்பொழுதும் மோசம் பண்ணக்கூடியவன். மரணம் வரும்போது ஸகராத்ஹால் (மரணத் தறுவாய்) அவனுக்கு மிகக் கடுமையாக இருக்கும். நாசகரமான முட்புதர்களுக்கிடையில் சிக்குண்ட மெல்லிய பட்டுத்துணி இழுத்தெடுக்கப்படுவதுபோல், அவனது ரூஹ்( உயிர்) மிக்க நோவுடன் வெளியேறும். சரீரத்தைவிட்டு ஆன்மா பிரிந்தவுடன், அது மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கும். கொடுமை புரியும் பயங்கரத் தோற்றமுடைய அமரர்கள் அந்த உயிரை அணுகுவார்கள். துர்நாற்றத்தாலும், வேதனையாலும் கூக்குரல் போடும் நிலைமையில் அமரர்கள் அதை ஆன்ம லோகத்துக்கு கொண்டு செல்வார்கள். ஆன்ம லோகத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டாது. ஆகவே அது நிர்க்கதியாகி, தன் சரீரத்தின் பக்கம் திரும்பிவிடும், அவனது சரீரம் கபுறுக்குள் அடக்கப்பட்டவுடன், கபுரின் மண் மிகத் திருத்தமான மொழிகளால் அவனை நோக்கி ''இறைவனின் கடமைகளை உலகத்தில் அலட்சியம் செய்தவனே! என்மேல் நீண்ட காலம் வாழ்ந்திருந்தும் தொழுகையை வீணாக்கியவனே! தொழுகையைவிட்டு உலக காரியங்களில் ஈடுபட்டவனே! உனக்குக் கேடு உண்டாகட்டும்; உனது இருப்பிடம் கெடுதலாகட்டும்; பெரும் மலைகளாலும், தாங்கொணாத வேதனைச் சுமையை நீ இப்போது என்னிடம் காணப்போகின்றாய்!'' என்று கூறிய பின், அவனை அழுத்தமாக நெருக்கும்; அப்போது அவனது எலும்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ளும்.

நண்பர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த நிலைமையில் ஒருவன் ஆகும் நிலையில், அவன் அனுபவித்த இன்ப சுகங்கள் அவனுக்கு ஏதேனும் உபகாரம் செய்யக்கூடுமா? அல்லும் பகலும் அவன் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வங்கள் ஏதுக்குதவும்? அவனது அன்பு நிறைந்த உற்றார், உறவினர், அவனுக்கு எவ்வளவு தூரம் உதவுவார்கள்? ஆகவே, இறைவன் நமக்குக் கடமைப்படுத்திய ஐந்து நேரங்களின் தொழுகைகளை, உடம்பால் ருகூஉ, ஸுஜூது, ஓதுதல் முதலியவைகளால் நிறைவேற்றுதல் வேண்டும்.

**"விசுவாசிகளே! நீங்கள் குனிந்து சிரம் பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள்; நன்மையே செய்துகொண்டிருங்கள்; அதனால் நீங்கள் சித்தியடையலாம்."** **(22: 77)**

**ஆண்டவன் கற்பித்தபடி தொழுகையைக் கடைப்பிடிக்கா விட்டால், இறுதி நாளின் சோதனைகளிலிருந்து எந்த விதத்தாலும் தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனென்றால், உங்களுடைய**



நன்மையைக் கருதியே தொழுகையை ஆண்டவன் உங்கள்மீது கடமையாக்கி இருக்கின்றான். ''இந்தத் தொழுகையை நிறைவேற்றா விட்டால், ஆண்டவனுக்கு அது எந்தவித நஷ்டத்தையும் விளைவிக்காது, நீங்களே உங்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கிக் கொள்கிறீர்கள் என்பதற்காகவே'' ஆண்டவன் உங்கள்மீது கோபமடைகிறான். ஆகவே, இதை நன்குணர்ந்து தொழுகையைப் பேணிக் கொள்வீர்களாக.

இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்:- ''எவன் ஒருவன் இறுதிநாளில் முஸ்லிமாக அல்லாஹுவை சந்திக்க விரும்புகின்றானோ, அவன் பாங்கு சொல்லக் கேட்டவுடனேயே கட்டாயக் கடமையான ஐந்துவேளைத் தொழுகையை ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுவதற்கு விரைந்து கொள்வான். ஏனென்றால், ஆண்டவன் நம் நபியவர்களுக்கு நேர் வழியையே சன்மார்க்கமாக்கினான். இந்த ஐங்காலத் தொழுகை நேர்வழியாகிய சன்மார்க்கத்தில் முதன்மையானது. ஜமாஅத்துடன் சேர்ந்து தொழ சந்தர்ப்பமற்றவர்மட்டிலும், வீட்டில் தொழலாம்; ஆனால், அதுபோன்று நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தொழுவதால், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சுன்னத்தை விட்டதுமல்லாமல், அதன் பலனை இழந்தவர்களாகவும் ஆவோம்.

மேலேகூறப்பட்ட நான்கு ஹத்யாக்களும், 'ஸிராத்துல் முஸ்தகீம்' என்னும் பாலத்தில், நேரான பாதையில் சீராக நடந்து செல்பவருக்குக் கடமையான நல் வணக்கங்களாகும். இதனைச் செயலளவில் செய்து, அதற்குரிய நற்பயனைப் பெற்றுக் கொள்வது, 'வாஜிபு' என்று ஹாமீம் என்ற சிறப்புப் பெயருடைய நமது நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

# 7-வது தகுதியாளர் மீஸான் (தராசு)

## 15

எல்லா அமலுக்கும் ரூஹாகிய
இக்லாஸெனும் கலப்பறுத லொன்று
அல்லாஹ்வை எந்த ஹாலிலையும்
அதிகமாய் திக்ரு செய்வதொன்று
நல்லார் பொல்லாரெல் லாருடனும்
நற்குணமாக நடப்ப தொன்று
சொல்லால் செயலால் நோவினைவிடுதல்
தூக்கும் தராசுக்கு ஹத்யாவென்றார்.

**அரும்பதவுரை:-**

*அமல் =நற்செயல், ரூஹு = ஆன்மா. இக்லாஸ் = கலப்பறுதல். ஹால்-நிலை. திக்ரு = தியானம்.*

## 'மீஸான்' (தராஸின்) விளக்கம்

وَنَضَعُ الْمَوَازِيْنَ الْقِسْطَ لِيَوْمِ الْقِيٰمَةِ فَلَا تُظْلَمُ نَفْسٌ شَيْئًا
وَاِنْ كَانَ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ اَتَيْنَا بِهَا ۗ وَكَفٰى بِنَا حَاسِبِيْنَ

**''மறுமை நாளில் சரியான தராசையே நாம் நாட்டுவோம். எந்தவொரு ஆத்மாவுக்கும் (யாதொன்றைக் குறைத்தோ, கூட்டியோ) அநியாயம் செய்யப்படாது. (நன்மையோ, தீமையோ) ஒரு கடுகின் அளவு இருந்தபோதிலும், அதனையும் (நிறுக்கக்) கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும்.''** *(வேறொருவரின் உதவியும் நமக்குத் தேவையில்லை.)*

அல்லாஹுத் தஆலா ஆலம் என்னும் உலகத்தை (ஆலமுல் அஜ்ஸாம்.) சடலோகம் என்றும், (ஆலமுல் அர்வாஹ்) ஆன்மலோகம் என்றும், இருவகையாகப் படைத்து, ஆலமுல் அஜ்ஸாமை, ஆலமுல் அர்வாஹ்வுக்கு (மறு உலகுக்கு) வேண்டிய நற்சாதனங்களை, இந்த உலகத்திலேயே தேடிக் கொள்வதற்காக வேண்டி, இந்த உலகத்தில் இருப்பதற்காக ஒவ்வொரு கால அளவைக் குறிப்பிட்டான். அந்தக்



கால வரையறை கழிந்து போவதற்கு (அஜல்) மரணம் என்று சொல்லப் படும். அந்த காலம், தன் தவணையைவிட்டும் அதிகரிப்பதோ, குறைவதோ இல்லை. குறிப்பிட்ட அந்தக் காலம் வரும்போது உடலைவிட்டும் உயிர் பிரிக்கப்படுகிறது. அவர் நல்லடியாராயின், அவரது ஆன்மா சுகமான தலங்களிலும், வழிகெட்டவனாயின், அவனது உயிர் துயருற்ற தலங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். நன்மை தீமைகளுக்குக் கணக்குக் கேட்டுப் பதிலளிக்கும் நாளாகிய (கியாமத்) இறுதிநாளில், அந்த உயிர்களை மீண்டும் அந்தந்த உடல்களில் புகவிட்டு எழுப்பப்படும். இவ்வாறு எழுந்த ஒவ்வொருவரும் உடல் தன் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் அஃமால் நாமா என்னும் செயல்ப்பட்டியலைப் பார்வையிடுவார். அஃது ஒவ்வொருவரும் உலகத்தில் நடந்துகொண்ட செயல்களை எல்லாம், அவரவருக்கும் நினைப்பூட்டும். அவர் செய்த பாவ புண்ணியங் களுடைய நிறையை அவற்றிற்குத் தகுமான மீஸான் என்னும் ஓர் தராசில் நிறுத்து, அவனுக்குக் காட்டப்படும்; அந்தத் தராசாகிறது இந்த உலகத்தில் காணப்படும், தராசுகளைப்போல் துலாக்கோலும், ஒரு நாக்கும், இரு பெரிய தட்டுகளும் உடையதாக இருக்கும். ஒரு தட்டு சுவர்க்கத்தளவிலும், மற்றது நரகத்தளவிலும் சார்ந்து நிற்கும். அந்தத் தராசை 'ஜிப்ரீல்' (அலை) அவர்கள் தம் கையில் கொண்டவர்களாக, அதன் நாக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சாட்சியத்துக்காக 'மீக்காயீல்' (அலை) அவர்கள் பக்கத்தில் நிற்பார்கள்.

உலகத்தில் மனிதர்களின்மீது இறைவனால் சாட்டப்பட்டுள்ள 'கிறாமுன் காத்திபீன்' என்ற இரு அமரர்கள், அவரவர் நன்மை தீமைகளைக் குறித்து எழுதிய இரு பட்டோலைகளும் அப்போது தராசில் வைத்து நிறுக்கப்படும். கனமான தட்டு தாழும், கனம் குறைந்த தட்டு உயரும், எவர்களுடைய நன்மைத் தட்டு முறுகுமோ, அவர்களுக்கு முன்புறமாக, வலது கையிலும், எவர்களுடைய தீமைத் தட்டு முறுகுமோ, அவர்களுக்குப் பின்புறமாக இடது கையிலும் கணக்கு ஒப்பிக்கப்படும்.

**''ஒவ்வொரு மனிதனின் செயலைப்பற்றிய (விரிவான தினசரிக்) குறிப்பை அவனுடைய கழுத்தில் மாட்டியிருக்கிறோம். மறுமை நாளில் அதனை அவனுக்கு ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம். (அதனை) விரித்துப் பார்ப்பான். (17: 13) (அதுசமயம் அவனை நோக்கி) இன்றைத் தினம் உன்னுடைய கணக்கைப்பார்க்க நீயே போதுமானவன். ஆகவே உன் (குறிப்புப்) புத்தகத்தை நீ படித்துப்பார் (என்று கூறுவோம்).''**

*(17: 14)*

**"ஆகவே (அந்த நாளில்) எவனுடைய வலது கையில் அவனுடைய பட்டோலை கொடுக்கப்படுகின்றதோ, அவன் மிக்க இலகுவாகக் கேள்வி கணக்கு கேட்கப்படுவான். (84: 8) அவன் சந்தோஷப் பட்டவனாக (சுவன பதியிலுள்ள) தன்னுடைய குடும்பத்தார்களிடம் திரும்புவான்.** *(84-7-9)*

**எவனுடைய பட்டோலை, அவனுடைய முதுகுப்புறம் கொடுக்கப் பட்டதோ, அவன் (தனக்குக்) கேடுதான் என்று சப்தமிட்டுக்கொண்டே நரகத்தில் நுழைவான்.** *(84- 10: 12)*

நபி:மார்களின் அமல்களும், கேள்வி கணக்கின்றிச் சுவர்க்கம் புகுவோரின் அமல்களும் நிறுக்கப்படமாட்டா என்று கூறப்படுகிறது.

நபிமார்கள், வலிமார்கள், சாலிஹீன்கள், ஷுஹதாக்கள் ஆகிய மேதாவிகளோடு நாமும் சுவன வாழ்வை அடைவதற்கு, நமது நன்மைப் பட்டோலை கனமாக இருக்கவேண்டுமன்றோ! அதற்காக முன் கூறப்பட்ட ஹத்யாக்களையும், பின்னால் கூறப்படும் ஹத்யாக்களையும், நாம் பயபக்தியோடு நடப்பில் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். அவற்றில் தராசுக்குரியதான ஹத்யாக்களையும் நன்கு தெரிந்துக் கடைப்பிடித்து உங்கள் நன்மைகளைப் பெருக்கிக் கொள்வீர்களாக.

நீங்கள் அறியாமையால் செய்த பாவங்களுக்கும், விட்டுப் போன வணக்கங்களுக்கும் பரிகாரமாக, இறைவன்பால் பாவமன்னிப்புக் கோரி, நன்மைகளைச் செய்து வருவீர்களாக.



# தராசுக்குரிய ஹத்யாக்கள் நான்கு

## 1-வது ஹத்யா
## இக்லாஸ் (தூய்மை)

وَمَآ أُمِرُوٓا إِلَّا لِيَعْبُدُوا ٱللَّهَ مُخْلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ
وَيُقِيمُوا ٱلصَّلَوٰةَ وَيُؤْتُوا ٱلزَّكَوٰةَ وَذَٰلِكَ دِينُ ٱلْقَيِّمَةِ

**"இறைவனுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி, (மற்ற மார்க்கங்களைப்) புறக்கணித்து, அல்லாஹ் ஒருவனையே (அந்தரங்க சுத்தியோடு) வணங்கி, தொழுகையையும் கடைபிடித்து, ஜக்காத்தும் கொடுத்து வருமாறே அன்றி (வேறெதுவும் இந்தத் தூதர் மூலம்) ஏவப்படவில்லை. இதுதான் நிலையான சட்டங்களுடைய மார்க்கம்."** *(98 - 5)*

அல்லாஹ் அருளிச் செய்த இந்த வசனம் வணக்கத்தில் வேறு நாட்டங்கள் எதுவும் கலக்காதபடி, அதை அல்லாஹு தஆலாவுக்காக வேண்டியே, நிறைவேற்ற வேண்டுமென்றும் தெளிவுபடுத்துகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஆது (ரலி) அவர்களை நோக்கி, "ஓ மஆதே! நீர் இக்லாசுடன் (களங்கமற்ற உள்ளத்துடன்) அமல் செய்யும்; அப்படிச் செய்வீராயின் குறைந்த அமலே உமக்குப் போதுமானது" எனத் திருவுளமானார்கள்.

வணக்கத்தில் இக்லாசைக் கெடுக்கிற காரணங்களில் ஒன்று, மக்களின் பார்வையாக இருப்பதுடன், இன்னும் பல காரணங்களும் இருக்கின்றன.

மஃறூபுல் கர்கீ (ரலி) அவர்கள், தங்களைச் சவுக்கால் அடிக் கிறவர்களாகவும், இருதயத்தை நோக்கி, "ஓ நப்சே! இக்லாசுடன் நட, அவ்விதம் நடப்பாயாயின் ஈடேற்றம் பெறுவாய்," என்று அடிக்கடி சொல்பவராகவும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் இமாம் ஹுசைன் (ரலி) அவர்களின் புதல்வர் ஜெய்னுல் ஆபிதீன் (ரலி) அவர்கள், தொழுவதற்காக ஒளுச்செய்யும் போதெல் லாம், மேனி மஞ்சள் நிறமாகிவிடும், முசல்லாவில் நின்றதும், பதட்டம் ஏற்பட்டுவிடும். "ஏன் பதறுகிறீர்கள்" என்று கேட்டால், "ஓ!

மனிதர்களே!' யாருடைய சமூகத்தில் நின்று 'முனாஜாத்து' என்னும் இரகசியம் பேசுகிறேன் என்றறிவீர்களா? அல்லாஹ்வுடைய சமூகத்தில் நிற்கிறேன். ஆகையால் பதட்டம் வருகிறது'' எனக் கூறுவார்கள்.

ஒரு சமயம் இவர்கள் பள்ளியில் ஹஜ்ஜூது செய்து கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் வீட்டில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. மனிதர்கள் ஓடோடி வந்து, ''நாயகமே! உங்கள் வீட்டில் நெருப்புப் பிடித்திருக்கிறது'' என்று சத்தமிட்டார்கள். இதைக் கேட்டு அவர்கள் கொஞ்சமும் மனம் வருந்தவில்லை. நெருப்பு, தானாகவே அணைந்துவிட்டது. இதுபற்றி அவர்களிடம் கேட்டதற்கு ''பெரிய நெருப்பு என்னும் நரகம் என்னை, இந்தச் சிறிய நெருப்பைவிட்டும் மறக்கடித்துவிட்டது'' என்று பதில் கூறினார்கள். என்னே! இறைவன் மீதுள்ள அச்சம்.

தொழுகையில் உள்ளச்சமாக கல்பை, அல்லாஹ்வுடைய சமூகத்தில் நிற்கிறோம். அவனை நாம் பார்க்காவிட்டாலும், நம்மை அவன் பார்த்தவனாகவே இருக்கின்றான், என்றெண்ணி 'இக்லாஸ்' மனமொத்தவராகத் தொழவேண்டும்.

''தொழுகையின் உயிரானது, உள்ளச்சமாக இருக்கும்.'' அதாவது உறுப்புகள் ஒடுங்கும்படியாக்கி, மறதியைவிட்டும் நீங்கி கல்பில் உள்ளத்தில் பயம் வைத்து, ஓதுகிற வழிமுறைகளையும், செய்கிற செயல்களையும் மறந்து விடாமல் ஞாபகத்துடன் நிறைவேற்ற வேண்டும். இதுவே இக்லாஸாகும்.

''அல்லாஹ்வை அன்றி, வேறு ஒன்றை நாடாமல், தம் வாழ்நாள் முழுவதிலும், ஓர் அடியாவது இக்லாசுடன் எடுத்து வைத்தவன் எவனோ, அவனே பாக்கியசாலி'' என சுலைமான் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**''அல்லாஹுவுக்கு எதனையும் இணையாக்காதீர்கள்.''** *(2: 22)*

இணைகள் என்பன, முஷ்ரிக்குகள் (விக்ரக ஆராதனைக்காரர்கள்) மஜூசிகள் (நெருப்பை வணங்குபவர்கள்) முதலியவர்களால், தெய்வங்களாகப் பாவிக்கப்படும் விக்கிரகங்கள், நட்சத்திரங்கள், நெருப்பு இவற்றை உணர்த்தும்.

மேற்கண்ட திருவாக்கியம் முஃமின்களையும் நோக்கிக் கூறப்பட்ட தாகவும் இருப்பதால், அவர்களும் தங்கள் வணக்கம், ஒழுக்கங்களில், ஆண்டவனுக்கு அன்னியமாகியவைகளில் பற்றுக்



கொள்ளாமல், இறைவனையே நாடி இக்லாசுடன் அமல் செய்தல் வேண்டும் என்பது தெளிவு.

''இந்தவித தெளிவான மனப்பான்மை எல்லாவகை வணக்க ஒழுக்கங்களுக்கும் உயிர் போன்றதாகும்'' என இமாம்கள் கூறுகிறார்கள். பிறர் மெச்ச வேண்டுமென்று வணங்குபவன், பிறரை ஆண்டவனுக்கு இணைவைப்பவன் போலாகிறான்.

''இக்லாசானது எனது இரகசியங்களில் மிக அரியதோர் இரகசியமாகும். அதை என் அடியார்களுள், நான் நாடியவரின் சிந்தையில்தான் வைப்பேன்'' என்று இறைவன் ஹதீது குதுஸியில் கூறியுள்ளான்.

இஹ்யா உலூமுத்தீன் என்ற நூலில் எழுதப்பட்டிருப்பதாவது:

பனீ இஸ்ராயீல்களில் ஒரு ஆபித் இருந்தார். அவர் இரவு பகலெனப் பாராது இபாதத் (வணக்கத்)தில் ஈடுபட்டிருந்தவர். அவரிடம் சிலர் அணுகி, அறிவின்மையால் ஒரு வர்க்கத்தார் ஒரு மரத்தை வணங்கி வருவதாக முறையிட்டார்கள். இதைக் கேட்டதும், அந்த ஆபிதுக்கு ஆவேசம் தாங்கமுடியாமல், தோளில் கோடாரியை போட்டுக்கொண்டு, அந்த மரத்தை வெட்டி வீழ்த்துவதற்காக விறுவிறு என்று சென்று கொண்டிருந்தார். இடைவழியில் ஷெய்த்தான் ஒரு கிழவனைப்போல் வேடம் தரித்து, இந்த ஆபிதை நெருங்கி எங்கே செல்கிறீர்?'' என்று கேட்டான், அந்த மரத்தை வெட்டி வீழ்த்துவதற்காக'' என்றார் ஆபிது. இதில் என்ன பிரயோசனம். நீர் உமது பொன்னான இபாதத்தை விட்டு விட்டு இந்த வீணான காரியத்திற்காக வந்திருக்கிறீரே! திரும்பிச்சென்று இபாதத்துச் செய்வீராக!'' என்றான் ஷெய்த்தான். ''இதுவும் ஒரு இபாதத்துத் தான் என்று ஆபிது மறுமொழி கூற, நான் ஒருக்காலும் அந்த மரத்தை வெட்டவிடமாட்டேன்'' என்று ஷெய்த்தான் வழி மறித்தான். இரு வருக்கும் இழுபறி நடந்தது. ஆபித் ஷெய்த்தானை வீழ்த்தி, அவன் நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டார். இயலாமல்போன ஷெய்த்தான் ஏளனமாக நகைத்து ''ஒரு செய்தி சொல்கிறேன் 'நீர் எழுந்திரும்' என்று ஆபிதைக் கெஞ்சினான். ஆபித் எழுந்ததும், இந்த மரத்தை வெட்டும்படி இறைவன் உம்மீது கடமையாக்கவுமில்லை, நீர் இந்த வேலைக்காக நியமிக்கப்படவுமில்லை, அவன் நாடினால் ஒரு நபியின் வாயிலாக இந்த வேலையைச் செய்து கொள்வான். அல்லது காற்று மழையால் அதை அழித்துவிடுவான்'' என்று ஷெய்த்தான்

தனது பழைய பல்லவியை பாடத் தொடங்கியதும்; ''இதை நான் வெட்டியே தீருவேன்'' என்று ஆபித் துணிந்தார். ஷெய்த்தான் தடுத்தான். திரும்பவும் இருவருக்கிடையில் அடிபிடி நடந்தது. இந்த முறையும் ஆபித் ஷெய்த்தானை வீழ்த்தி, அவன் நெஞ்சில் ஏறி உட்கார்ந்துகொண்டார். ஒன்றுக்கும் வழியில்லாது, ஷெய்த்தான் வேறொரு தந்திரத்தைக் கையாண்டான். ''ஆபிதே! நீர் பரம சாது, குடும்பப்பாரமும் உமக்கு இருக்கிறது. நீர் மாத்திரம் என் சொல்லைக் கேட்டு, இந்த வேலையை விட்டுவிடுவீரானால், உமக்கு அனுதினமும் மூன்று பொற்காசுகள் உமது தலைமாட்டில் கொண்டுவந்து வைத்து விடுவேன். அதன் மூலம் உமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதோடு, சுற்றத்தாருக்கும் கொடுத்து உதவலாம்; ஏழை எளியவர்களுக்கும் தருமம் செய்யலாம். இவ்வாறு எத்தனையோ நன்மையான காரியங்கள் செய்யலாமல்லவா? மரத்தை வெட்டுவதில் ஒரு நன்மைதானே இருக்கிறது'' என்றான். ஆபிதும் ஏமாந்துபோய் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டார். இரண்டு நாட்கள் தொடர்ந்து பொற்காசுகள் இருந்தன. மூன்றாவது நாள் காணப்படவில்லை.

ஆபித் கோபப்பட்டவராக கோடாரியை முன் போல் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு வேகமாகச் சென்றார், பழையபடியும் அதே கிழவன் வழிமறித்துத் தகராறு செய்தான். இருவருக்கும் குஸ்தி நடந்தது. இந்த முறை ஆபிது தோற்றுப்போனார். ஷெய்த்தான் ஆபிதின் நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டான். ஆபித் அதிர்ச்சி அடைந்தவராக, இது ஷெய்த்தான் என்று உணர்ந்து ''இந்த முறை என்னை வெல்வதற்குரிய காரணம் யஃது?'' என வினவினார். ''ஏற்கெனவே நீர் என்னை யார் என்று புரிந்து கொள்ளவில்லை. முதலிரண்டு முறையும் நீர் இறைவன் பொருத்தத்தைக் கருத்தில் கொண்டே, என்னுடன் போராடினீர். இறைவன் உமக்கு வெற்றியை நல்கினான். இந்த முறை தங்கக் காசுகளின் மீது விருப்பத்தை உமக்கு உணர்த்தினேன். அது வெற்றியைத் தடுத்து விட்டது. எனவே, நீர் தோற்றுப்போனீர்'' என்று விளக்கி வைத்தான். உண்மையில் எந்தக் காரியமும் இக்லாசுடன், அல்லாஹ்வுக்காகச் செய்யப்பட்டதானால் அதற்கு அலாதியான சக்தி கிடைக்கவே செய்கிறது என்பதை இந்தச் சம்பவம் தெளிவுபடுத்துகிறது.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் சொல்லியிருப்பதாவது-

''இன்னவன் இல்லாதுபோனால், இன்ன விபத்து நமக்கு நேரிட்டிருக்குமே! நம்முடைய நாய் வாசல் பக்கம் நின்று குரைக்கா



விட்டால், நமது பொருள்கள் களவு போயிருக்குமே!'' என்று நீங்கள் சொல்லாதீர்கள். இந்த மாதிரியான பேச்சுகள் இக்லாசுக்கு முற்றும் விரோதமானவை. ஏனெனில், அவற்றால் நாம் இணை வைத்ததற்கொப்பாவோம்'' என்பதாகும்.

இறைவா! நாங்கள் உன்னை இக்லாசோடு வணங்க அருள் புரிவாயாக.

## 2-வது ஹத்யா
## அல்லாஹ்வை அதிகமாக திக்ரு செய்தல்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا ۝ وَسَبِّحُوهُ بُكْرَةً وَأَصِيلًا

**''விசுவாசிகளே! அல்லாஹுத்தஆலாவை திக்ரு செய்யுங்கள்; (அதுவும்) அதிகமாக திக்ரு செய்யுங்கள்: காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்து வாருங்கள்.''**

திருமறையில் ஒவ்வொரு பொருளும் அல்லாஹ்வை தஸ்பீஹ் (திக்ரு) செய்கிறதேயொழிய வேறு இல்லை,' என்ற ஆயத்தின் தப்சீரில், இப்ராஹீமுன்னுகஈ (ரஹ்) அவர்கள் கல், கட்டி, மரம், மட்டை முதலிய பொருட்களெல்லாம் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்கின்றன. வாசலுடைய சப்தம் உள்பட,'' எனக்கூறி, அதற்கும் விளக்கமும் தந்துள்ளார்கள்:-

'பேசக்கூடிய பொருட்கள் சொல்லாலும், பேசமுடியாத பொருட்களெல்லாம் செயலாலும் தஸ்பீஹ் செய்கின்றன' என்றவாறு.

**''திட்டமாக தொழுகையானது, வெறுப்புக்குரியவைகளையும், பாவங்களையும் நீக்குகின்றது; இன்னும் அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து அவனை) திக்ரு செய்துவருவது, மிகப் பெரிதாக இருக்கிறது.''** *(29: 45)*

இந்த ஆயத்தின் கருத்தாவது: எல்லாவித வணக்கங்களின் நோக்கமும், அல்லாஹ்வுடைய தியானமேயாகும். தொழுகையானது, இஸ்லாத்தின் தூணாக இருக்கிறது. தொழுகையைக் கொண்டு நாடப்பட்ட பொருள், அல்லாஹ்வை நினைவில் வைத்துச் செய்யும் திக்ரும், அதைச் செய்து வருவோன், அல்லாஹ்வின் அடிமை என்றும் நிலை நிறுத்துவதுமே. இன்னும்:-

குர்ஆன் ஷரீபை ஓதுவது, எல்லா வணக்கங்களையும் விட மிக மேலானது. ஏனென்றால், அது ஒப்பற்ற அல்லாஹ்வோடு நேருக்கு நேர் உரையாடுவதாகவும், அவனை நினைவூட்டுவதாகவும் இருக்கிறது.

நோன்பு நோற்பதால் மன இச்சை மாறுகிறது. எப்போது மனமானது இச்சைகளென்ற குப்பைகளை விட்டும் சுத்தமாகின்றதோ, அப்போது, அது அல்லாஹ்வுடைய திக்ரைக் கொண்டு நிரம்புகிறது. இச்சைகளால் நிறைந்திருக்கிற மனத்தைக் கொண்டு திக்ரு செய்ய முடியாது. அவ்வாறு செய்தாலும், அதில் திக்ரின் குணங்கள் காண்பதரிது. இன்னும்:-

பைத்துல்லாஹ்வில் ஹஜ்ஜைக் கொண்டு நாடப்பட்டது:- அந்த பைத்துல்லாஹ் என்னும் வீட்டுக்குடையவனை நினைப்பதுவும், அவனைக் கண்டு தரிசிக்க ஆசையை எழுப்புவதுமாகும், மேலும் ஜக்காத்தின் உத்தேசமும், நமது பொருளில், தியாகத்தால் ஆண்டவனைப் பற்றிய நினைப்பை ஞாபகப்படுத்தி மனத்தை சுத்தப்படுத்துகிறது. ஆகவே, எல்லா வணக்கங்களினுடையவும் சாராம்சம், அல்லாஹுவுடைய திக்ரு என்றே கூறலாம். இஸ்லாத்தின் மூலப் பொருளாகிய **'லாஇலாஹ இல்லல்லாஹு'** என்ற கலிமாதான் திக்ருகளுக்கெல்லாம் தலை சிறந்ததாக இருக்கிறது. மற்றும் எல்லா வணக்கங்களும், இந்த 'லாஇலாஹ இல்லல்லாஹு' என்ற திக்ரை உறுதிப்படுத்துகிறன.

**'லாஇலாஹ இல்லல்லாஹு'** என்ற கலிமா எனது கோட்டையாகும். அதை ஒருவன் திக்ரு செய்தால், அவன் அந்தக் கோட்டைக்குள் புகுந்தவனாகிறான்; எனது ஆக்கினைகளில் இருந்தும் அச்சம் தீர்ந்தவனுமாகின்றான். *(ஹதீது குதுஸி)*

அல்லாஹ்வை திக்ரு செய்வதால் ஏற்படும் நன்மை என்ன வென்றால், எவன் திக்ரு செய்கின்றானோ? அவனை அல்லாஹ்வும் நினைவு கூர்கின்றான். இதனினும் மிகப் பெரிய நன்மை வேறு என்ன வேண்டும்? இதனாலே தான் அல்லாஹ் மேலும் கூறுகிறான்:-

**''நீங்கள் என்னைத் தியானித்துக்கொண்டேயிருங்கள். நானும் உங்களை நினைத்து (அருள் புரிந்து) வருவேன்.''**

*(2: 152)*

இறைவன் நம்மோடு நெருங்கும் இந்த இணைப்பு, இடை விடாது இருப்பதற்கு, தியானத்தைக் கைவிடாது தொடர வேண்டும்.



**''அல்லாஹ்வுடைய திரு நாமத்தை அதிகமாக திக்ரு செய்யும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் (பாவ) மன்னிப்பையும், மகத்தான கூலியையும் சித்தப்படுத்தி வைத்திருக் கின்றான்.''**

*(33 - 35)*

இனிய மொழிகளால், உள்ளுணர்ச்சியோடும், உதட்டால் தெளிவாக உச்சரித்தும், தியானிப்பதே 'திக்ரு' எனப்படும். இந்த இரு வகையாலும், ஒன்றுபடாது வெறும் வாயால் மட்டும் திக்ரு செய்வதால், அது 'திக்ரு' அல்லவென்றும், அது தூக்கத்தில் வாய் உளறுவது போலாகுமென்றும், வாயால் சொல்லாமல் நினைவால் மட்டும் 'திக்ரு' செய்தால், 'அது ஊமையனின் நினைப்புப் போலாகும்' என்றும் அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆனால், மனத்தால் மட்டும் 'திக்ரு' செய்து பலன் அடைய வேண்டுமாயின், அந்த மனம் இக்லா சால் பரிபக்குவம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், நினைவென்பது உதிப்பு. உதிப்பு நாட்டத்தைத் தழுவி நிற்கும். நாட்டம் இராதத்தாகும். இராதத் என்பது ஆலத்திற்குக் கருவூலமாக இருப்பதால் முற்றும் 'இராதத்' மயமான நிலையை அடைந்த ஞானிகளுக்குத்தான் மேற்படி மனத்தின் திக்ரால் மிக்க பலனுண்டாகும்.

இரசூல் நாயகம் (ஸல்) கூறியுள்ளாளர்கள்:-

''அல்லா(ஹ்)வை 'திக்ரு' செய்கிறவனுக்கும், செய்யாதவனுக் கும் உதாரணமாவது: 'திக்ரு' செய்பவன் உயிருள்ளவன் போலும், செய்யாதவன் உயிரற்றவன் போலும் ஆவான்; மேலும் அல்லா(ஹ்)வை 'திக்ரு' செய்யாது மறந்திருப்போர்களின் கூட்டத திலுள்ள ஒருவன் 'திக்ரு' செய்வதற்கு உதாரணமாவது, காய்ந்து பட்டுப்போன மரங்களுக்கிடையில், ஒரு தழைத்த மரம் காணப் படுவது போலாகும். ஆதமின் மக்கள் நற்கதி அடைவதற்குரிய வணக்கங்களில், தலைசிறந்தது திக்ரேயாகும். அதாவது, எந்த வணக்கமும் திக்ரைப்போல் ஈடேற்றத்தைக் கொடுக்காது. ஒருவன் தனது மடியிலிருந்து வெள்ளிக்காசுகளை அள்ளி ஏழைகளுக்குக் கொடுக்கின்றான்; மற்றொருவன் 'திக்ரு' செய்து கொண்டே இருக்கிறான். இந்த இருவரில் 'திக்ரு' செய்பவனே, சிறந்த வணக்க முடையவன் ஆவான்.''

''ஒருவன்' ஒரு கூட்டத்திலிருந்து என்னை 'திக்ரு' செய்தால், நான் அதைவிடச் சிறந்த அமரர்கள் கூட்டத்திலிருந்து, அவனைத் 'திக்ரு' செய்வேன்'' என்று அல்லாஹ் ஹதீது குதுஸியில் கூறியுள்ளான்.

அல்லாஹ் குர்ஆனில், தொழுகையை திக்ரு என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிறான். அது எவ்வாறெனில்:-

**''அல்லா(ஹ்)வை திக்ரு செய்வது, எல்லா வணக்கங்களிலும் மேலானது''** என்பதாகும்.

இந்தத் திருமறை வாக்கியத்தின் வெளிப்படையான கருத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, சிலர் தொழுகையை விட திக்ரே மேல் என்றும், திக்ரை நடத்திக் கொண்டிருந்தால் போதும் என்றும், தொழுகையை விடுவதால் குற்றமில்லை என்றும் நினைக்கிறார்கள். இது முழுக்க முழுக்கத் தவறு. இது சில போலி ஞானிகளின் பொய்க் கூற்றுமாகும்.

''தொழுகை, இல்மு, (கல்வி) பாங்கு, குத்பா, ஸலவாத்து, துஆ, இஸ்திக்பார், (பிழை பொறுக்கத் தேடுதல்) திக்ரு ஆகிய எல்லாச் செயல்பாடுகளும் சேர்ந்தே, பொதுவாக 'திக்ரு' எனப்படும் என்று, இறைவன் ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறியுள்ளான்.

**'வலதிக் ருல்லாஹி அக்பர்'** என்றதன் உரையில் தொழுகைக்குள் செய்யப்படும் திக்ரு, மிகவும் மேலானது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதனால் தொழுகை வேளை தவிர, மற்ற நேரங்களில் செய்யப்படும் திக்ரை விட தொழுகை வேளையில் செய்யப்படும் திக்ரு மிகவும் ஏற்றம் என்பதே கருத்து.

ஒவ்வொரு மனிதனும், தாம் சதாவும் அல்லாஹ்வின் முன்னிருப்ப தாக எண்ணிக் கொள்வதுடன், தாம் அல்லாஹ்வுக்காகவே உயிர் வாழ்வதாகவும் கருதவேண்டும். நபிகள் கோமான் (ஸல்) அவர்களது தூய்மை பொருந்திய வாழ்க்கையானது, இதற்கோர் சிறந்த முன்மாதிரியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் இருக்கும் போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும் போதும் அல்லாஹ்வின் ஞாபகத்திலேயே மூழ்கியிருப்பார்கள். எந்த வேலையை ஆரம்பிப்ப தாயினும் முதலில் **'பிஸ்மில்லாஹ்'** என்னும் அல்லாஹ்வின் திரு நாமத்தைக் கொண்டே ஆரம்பிப்பார்கள். இராப்பகல் காலங்களில், எட்டு முறை ஒளுச் செய்துகொண்டு தூய்மையான உடை, நறுமண(வாசனை)துடன் தொழுகையை நிறைவேற்றுவார்கள். இராக்காலங்களில் அதிகமாக வணங்குவதற்கு, இடுப்பை பக்கடடிக் கொள்ளுவார்கள். உலகம் முழுவதும் நித்திரையில் மூழ்கி இருக்கும்போது, தங்களுடைய மனமும், நாவும் அல்லாஹ்வைத்த ஆலயவை ஞாபகப்படுத்துவதில் சந்தோசம் அடைந்து கொண்டி



ருக்கும். அல்லாஹ்வின் தியானத்தில் அதிக நேரம் நிற்பது கொண்டு கால்களில் வீக்கமேற்பட்டுவிடும். இவ்வளவு வணக்கத்திற்குப் பின் படுக்கையின் பக்கம் வருவார்களாயின், 'குர்ஆன் ஷரீப் ஓத ஆரம்பித்துவிடுவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் குர்ஆன் ஷரீப் ஓதுவதை மக்கள் செவியுறுவார்களாயின், அப்படியே மனம் உருகிப் போய்விடுவர். சில சமயம் இராக்காலங்களில் கபுருஸ்தான்களுக்குச் சென்று கண்ணீர் வடிப்பார்கள். வேதனையைப்பற்றிக் கூறப் பட்டிருக்கும் ஆயத்துகள் இறங்கும் போது, மனம் சஞ்சலத்தோடு அழு வார்கள். சஹாபாக்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தச் சம்பவத்தைக் கண்டு, ''யாரசூலுல்லாஹ் தாங்கள் அல்லாஹ்வின் ரசூலாக இருக்கும் போது, எதற்காக இவ்வாறு சஞ்சலமடைகின் றீர்கள்'' என வினவுவார்கள். அது சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் ''நான் அல்லாஹ்வின் நன்றியறி தலுள்ள அடியாராக இருக்க வேண்டாமா''? எனக் கூறுவார்கள்.

**''நீங்கள் தொழுகையை முடித்துக்கொண்டால் உங்கள் நிலையிலும், இருப்பினும், படுக்கையிலும் அல்லாஹ்வின் பெயரைக் கூறி (திக்ரு) துதி செய்துகொண்டேயிருங்கள்.''**

நண்பர்களே! ஏராளமான திரு குர்ஆன் வாக்கியங்களும், அதற்கேற்ப நாயக வாக்கியங்களும், அவர்களின் நடைமுறைகளும் ,திக்ரின் பலன்களைக் குறித்துத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறிருந்தும், நாம் நலவான வணக்கங்களையும், திக்ருகளையும் கைக்கொண்டு முன்னேறாது, கீழ் நிலையை அடையக் காரணம், நமது கவனக்குறைவும், பொடுபோக்குத்தனமும், ஆண்டவன்பால் பக்தி இல்லாததுமேயாகும். ஆகவே, தொழுகை, திக்ரு முதலிய வற்றை நழுவவிடாது கடைப்பிடித்து, ஆண்டவனின் நல்லடியார் கூட்டத்தில் சேருவோமாக.

# 3-வது ஹத்யா
# நல்லார் பொல்லாரோடு (நாம்) நற்குணமாக நடத்தல்

وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا وَّاِذَا
خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا ۝

**''ரஹ்மானுடைய நல்லடியார்கள் (எவரென்றால்) பூமியில் (அடக்கமாகவும்) பணிவாகவும் நடப்பவர்கள். அறிவிலிகள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால், 'ஸலாமுன்' என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள்.''**

**''அன்றி அவர்கள் தங்கள் இறைவனை, நின்றவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்கிக் கொண்டிருப்பார்கள்.''**

இறைவன் கூறிய இந்தப் புண்ணிய ஆத்மாக்கள்தான், அவனது நல்லடியாராவர். பொல்லாரெனப்படுவோர், மேற்கூறிய இறை வசனத்திற்கு முற்றும் மாற்றமாக, அதாவது, பூமியில் அடக்க மில்லாது, தற்பெருமை கொண்டும், மமதையோடும் நடப்பவர். மூடர்களைக் கண்டால், அன்னாரோடு அளவளாவி, பல தீமை களுக்கும் ஆளாகுவர். இன்னார் இறைவனைத் தொழுவதுமில்லை; இதர நற்காரியங்களில் ஈடுபடுவதுமில்லை; இரவெல்லாம் வீண் விளையாட்டு, சூதாட்டம் போன்ற கூடாக விஷயங்களில் கழிப்பார். பொதுவாக நல்லவராயினும் சரி, பொல்லாதவராயினும் சரி, அன்னாரோடு, அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று நமக்கு ஏவப்பட்டுள்ளது.

உஷ்ணத்தைத் தணிக்கக் குளிர்ச்சியுள்ள பொருளை அருந்துவது உலக வழக்கம். ஆகவே, கோபத்தினாலுண்டாகின்ற ஒவ்வொரு கெட்ட செய்கையான காரியத்திற்கும், பொறுமையே பரிகாரம். தற் பெருமையினால் ஏற்படும் ஆடம்பரத்திற்குப் பணிவுடைமையே பரிகாரம். ஈயாத கஞ்சக் குணத்தினாலுண்டாகும் கடின சித்தத்திற்கு ஈகையே பரிகாரம்.

ஒருவன் தன் தீயகுணத்தை ஒழிக்கவும், பாவச் செயல்களை, விட்டும் நீங்கிக்கொள்ளவும், புகை பிடித்தல் போன்ற கெட்ட பழக்கங்



களை விட்டு விடவும் நாடுவானேயானால், அந்த நல்ல எண்ணம் ஏற்பட்டதும், தன்னிடமுள்ள தீய குணங்களை உடனடியாக ஒழித்து விட வேண்டும். ஒருவர் கொஞ்சம் கொஞ்சமாக அதைக் குறைத்து, கடைசியில் ஒரேயடியாக விட்டுவிடலாம் என்று நினைப்பாரானால், அது வெறும் ஏமாற்றத்தில் தான் போய் முடியும். இன்னும் சிலர், ஒரு பாவத்தை, அதிகமாக ஒரு தடவையில் செய்துவிட்டு, பிறகு அந்தப் பாவத்திற்கு முழுக்குப் போட்டுவிடுவது என்று முயற்சிக்கின்றனர். அதுவும் ஏமாற்றமானதே.

பாவங்களைச் செய்து மனோ இச்சைகளைப் பூர்த்திசெய்து கொள்வதன் மூலம், அவற்றை முறித்து விடலாமென நினைக் கலாகாது. ஒருவனுக்கு உணவின்மீது ஆசையிருந்தால், அறுசுவை உணவைத் தயாரித்துச் சாப்பிட்டுவிட்டால், அதோடு அந்த ஆசை அடங்கி விடுமென்று நினைக்கக்கூடாது. விஷயம் அவ்வாறன்று; உணவு அதிகரிக்க, அதிகரிக்க மென்மேலும், அந்த உணவின்மீது அதிக ஆசை ஏற்பட்டு, முடிவில் சாப்பாட்டுப் பிரியனாகவே மாறி விடுகிறான். அதனால், மனோ இச்சைதான் அதிகமாகுமே அன்றி, அதைக் குறைக்க முடியாது போய்விடும். எடுத்துக்காட்டாக:-

பால் அருந்தும் குழந்தையை, அதன் தாயானவள், சுமார் 2 வயதில் பலவந்தமாகப் பால்குடி மறக்கச் செய்கிறாள். அந்தச் சமயத்தில் குழந்தை எவ்வளவுதான் அடம் பிடித்த போதிலும், அதன் இஷ்டப்படி தாய் விட்டுவிடுவதில்லை. பாலுக்குப் பதில் வேறு பானங்கள், தின்பண்டங்களைக் கொடுத்து, குழந்தையின் கவனத்தை வேறு பக்கம் திருப்பி, முற்றிலும் பால் குடியை மறக்கச் செய்து விடுகிறாள். ஆனால், அந்தச் சிசு அடம்பிடிக்கும் என்று பயந்து, அதன் போக்குப்படி விட்டுவிடுவதில்லை. அப்படி விட்டுவிடுவாளானால் அதனால் பல கெடுதல்கள் ஏற்படும்.

இதே போன்றுதான், மனத்தையும் அதன் போக்கிலேயே விட்டு வந்தால், அதன் அக்கிரமங்கள் மிகுந்து மனிதனை ஆட்டிப் படைக்க ஆரம்பித்துவிடும். எனவே, ஆரம்பத்திலிருந்தே கட்டுப்படுத்திக் கொண்டு வருவதுடன், மனோ இச்சைக்கு அடிமையாகிவிடாமல், அதற்கு மாறாக நடந்து கொண்டால்தான், அதை ஒடுக்கித் தன் ஆதிக்கத்தில் கொண்டு வரமுடியும். அன்றியும்:-

இதேபோன்று, ஒரு சிறிய பாவத்தைச்செய்து, பெரிய பாவத்தைத் தடுத்து விடலாம் என்று நினைப்பதும் ஆபத்தாகவே முடியும்.

உதாரணமாக:- மக்களுக்கு சினிமா பார்ப்பதற்கு அனுமதி கொடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குடிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று சிலர் கருதுவதும், கொஞ்சம் குடிக்க அனுமதித்துக் கொள்ள வேண்டும், இல்லையேல் விபச்சாரத்தில் இறங்கி விடு வார்கள் என்று வேறு சிலர் எண்ணுவதும், மற்றுமொருசாரார் கொஞ்சம் விபச்சாரத்திற்கு அனுமதிக்க வேண்டும், இல்லாவிடில் குடும்பப் பெண்களைக் கெடுத்துவிடுவார்கள் என்று கருதுவதும், மூடத்தனமான கருத்துக்களாகும். இது போலவேதான் பெண்களைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால ஒரே யடியாக கெட்டுப் போய் விடுவார்கள் என்று கூறுவதும், அது போலவே சிற்றின்பங்களை ஓரளவு அனுபவித்துத் தெளிவு பெறட்டும். இல்லாவிட்டால் ஒரேயடியாகத் கெட்டுவிட நேர்ந்து விடும் என்று கருதுவதும் பைத்தியக் காரத்தனமே. ஹராமான செயலைச்செய்து, அதிலிருந்து ஒழுக்கத்தைப் பெற்றுக்கொள்வது என்பது ஒருபோதும் முடியாது. மற்றவைகளுக்கும் இவை போன்று தான். எவனொருவன் நற்காரியங்களில் பயிற்றுவிக்கப்படுகிறானோ, அவனிடமே நற்குணங்கள் மிகைக்கும்.

***''நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணமுடையவராகவே இருக்கின்றீர்''.***

இந்தத்திரு வாக்கியம் வெளியாளதற்குக் காரணம் பின்வருமாறு:-

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின பெரிய தந்தை அபூதாலிபு காலஞ்சென்ற பின்னர், அபூலஹ்பு, நாயகம் (ஸல்) அவர்களை குரைஷிகளின் துர்ப்போதனையால் இம்சிக்கத் தொடங்கினான். ஒரு நாள் நாயகம் (ஸல்) அவர்கள், தாயிப் என்ற நகரத்திற்குச் சென்று, அங்கு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யலா னார்கள். இதைத் தெரிந்து பக்கத்திலுள்ள குரைஷியர்கள் 'தாயிப்' நகரத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்றும், கொடுத்தால் குரைஷியரின் வாளுக்கு இரையாகவேண்டி வருமென்றும் எச்சரித்தார்கள். தாயிப் வாசிகள் குரைஷியரின் மிரட்டலுக்குப் பயந்து, நாயகத்துக்கு இடங் கொடாது, அவர்களைத் துன்புறுத்தவும் தலைப்பட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் ஊண் உறக்கமின்றி மூன்று நாள் வேண்டிய முயற்சி செய்தும் ஒன்றும் முடியாமல், மக்காவுக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் இரு மலைச்சரிவுகளின் இடையே மக்காவை நோக்கி வந்துகொண்டிருந்தபோது, தாயிப் வாசிகள் அவர்களைப் பின்



தொடர்ந்து கல்லெறிந்தும், மலைமேல் ஏறிக் கற்களை உருட்டியும் துன்புறுத்தினார்கள். நாயகம் (ஸல்) அவர்களின் 'முபாரக்' கான பாதங்களிலிருந்து இரத்தம் பீறிட்டது. காலணிகள் இரத்தத்தால் தோய்ந்தன. பூமியில் நபிமாரின் இரத்தம் சிந்தப்பட்டால், பூமி வெடித்துவிடும் என்றிருந்ததால், இரத்தம் பூமியில் விழாதபடி, நாயகம் (ஸல்) தங்கள் ஆடையைக் கிழித்துத் துடைத்தார்கள். அந்தச் சமயம் ஜிப்ரயீல் (அலை) தோன்றி, நபியே! ''இதோ மலக்குகள், பூமி, பாறை, தண்ணீர், ஆகாயம் யாவும் தங்கள் உத்தரவை எதிர்பார்க் கின்றன. இந்த ஊரையே கவிழ்த்துவிடும்படி தாங்கள் கட்டளையிடு வீர்களானால், அதை நிறைவேற்றுவதற்காக நானும் அவைகளும் தயாராக இருக்கின்றோம்'' என்று வேண்டினார்கள். அதைக்கேட்ட நாயகம் (ஸல்) தங்கள் திருக்கரங்களை உயர்த்தி,

''இறைவா! என் கூட்டத்தாருக்கு நேர்வழி காட்டுவாயாக. ஏனெனில், அவர்கள் உணராதவர்களாக இருக்கின்றனர். அவர் களுடைய சந்ததியிலிருந்துதான் உன்னைத் தௌஹீது செய்யக் கூடியவர்கள் உற்பத்தி ஆகவேண்டியதிருப்பதால், அவர்களைக் காப்பாற்றும்படி உன்னையே வேண்டுகின்றேன்'' என்று பிரார்த்தனை புரிந்தார்கள். அதற்காகவே இறைவன் மேற்படி வசனத்தில் அவர்களைப் புகழ்ந்து கூறியுள்ளான்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் நற்குணத்தில் எவ்வளவு மேம் பாடு அடைந்திருந்தார்கள் என்பதை வரையறுத்துக் கூறமுடியாது.

''நற்குணம் இறைவனது குணம்'' (நா - வா)

''பணம் காசுகளால் மனிதர்களுக்கிடையில் தாராளமானவர் களாக உங்களால் ஆக முடியாதெனினும், நற்குணங்களாலும், பொறுமையாலும் நீங்கள் தாராளமானவர்களாக ஆகிவிட முடியும். மீஸான் எனும் தராசில் நற்குணத்தைக் காண எடையை அதிகரிக்கும் பொருள் வேறில்லை; நற்குணமுடையோனுக்குச் சுவர்க்கத்தில் உயரிய மாளிகையை அளிப்பதில் நான் பிணைநிற்கின்றேன்.'' என்று நபி பெருமானார் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.

''ஒரு மனிதர் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து ''தீன் என்றால் என்ன''? என்று கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்) ''நற்குணம்'' என்று பதில் சொன்னார்கள். மீண்டும் அவர் வலது புறத்தில் வந்து ''தீன் என்றால் என்ன''? என்று கேட்டார். ''நற்குணம்'' என்றார்கள். பிறகு அவர் இடது புறத்தில் வந்து ''தீன் என்றால் என்ன''

என்று மூன்றாம் முறையாகவும் கேட்டார். ''நற்குணம்'' என்று கூறினார்கள். அவர் மறுபடியும் பின்னால் வந்து ''தீன் என்றால் என்ன''? என்று கேட்டார். நாயகம் (ஸல்) அவரைத் திரும்பிப் பார்த்து, ''நான் கோபப்படாமலிருப்பது உமக்குத் தெரியவில்லையா''? என்றார்கள். எந்தஅளவு கோபத்தை அடக்கும் தன்மை, நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உண்டாகி இருந்ததென்ற இந்த மகத்தான சம்பவத்தை நண்பர்கள் கவனித்தல் வேண்டும்.

ஹல்ரத் இமாமுல் அஃலம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய அண்டை வீட்டில் ஒரு எஹூதி வசித்து வந்தான். அவனுடைய வீட்டிலிருந்து மலம் ஜலம் கழிக்கிற அசுத்த நீர் அனைத்தும், பல வருடங்களாக, இமாம் அவர்களின் வீட்டில் வந்து வடிந்துகொண்டே இருந்தது. அந்த அசுத்த நீரை ஒவ்வொரு நாளும், இமாம் அவர்கள் ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டுபோய் வெளியில் கொட்டுவது வழக்கம். இதுபற்றி அடுத்தவீட்டு, அந்த எஹூதி சற்றும் அறியாதவனாக இருந்தான். பல வருடங்களாக, இமாம் அவர்கள் தினம் தினமும் இவ்வாறு செய்துகொண்டே இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட அவன், உடனே திகைப்படைந்து கவலை கொண்டவனாக, இமாம் அவர்களிடம் வந்து, ''இமாம் அவர்களே! அடியேனை மன்னிக்க வேண்டும். உங்களுடைய நற்குணத்தால், உங்களது இஸ்லாமிய மார்க்கம் மிக மேலானது என்று உறுதி கொண்டேன். இதோ உங்களுடைய தீனை மனப்பூர்வமாக ஏற்று முஸ்லிமாக ஆகிவிட்டேன்.'' என்று கூறியபடியே தம் குடும்பசகிதம் புனித இஸ்லாத்தைத் தழுவினார்.

**(மிக்க பாக்கியம் பெற்ற) மறுமையின் வீட்டையோ, பூமியில் பெருமையையும், விஷமத்தனத்தையும் விரும்பாத (நற்குணமுடைய) வர்களுக்கே நாம் சொந்தமாக்கி விடுவோம். ஏனென்றால், முடிவான நற்பாக்கியம் பயபக்தியுடையவர்களுக்குத்தான்.** *(28 - 83)*

ஈமானால் நிறைந்தவன் சற்குணத்தில் மேம்பட்டவன். சுவர்க்கத் திற்குள் புகச் செய்யும் அமல்களில் முதன்மையானது தக்வாவும், நற்குணமுமாகும். அமல்களில் மேன்மையானதும், நற்குண நற்செய்கையேயாகும். இறுதி நாளில் எனக்குப் பிரியமானவனும், அதிகம் நெருங்கியவனும் குணத்தால் சிறந்தவனேயாகும். நற்குணங் களில் பொறுமையும் ஒன்று. பொறுமை என்பது உன்னை வெறுப் பவனை நீ நேசிப்பது - உனக்கு 'இல்லை' என்றவனுக்கு நீ கொடுப்பது - உனக்கு அநியாயம் செய்தவனை நீ மன்னிப்பது முதலியனவாகும். *(நா - வா)*



# 4 - வது ஹத்யா
## பிறரைத் துன்புறுத்தாமை

وَالَّذِيْنَ يُؤْذُوْنَ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ بِغَيْرِ مَا اكْتَسَبُوْا فَقَدِ احْتَمَلُوْا بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا

**''எவர்கள் விசுவாசங்கொண்ட ஆண்களையும், பெண்களையும், அவர்கள் செய்யாத குற்றத்தை (செய்ததாக)க் கூறித் துன்புறுத்துகின்றார் களோ? அவர்கள், நிச்சயமாக (பெரும்) அவதூறையும் பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொள்கின்றனர்.''**

**''நிச்சயமாக அல்லாஹு மோசக்காரரையும், நன்றி கெட்டோரையும் விரும்புவதில்லை.''**

**''முஹம்மதே, அநியாயக்காரர் (சொல் செயலால்) எவற்றைச் செய்வார்களோ? அவற்றை அல்லாஹு மறந்தவன் என்று எண்ணாதீர்.''**

**'அநியாயம் செய்கிறவர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் இறங்குகிறது.'** *(11 - 18)*

அடியார்களே! நான் என் விருப்பத்தின் மேல் அநியாயத்தை ஹராமாக்கினேன், அதை உங்களுக்கும் ஹராமாக்கினேன். நீங்கள் ஒருவருக்கொருவர் சொல்லாலும் செயலாலும் அநியாயம் செய்யாதீர்கள். (ஹதீது குதுஸி)

''மலை மலைக்கு அநியாயஞ்செய்தால் அநியாயம் செய்த மலையை அழித்துப் போடுவேன்.''

''அநியாயத்துக்குப் பயப்படுங்கள்; அநியாயம் கியாமத் நாளின் இருளாகும். கியாமத் நாளில், அநியாயம் செய்யப்பட்டவன், அநியாயம் செய்தவனின் மடியைப் பிடித்துக்கொண்டு, ''எனக்கும் உனக்கும் இடையில் நீதி வழங்குபவன் இருக்கிறான். வா'' என்று அழைப்பான். ஆகவே இறைவன் அநியாயக்காரனின் நன்மைகளை எல்லாம் மற்றவனுக்குக் கொடுத்து விடுவான். அப்போது அநியாயக் காரன் நிலைமை எப்படியாகும் என்று அவனுக்குத் தெரியுமா? (நா - வா)

அநியாயம் மூன்று வகைப்படும். *(1)* 'அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்', அதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்கவே மாட்டான். *(2)* 'அல்லாஹ்வுடைய கட்டளைக்கு விரோதமாக நடந்து, மனிதர்கள் தம் சடலங்களுக்கு அநீதம் செய்வது. அதை அல்லாஹ் நாடினால் மன்னிப்பான்.' *(3)* 'மனிதர் ஒருவருக்கொருவர், அநியாயம் செய்வது, அந்த அநியாயத்தில் அகப்பட்டவன் பொறுத்துக்கொள்ளாதவரை, அல்லாஹ்வும் பொறுக்கமாட்டான்.' என்பதாகும். இதை உணர்த்த ஒரு நிகழ்ச்சிக் கூறப்படுகிறது.

பனீ இஸ்ராயீல் வர்க்கத்தில் ஒரு மனிதர் கடற்கரை ஓரமாகப் போகும் சமயம், அங்கு ஒருவன், யாராவது என்னைக் கண்டவர் ஒருக்காலும் அநியாயம் செய்யமாட்டார்கள்'' என்று சப்தமிட்டுக் கொண்டிருந்தான். இதைக் கண்ட அந்த மனிதர் அவன் அருகே போய், ஒரு கை இல்லாதிருப்பதைக் கண்டு உனக்கு நிகழ்ந்த சம்பவமென்ன? என்று கேட்க, அதற்கு அவன் 'நான் ஒரு சேவக வேலையில் ஈடுபட்டிருந்தேன். ஒரு நாள் இந்தக் கரை ஓரமாக வரும்போது, ஒரு மீன் வேட்டைக்காரன் நல்ல மீன் ஒன்று வைத்திருந்தான். அதை நான் மிகப் பிரியத்துடன் கேட்டேன். அவன் தரமுடியாது எனக் கூறினான். மீண்டும் கேட்டேன். மறுத்துவிட்டான். உடனே என் கையில் இருந்த சாட்டையால் அவனை அடித்து அந்த மீனைப்பறித்துக்கொண்டு வரும்போது, அது என் கை விரலை இறுகக் கடித்துக்கொண்டது. மிகவும் கஷ்டத்துடன் இழுத்து மீனின் வாயைவிட்டும் கைவிரலை எடுத்தேன். அதன் பற்களின் பதிவில் காயம் ஏற்பட்டு, விரல் வீங்கி சலம் வைத்துவிட்டது. ஒரு வைத்தியரிடம் காண்பித்தேன்; அவர் ''இது கருங்குட்டம். இந்த விரலை எடுத்துவிட்டால் தான் நீ பிழைப்பாய்'' என்று கூறினார். அதன்படி அந்த விரலைத் தறித்தேன். அப்பால் கை சுரந்து குத்தும் தரிப்பும் ஏற்பட்டு, அந்த வேதனையால் பலநாள் நித்திரை வராமலிருக்கவே, பக்கத்து மனிதர்கள் நான் படும் வேதனையைப் பார்த்து ''மணிக்கட்டு வரை எடுத்துவிடு'' எனக் கூறினார்கள். அதையும் துண்டித்தேன். நோய் மேலாகி வேதனை சகிக்க முடியவில்லை. எவ்வளவோ மன்றாடினேன், நான்படும் துயரத்தைக் கண்டு பலர் சொல்வதற்கிசைந்து, முழங்கை வரை தறிக்கப்பட்டேன். பின்னர், தோள் புயம் வரை எடுத்தும்கூட வியாதி மடங்கவே இல்லை. 'இது எதனால் எப்படி ஏற்பட்டது?'' என்று ஒருவர் வினவினார், அதற்கு நான் ''அன்று மீன் வேட்டைக்காரனிடம் நடந்துகொண்ட சம்பவத்தைச் சொன்னேன்.'' அதற்கவர், கை



சேதமே! நீ இப்பொழுதே அவனிடம் சென்று மன்னிப்புத் தேடினால் அல்லாது இந்த வியாதி கடைசி வரையில் தீராது' எனப் பணித்தார். உடனே நான்போய் மீன் வேட்டைக்காரனைக் கண்டு, அவன் காலில் விழுந்து என்னை மன்னித்து விடும்படி வேண்டினேன். அவன் என்னைப் பார்த்து அழுது கொண்டு, மனமொப்பி நீ இந்தப் பலாயை விட்டும் நீங்கி, சலாமத்துப் பெற வேண்டும். நீ அன்று எனக்குச் செய்த தவறை இன்று நான் மன்னித்து விட்டேன்'' எனக் கூறினான். அப்பொழுதே வருத்தம் நீங்கிவிட்டது.'' இனிமேல் இத்தகைய அநியாயம் செய்யவேமாட்டேன் என்று இறைவனிடம் தவ்பாச் செய்து மீண்டேன்.

என்னில் நின்றும், எனக்கு நிகழ்ந்த சித்திரவதை போன்று, வேறு யாருக்குமே சம்பவிக்கக் கூடாதென்று, ஒவ்வொரு நாளும் இங்கிருந்து உபதேசித்துக் கொண்டிருக்கிறேன்'' எனக் கூறினான். *(இர்ஷாத்)*

**''ஏழைகளின் கண்ணீர் கூரிய வாளுக்கொப்பாகும்.''**

**'எவரேனும் (பிறர் செய்த தீங்கை) பொறுத்துக்கொண்டு, மன்னித்துவிட்டால், நிச்சயமாக இது வீரம் பொருந்திய காரியமாகும்.'**
*(42 - 43)*

**ஓர் தெளிவு:-**

நமது சமூகத்தில் ஒரு சிலர், துணிச்சலுடன் சிலருக்கு அநியாயம் செய்துவிடுகின்றனர். அந்த அநியாயத்தில் அகப்பட்டவன் மனவேதனையோடு, அதனை நினைத்து நினைத்து துயருற்று வாடுகிறான். அல்லாஹ் இடம் முறையிடுகிறான். அநியாயக்காரன் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கும் சமயம், அவன் பிறருக்குச் செய்த கொடுமைகள், அவன் மனக் கண்முன் காட்சி அளிக்குமல்லவா? அப்போது, அவனை வரச் செய்து, அவனது கையைப் பற்றிக்கொண்டு, 'நான் உனக்கு ஏதும் தவறிழைத்திருப்பின், அதை நீ மன்னித்துக்கொள்' எனக் கூறுவதை நாம் சிலரிடம் கண்கூடாகக் காண்கிறோம். இதைக் கேட்ட அவன், அந்தச் சந்தர்ப்பத்தில் சரி என்ற போதினும், அது ஏற்றுக் கொள்ளப்பட்ட மன்னிப்பு ஆகாது. அது எதுபோலெனில், ஒரு பெரும்பாவி மரணத் தறுவாயில் தவ்பாச் செய்வது போலாம்.

ஏற்கெனவே அவனோடு இணங்கி, தான் செய்த அநீதத்திற்குத் தக்க பரிகாரம் செய்து, அவனை, சந்தோசப்படுத்துவதே விரும்பத்தக்க மன்னிப்பாகும். நமது ஷரீஅத்தும் இதுவே.

''அநியாயம் செய்யப்பட்டு, சிரமம் அனுபவித்த ஒருவனுடைய பிரார்த்தனைக்கும், அல்லா(ஹ்)வுக்கும் இடையில் திரை கிடையாது. அவனுடைய துஆ உடனே கபூலாகும். அவன் கெட்டவனாக இருப்பினும் சரியே. அவனது கெடுதி அவனோடுதான்.''

(நா - வா)

நௌஷேர்வான் என்ற அரசர் ஒருநாள் வேட்டையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அவருக்குத் தாகம் அதிகரித்தது. பக்கத்தில் ஒரு தோட்டத்தில் நின்ற சிறுவனிடம் தண்ணீர் கேட்டார். அவன் ''தண்ணீர் இங்கு கிடையாது' என்றான். ''அப்படியானால் ஒரு மாதுளம் பழம் கொடு'' என்று கேட்டார். சிறுவன் அப்படியே பழம் பறித்துக் கொடுத்தான். அது மிக அழகாகவும், புசிப்பதற்கு இன்பமாகவும் இருந்தது. அரசர் அந்தத் தோட்டத்தைக் கைபற்றிக்கொள்ள மனத்திற்குள் நினைத்தவராக 'இன்னுமோர் பழம் கொடு' என்றார். அந்தச் சிறுவன் கொண்டுவந்து கொடுத்தான். அது மிகவும் புளிப்பாக இருந்தது; அரசர் 'இது முன் பறிக்கப்பட்ட மரத்திலுள்ளதுதானா'? என்று கேட்க 'ஆம்' என்றான். சிறுவன். அரசர் 'இதன் ருசி மாறியிருப்பதேன்?' என்றார். 'மன்னருடைய எண்ணமே மாறியிருக்கும்' என்றான் சிறுவன்.

அரசர் உடனே, தன் மனத்திலுள்ள எண்ணத்தை மாற்றிவிட்டுச் சிறுவனிடம், அதே இனத்தில் வேறொரு பழம் கேட்டார்; சிறுவன் கொடுத்தான். அது மதுரமாக இருந்தது. ''இது இணக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன''? என்று கேட்டார். மன்னருடைய எண்ணம் இணக்கமாக மாறியிருக்கும்'' என்றான் சிறுவன்.

அன்று முதல், அரசர் மனம் மொழி, மெய், இந்த மூன்றாலும், அநியாயம் செய்வதை அறவே விட்டுவிட்டார். அவர் மிக்க நீதிமான் என்று சொல்லப்படுகிறது.

''ஒருவன் மற்றவனுக்கு அநியாயம் செய்தால், அவன் உனக்கும் எனக்கும் இடையில் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான்; அவனே எனக்குப் போதும் என்று சொல்லும் சமயம், நான் அதைக் கேட்டுப் பதறுவதைப் போல, வேறு எதற்கும் பதறுவதில்லை.'' என இறைவன் கூறியுள்ளான். (ஹதீது குதுஸி)

**''எவரேனும் தன்னை (விரோதி) துன்புறுத்திய மாதிரியே அந்த அளவுக்கு அவனைத் துன்புறுத்திவிட்டு, பின்னும் அவனைக் கொடுமை செய்தால், நிச்சயமாக அல்லாஹு (துன்பத்திற்குள்ளான) அவனுக்கு உதவி புரிவான்.''** (22- 60)



''என் சிறப்பு, வன்மை இவற்றின் மீது சத்தியமாக, அநியாயத்தை விலக்கக் கூடியவனாக இருந்தும், (விலக்காமல்) பார்த்துக் கொண்டிருந்தவனையும் வேதனை செய்வேன்'' என இறைவன் கூறியுள்ளான்.

(ஹதீது குதுஸி)

தன்னைவிட பணத்தாலும், பலத்தாலும், தாழ்ந்த ஏழைகளை மோசம் செய்தல் பெரும் குற்றம். அவர்களின் மன வேதனை, மோசம் செய்தவனின் பணத்தையும், கர்வத்தையும் குறுகிய காலத்திற்குள் அழித்து நாசப்படுத்திவிடும். அன்றியும் அந்தச் செயல் அவனைக் காபிராக்கிவிடும். (நஊது பில்லாஹி மின்ஹா.)

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கடைசி ஹஜ்ஜில் மினாவில் உபதேசம் நிகழ்த்தும்போது:-

ஓ! இங்கு கூடியிருக்கும் எனது மக்களே. உங்களுடைய இரத்தமும்; உங்களுடைய செல்வமும்; உங்களுடைய உற்றார் உறவினரும், இங்கு இந்த மாதத்தில், இந்த நாளுடைய சங்கையைப் போல் சங்கையாக இருப்பதால், ஒருவனுடைய முதலை ஒருவன் எடுப்பதும்; ஒருவனை ஒருவன் விரோதம் கொண்டு கொலை செய்வதும், ஒருவனை ஒருவன் ஏசுவதும், ஒருவனை ஒருவன் அநியாயம் செய்வதும் ஹராமாயிருக்கும். நீங்கள் கியாமத் நாளில் அல்லாஹ்வினுடைய சமுகத்தில் பதில் சொல்லும் படி நேரிடும் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களை ஒரு அணுவளவாவது விடாமல் கேள்வி கேட்கப்படும்'' என மொழிந்துள்ளார்கள்.

அல்லாஹுத் தஆலா அநியாயம் செய்கிற மனிதனுக்கு, அவன் விரும்புவானேயானால், விடுதலை கொடுக்கிறான்; அவன் விரும்பாமல் பிடித்தானேயானால் ஒரே பிடிதான்.

**''(நபியே!) அநியாயக்காரர்களின் செயலைப்பற்றி, அல்லாஹ் பராமுகமாகயிருக்கின்றான் என நீர் ஒருக்காலும் எண்ணவேண்டாம். (அவர்களை வேதனையைக்கொண்டு, உடனுக்குடன் பிடிக்காது) அவர்களைத் தாமதப்படுத்துவதெல்லாம், திறந்த கண் திறந்தவாறே இருந்து விடக்கூடிய (மறுமை) நாள்வரும் வரையில்தான்.''** (14: 42)

ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் சொல்லாலும், செயலாலும் மோசம் செய்யாதிருத்தல் வேண்டும். மேற்கூறிய நான்கு ஹத்யாக்களும் 'மீஸான்' என்ற தராசுக்குரியனவாகும்.

## 8-வது தகுதியாளர்

## நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைவஹிவ ஸல்லம்

### 16

தாஹா ரஹூலுக்குக் கொண்டுபோகும்
சங்கை ஹதியாதான் நாலாகுமாம்
தாகமா யவர்மீதுமவர் சங்கை
குடும்பத்தா ரடங்கல் மீதும்
ஏகமாய் ஹுப்பைப் பெருப்பிப்பதும்
இவர்களை தீனிற் றுயருதலும்
ஆகமத் தோதும் அஸ்ஹாபியை
யாரையும் நோவிய் யாத்ததுமே.

**அரும்பதவுரை:-**

*தாஹா = நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர். தாகமாய் (இங்கு) ஆசை. ஹுப்பு = நேசம். தீன் = மார்க்கம். ஆகமம் =வேதம். அஸ்ஹாபி = நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள்.*

### நபி பெருமானின் மகாத்மியம்

وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضَىٰ ○ - وَرَفَعْنَا لَكَ ذِكْرَكَ ○

***"உமதிறைவன் பின்னும் (இன்னும் பல உயர்ந்த பதவிகளை) உமக்கு அளிப்பான்; (அதைக்கொண்டு) நீர் திருப்தி அடைவீர்."***

***"உம்முடைய கீர்த்தியையும் நாம் உயர்த்தினோம்."*** *(94 - 4)*

மேற்கூறிய திருவசனத்தை ஆழ்ந்து நோக்கும்போது, நம் இறைவன், அவனது தூதர் ரசூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு எவ்வளவு மகத்தான பதவிகளை அளித்துள்ளான் என்பதும், இன்னும் அவர்களுடைய பதவியானது, சொல்லால் வர்ணிப்பதற்கும்கூட முடியாத அத்துணை மகத்துவமிக்கதாயிருக்கிறது என்பதும் வெளிப் படை.

நம் சிரேஷ்டர் அவர்கள், மானிடப் படைப்புகளை முன்னேற்றும் விஷயத்தில், இந்த உலகில் அல்லும் பகலும் அயராது எடுத்துக் கொண்ட முயற்சியும் அந்த முயற்சியில் அவர்கள் அடைந்த கஷ்ட



நஷ்டங்களும் சொல்லத்தகுமல்ல. எத்துணை துன்பங்கள் நேரிடினும், அவற்றை எல்லாம் ஆண்டவன் பொறுப்பிலேயே விட்டுத் தங்களின் முயற்சியில் சிறிதும் தளராமல் உழைத்தமையால்தான், அந்தக் கஷ்டங்கள் அனைத்தும் ஆதவனைக் கண்ட பனிபோல் விலகி, மகோன்னதப் பதவிகளாக மாற இடமளித்துள்ளது என்பது தெளிவு.

***(விசுவாசிகளே! நம்முடைய) "ஒரு தூதர், நிச்சயமாக உங்களிடம் வந்திருக்கின்றார்; அவர் உங்களிலுள்ளவர்தான். (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டத்திற்குள்ளாகிவிட்டால், அது அவருக்கு மிக்க வருத்தமாகவே இருக்கும். (அவ்வளவு தூரம் உங்கள்மீது அன்புள்ளவர்) அன்றி, உங்களுடைய நன்மையையே பெரிதும் விரும்பு கின்றவராகவும், விசுவாசி (களாகி உங்)கள் மீதும் மிக்க அன்பும், கிருபையும் உடையோராகவும் இருக்கின்றார்."***

*(9: 128)*

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைப்பற்றி நம் இறைவன் கூறியுள்ள அன்பு நிறைந்த இந்த வசனமும் சிந்திக்கக்கூடியதே.

''உங்களிலிருந்தே''. என்று இறைவன் மனிதனைச் சுட்டிக் காட்டியதால், ''நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அரபிகளுக்கு மட்டும் அன்றி மனித இனத்திற்கே, இறைவனது தூதராக நம்மிடம் வந்திருக்கிறார்கள்'' என்பது தெளிவாகின்றது.

இரசூல் நாயகத்தின் இத்தகைய அருள் நிறைந்த இருதயமானது, நமக்குக் கஷ்டம் ஏற்படுவதைக் காணும்போது மிகுந்த கவலையும், வருத்தமும் அடையக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், மனித வர்க்கமாகிய உடலுக்கு அவர்கள் உயிராக இருக்கிறார்கள்.

நமக்கும், நமது உடலுக்கும் இடையில் ஒரு சம்பந்த முண்டாகி இருக்கிறது. அதை நாம் உயிரென்று அழைக்கின்றோம். இத்தகைய சம்பந்தம் ஒன்று இருப்பதால்தான், நமது உடலில் எங்காவது முள் ஒன்று தைத்துவிட்டால், நமது உடல் முழுவதும் நோவுண்டாகின்றது. இதுபோன்றே, நமக்குத் துன்பம் ஏற்பட்டால், அதை அவர்களால் பார்த்து சகித்துக்கொண்டிருக்க முடிவதில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் மனித உருவில் நம்மிடம் வந்தார்கள் என்பதைத் தவிர, அவர்களது அந்தஸ்து எப்படிப்பட்டதென்பதை நாம் சற்றும் உணர்ந்து கொள்ளவில்லை.

''நபியே! உம்மை நான் படைத்திருக்கவில்லையானால், இதர வஸ்துக்கள் ஒன்றையுமே படைத்திருக்கமாட்டேன்.'' (ஹதீது குதுஸி)

அல்லாஹு நம் பெருமானார் (ஸல்) அவர்களை எந்தப் பொருளுக்கும் முதற்பொருளாகவே, ஒளிப் பிழம்பாகவே, அருள் வடிவாகவே அமைத்தான். அவ்விதம் அமைத்திராவிடில், விண்ணுலகத்தை இயங்கச்செய்யும் அர்ஷு குர்ஸுமற்றுமுள்ள சுவர்க்கம், நரகம், சூரியசந்திரன், ஆகியவைகளையும், மண்ணுலகில் காணப்படும் சர்வ பொருள்களையும் படைத்திருக்கமாட்டான்.

அல்லாஹ் தன்னந்தனியாக இருக்கும்பொழுது, தன்னுடைய சோதிப் பிரகாசத்திலிருந்து ஒரு பகுதியை நோக்கி, ''மனித கோடிகளின் தலைவராம் 'முஹம்மதாக ஆகிவிடுக'' என்று கட்டளையிட்டான். உடனே 'நூர்முகம்மதியா'வாகி (அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஒரு தீபமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. பின்னர் அந்தப்பிரகாசத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து, முதலாவது பங்கில் நின்றும் 'லவ்ஹு' என்னும் பலகையையும், அதில் எழுதும் 'கலம்' எனும் எழுது கோலையும் உண்டாக்கினான். பிறகு அந்த எழுது கோலுக்கு, தான் சிருஷ்டிக்க விரும்பியவை அனைத்தையும் எழுதும்படி கட்டளை இட்டான். அது உடனே இறைவனது வல்லமையால், இனி நடைபெறவிருக்கும் சகல உலக நிகழ்ச்சிகளையும் எழுதி முடித்தது. இரண்டாவது பங்கில் நின்றும் 'அர்ஷு', 'குர்ஸு' இந்த இரண்டையும் படைத்தான். அந்த அர்ஷில் **''லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி''** என்னும் திருக்கலிமா பொறிக்கப்பட்டிருந்தது. **'முஹம்மதுர் ரசூலுல்லாஹி'** என்ற வசனத்தைச் சொல்லாமல் **'லாஇலாஹ இல்லல்லாஹு'** என்னும் முற்பகுதியை மாத்திரம் சொல்வதால், கலிமா தய்யிபா முற்றுப்பெறாது''. மூன்றாவது பங்கில் நின்றும் சந்திரன், முதலிய கோளப் பொருட்களைச் படைத்தான். நான்காவது பங்கில் நின்றும் சுவர்க்கத்தையும், அதைச் சார்ந்தவற்றையும் படைத்தான். பின்னர் நமது பிதாவாகிய பாவா ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான். இங்ஙனம் படைப்புகளைப்பற்றி சிறந்த ஹதீது கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கிறது.

சகோதரர்களே! மேலேசொல்லப்பட்டதிலிருந்து, எப்பொழுது நம் பிதாவாகிய ஆதம் (அலை) அவர்களின் படைப்பில் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் பிரகாசம் சம்பந்தம் கொண்டு விட்டதோ? அப்பொழுது நாம் அவர்களது மக்களாக இருப்பதால்,



நம்மீதும் நாயகம் (ஸல்) அவர்களின் பிரகாசத்தினது சம்பந்தம் இருக்கவே செய்கிறது என்பது உறுதியாகின்றது. நம்முடைய உற்பத்திக்கு நாயகம் (ஸல்) அவர்களே மூலகாரணமாதலால், நாம் அவர்களை நேசிப்பதும், வாக்கு, மனம், காயத்தால் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும், நம்முடைய உயிரையும்விட மேலாக அவர்களை அதிகமாக நேசிப்பதும் கடமையாகும். இந்தக் கடமையை, நாயக வசனங்களும், குர்ஆன் மொழிகளும் வற்புறுத்துகின்றன.

(நபியே! இந்த உலகத்தில் உள்ள) **''சகல மனிதர்களுக்குமே நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவ ராகவும், நாம் உம்மை அனுப்பி வைத்திருக்கின்றோம். *(34 - 28)***

**''நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் இறக்கிவைத்த (இந்த வேதமென்னும்) பிரகாசத்தையும் விசுவாசியுங்கள். அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.'' *(64 - 8)***

**''அல்லாஹ்; விசுவாசிகளின்மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களிலிருந்தே எழுந்தருளச் செய்தான். அவர், அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்கொடுக்கின்றார் நிச்சயமாக அவர்கள் இதற்கு முன் வழிகேட்டிலேயே இருந்தனர்.** *(3 - 164)*

நபிகள் கோமான் (ஸல்) நவின்றுள்ளார்கள்:

''அல்லாஹுத் தஆலா மிஃராஜின் இரவில் என்னிடம் சில விஷயங்களைக் குறித்துக் கேட்டான். எனக்கு அதற்குப் பதில் சொல்ல இயலாமையாகவே, அவனுடைய 'குத்ரத்' என்ற கரத்தை என்னுடைய தோளின் புயத்துக்கிடையில் வைத்தான். நான் அதன் குளிர்ச்சியைக் கண்டேன். எனக்கு முன்னோர், பின்னோர் அடங்கலுடைய அறிவு (ஞானங்)களெல்லாம் உண்டானது. மேலும், அவன் எனக்கு அனேக இல்முகளை அறிவித்துத் தந்து ஒருவகையை மறைக்கச் சொன்னான். ஒரு வகையில், எனக்கு சம்மதம் தந்தான், ஒரு வகையை மனு ஜின், அடங்கலுக்கும் சொல்லச் சொன்னான்.'' என்றபடி. இதிலிருந்து:-

வல்ல நாயன் அல்லாஹ் தனது ஹபீபுக்குத் தான் நாடிய விதத்தில் மறைவான ஞானங்களையும், அபரிமிதமான மேம்பாடுகளையும் கொடுத்திருக்கின்றான் என்பது தெளிவு. இதனையே! இமாம் ஸதகத்துல்லாஹ் அப்பா அவர்கள் தம் வித்ரிய்யாவில், பல இடங்களில் உறுதிப்படுத்துகின்றார்கள். **'லாயஃலமும் கைப இல்லல்லாஹ்'** (மறைவான விஷயங்களை அல்லாஹுவையன்றி யாரும் அறிய மாட்டார்கள்) என்ற குர்ஆன் வசனம், மேலேசொன்ன கருத்துக்கு மாறுபடாது.

இறைவன் திருமறையில் கூறுகிறான்:

**(நபியே!) நீர் கூறுவீராக:**

***''மனிதர்களே! (நீங்கள் எந்தத்தேசத்தாராயினும், எந்த வகுப்பாராயினும்) மெய்யாகவே, நான் உங்கள் யாவருக்கும், அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட ஒரு தூதன், வானங்கள் பூமியின் ஆட்சி அவனுக்குடையதே! (வணங்குதற்குரிய) நாயன் அவனைத் தவிர வேறு ஒருவருமில்லை. அவனே உயிர்ப்பிக்கிறான்; மரிக்கவும் செய்விக்கிறான். ஆகவே, அந்த அல்லாஹ்வையும், எழுதப்படிக்க அறியாத, அவனுடைய இந்தத் தூதரையும் நீங்கள் விசுவாசிப்பீர்களாக! அவரும்கூட அல்லாஹ்வையும், அவனுடைய வசனங்களையும் விசுவாசிக்கின்றார். ஆகவே, நீங்கள் நேரான வழியை அடையும் பொருட்டு, அவரையே நீங்கள் பின்பற்றுங்கள். (7- 158)***



# நபிகள் நாதருக்குரிய ஹத்யாக்கள் நான்கு

## 1-வது ஹத்யா

## நபிகள் நாதரை சதா காதலித்தல்

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ
لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ ○

***(நபியே! மனிதர்களை நோக்கி) ''நீர் கூறும்! நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாயிருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; உங்களை அல்லாஹு நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்துவிடுவான்.''***

நபி பெருமானார் (ஸல்) அவர்கள்மீது வைத்திருக்கும் அபிமானம், அன்பு, ஆர்வம், பக்தி முதலியவைகளைப்பற்றி இறைவன் திருமறையில், அநேக இடங்களில் பெருமை பாராட்டிப் புகழ்ந்துள்ளான். அதேபோல் நாமும் அவர்கள்மேல் களங்கமற்ற அன்புபூண்டு நடக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளான். ஆதலால், நாம் நம் வாழ்க்கையின் பெரும்பகுதியை, அந்த நாயகத்தின்மேல் பிரியம் கொண்டு, மனப்பூர்வமாக நேசிப்பதில் செலவிடவேண்டியது கடமையாகும். அங்ஙனம் நேசிப்பதற்கு அறிகுறியாக, அந்த நாயகம் (ஸல்) கொணர்ந்த ஷரீஅத்திற்கு ஒருவித முரண்பாடும் வராத வாறு, ஜிஹாதும் செய்ய வேண்டியது வந்தால் செய்வது கடமை யாகும். (ஜிஹாத் = ஷரீஅத்திற்கு விரோதமானதை எதிர்த்துப் போராடுதல்.)

*''நீங்கள் யாரை நேசிப்பீர்களோ? அவர்களோடு இருப்பீர்கள்.''* என்ற நாயகம் (ஸல்) அவர்கள் வசனத்தின்படி, நாம் நபி (ஸல்) அவர்களை நேசித்து இம்மையில் அவர்களின் பக்தர்களாகவும், மறுமையில் அவர்களோடு நித்தியானந்த சுவனபதியில் இருக்க வேண்டுமன்றோ!

***''எவர்கள் மெய்யாகவே, அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிபடுகின்றார்களோ, அவர்கள்; அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள்; சத்தியவான்கள்; பிராணத்தியாகிகள்;***

**நல்லொழுக்கமுடையவர்கள் முதலியவர்களுடன், (மறுமையில்) வசிப்பார்கள். இவர்கள்தாம் மிக்க அழகான தோழர்கள். *(4 - 69)***

நபிகள் நாதர்மீது, அவர்களது தோழர்கள் அளவற்ற பிரியம் வைத்திருந்தார்கள். அது எவ்வளவு உச்சநிலையில் இருந்ததென்பதற்கு சில உதாரணங்களைக் கீழே தருகின்றோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற உயரிய நடை உடை பாவனைகளால் கவரப்பட்டு, அவர்கள்மேல் ஆழ்ந்த அன்பு பூண்டொழுகிய பக்த சிரோன்மணிகளில், ஹஸ்ரத் 'துல்கர்னைன்' (ரலி) அவர்களும் ஒருவராவர். அவர் ஏமன் தேசத்தில் வசித்து வந்தார். நாயகம் (ஸல்) அவர்களை இவர் நேருக்குநேர் பார்த்ததில்லை. ஆயினும், அவர்களிடம் பக்தி கொண்டொழுகுவதில் இணையற்று விளங்கினார். இவர் நாயகம் (ஸல்) அவர்கள் 'உஹத்' யுத்தத்தில், தங்கள் பற்களில் ஒன்றை இழந்துவிட்ட செய்தியைக் கேள்விப் பட்டதும், ''இருலோக இரட்சகராகிய நபி பெருமானார் (ஸல்) அவர்களது முன் பல் ஒன்று பறிபோயிருக்க, அவர்களது குலாமாகிய (அடிமை) இந்தத் துல்கர்னைன் பற்களை வைத்துக் கொண் டிருப்பதா?'' என்று வீறிட்டெழுந்து தம் பற்களை எல்லாம் தட்டி எறிந்துவிட்டார்.

நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபாக்கள்தான் என்ன! அவர்களது ஸஹாப்பிய்யாத்துகளாகிய மங்கையர் ரத்தினங்களும்கூட, நாயகம் (ஸல்) அவர்கள், 'உஹத்' யுத்தத்தில் ஷஹீதாகிவிட்டார்கள் என்று ஒரு பொய் வதந்தி கிளம்பியபோது, மதீனாவிலுள்ள தங்கள் வீடு வாசல்களைவிட்டு விட்டு, யுத்தகளத்திற்கு விரைந்தோடினார்கள். சில பெண்மணிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்று, விரோதிகளின் அம்புகள் அவர்கள்மேல் படாதபடி தடுத்தார்கள். ஹஸ்ரத் உமர்பாரூக் (ரலி) அவர்கள், அந்தப் பெண்மணிகளை விலகிக் கொள்ளும்படி எவ்வளவோ மன்றாடிக்கேட்டும் அசைந்திலர். ஒரு ஸஹாபிய்யா தமது தந்தை, கணவர், மைந்தன் மூன்று பேர்களையும் ஏககாலத்தில் யுத்தத்தில் பறிகொடுத்தும்கூட, அதைப் பற்றிக் கவலைப்படாமல், நாயகம் (ஸல்) அவர்களைக் கண்ணால் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆவலால் போர்க்களம் சென்றார்.

இஸ்லாமிய சரித்திரத்திலே 'உஹத்' யுத்தத்தின் நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவை. யுத்த காலத்தில் ஸஹாபாக்களின் கூட்டத்திலுள்ள ஹன்ளலா (ரலி) என்ற ஒரு வாலிபருக்குத் திருமணம் செய்ய நபி



பெருமானார் (ஸல்) அவர்களால் தேதி குறிப்பிடப்பட்டு, அவ்வாறே விவாகமும் முடிவுற்றது. அன்றிரவே, அந்த இளம் மணமக்கள் இருவரும் ஆனந்த சாகரத்தில் மூழ்கி இருக்குங்கால், 'உஹத்' யுத்தத்தில் முஸ்லிம்களுக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டதாகவும், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டதாகவும், உலாவிய ஒரு வதந்தி, இவர்களின் காதுகளுக்கும் எட்டியது. உடனே அந்த இருவரும் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்து, தடுமாறி நிற்கும் தருணத்தில் புத்தம் புதிய மணப் பெண்ணான அந்த இள மங்கை, ''எனது நாயகரே! போர்க்களத்திலிருந்து கிடைக்கப்பெறும் செய்தி நம்மைத் திடுக்கிடச் செய்கின்றது. ஆதலால், நீங்கள் ஆயுதபாணியாகப் போர்க்களம் சென்று, நம் இரஸூல் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வெற்றி கிடைக்கத் துணை புரியுங்கள்'' என்று மனமுவந்து வேண்டி, முக மலர்ச்சியோடு வழியனுப்பி வைத்தாள்.

அதே யுத்தத்தில்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மலையடிவாரத்தில் ஏற்பட்ட சறுக்குகளாலும், எதிரிகளின் கூரிய அம்புகளாலும் உண்டான காயங்களைக் கண்டு, அதற்கான சிகிச்சை செய்து கொண்டிருந்தனர்; அதுபோது பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்தைப் பார்த்த வண்ணமாகவே இருந்ததைக் கண்ட சஹாபாக்கள்:- ''யாரஸூலுல்லாஹ்! யாது காரணம் பற்றி, தாங்கள் வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என வினவினர். அது கேட்ட சத்தியத் திருநபி (ஸல்) அவர்கள், ''எனது ஆருயிரன்பர், நேற்றுத்தான் நிகாஹ் ஆன புது மணவாளர், சற்று முன் இந்த யுத்தத்தில் ஷஹீதாகிவிட்டார். அவரை வானவர்கள் மேலுலகுக்குக் கொண்டு சென்று குளிப்பாட்டிக் கொண்டிருப்பதையே நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

போருக்குச் சென்றவர்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வீட்டார்களில் கழிந்த இரவு மணமுடிக்கப்பட்ட அந்தப் பெண்ணுமாவாள். போர்க் களத்திலிருந்து வருபவர்கள் தரும் செய்திகளில் பலர், இறந்துவிட்ட விசயம் கேள்விப்பட்டதோடு, அந்தப் பெண்ணின் கணவரும் இறந்துபட்டதாகக் கேள்வியுற, 'இன்னாலில்லாஹி' என்று மொழிந்து கொண்டே, அந்த இள மங்கை, ''எங்கள் ரஸூல் நாயகத்தின் நிலை என்ன?'' என்று ஆர்வத்தோடு வினவினாள்; நபி (ஸல்) அவர்கள் சுகமாக இருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப் பட்ட பிறகே மன நிம்மதியானாள்.

என்னே! நம் ரஸூலுல்லாஹ்வின்மீதுள்ள மகத்தான அன்பு! பக்திப் பிரவாகத்தின் பெருக்கு! மித மிஞ்சிய பாசத்தின் தீவிரப் போக்கு! நபிகள் கோமான் (ஸல்)அவர்களை மஹப்பத்து வைப்பது, ஈமானின் அதி முக்கியமான 'ஷர்த்து'களில் ஒன்று. அவர்களின் மீது அடக்க முடியாத காதல் கொண்டிருப்பது வலித்தனம் ஏற்படுவதற்குண்டான ஒரு முக்கியத்துவமாகும்.

மஹப்பத்தை வலியுறுத்தக்கூடிய நிகழ்ச்சிகளில் சிலவற்றை, இங்கு குறிப்பிடுவோம். வல்ல (இறைவன்) அல்லாஹ் கூறுகிறான்.

***''விசுவாசிகளுக்கு, அவர்களுடைய உயிர்களைவிட (நமது தூதரான) நபிதான் மிக்க மேலானவர்.''*** *(33- 6)*

இதன்படி நபி (ஸல்) அவர்களின் விஷயத்தில் சர்ச்சை செய்வோர் 'முஃமின்' களாகயிருக்க முடியவே முடியாது என்பது மிகத் தெளிவு.

*''(நபியே!)* ***நாம் உம்மை உலகத்தாருக்கு ஓர் அருளாகவே அன்றி அனுப்பவில்லை.''*** ***(21-107)***

இதுபோன்று இன்னும் எத்தனையோ வசனங்கள் திருகுர்ஆனின் உள்ளன.

## நபி (ஸல்) அவர்களில் வாழ்விலிருந்து;

'தம் பெற்றோரை விடவும், மனைவி மக்களை விடவும், உலக மாந்தர்கள் அனைவரை விடவும், என்மீது உங்களில் எவரும் அன்பு செலுத்தாதவரை, அவர் உண்மையான முஃமினாக ஆக முடியாது,'

*(ஹதீது)*

ஒரு ஸஹாபி எப்பொழுதும் 'தப்பத்யதா அபீலஹ பின்' என்ற சூரத்தை ஓதித் தொழுது கொண்டிருந்தார். இதனைக் கவனித்த நபி (ஸல்) அவர்கள், அவரிடம், ''உமக்கு இதைத் தவிர வேறு சூரத்துக் கிடைக்க வில்லையா''? என்று கேட்டார்கள்.

இந்த இரண்டு ஹதீதிலிருந்தும் நபிகள் நாயகத்தின் மீதுள்ள அன்பின் முக்கியத்துவமும், குர்ஆனிலே சபிக்கப்பட்டிருந்தும், தமது உறவினரான அபூலஹபை நாம் குறை காண்பது கூட நபி (ஸல்) அவர்களுக்கு அதிருப்தியைத் தரும் என்பதும் தெரிகிறது.



## ஸெய்யிதுனா உமர்(ரலி) அவர்களின் வாழ்விலிருந்து:

கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம். ஒரு நாள் மதீனாவின் தெரு ஒன்றில் வாலிபர்களான ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களும், கலீபாவின் மகனான ஹஸ்ரத் அப்துல்லாஹ் இபுனு உமர் (ரலி) அவர்களும், சில நண்பர்களும் உரையாடிக் கொண்டிருந்தனர். பேச்சுக்கிடையே ஹுஸைன் (ரலி) அவர்கள் இபுனு உமர் (ரலி) அவர்களைப் பார்த்து ''உம்முடைய தகப்பனார் கலீபாவாக இருந்துவிட்டால் என்ன? அவர் எனது பாட்டனாரின் அடிமைதானே'' என்று இடித்துக் கூறினார்கள். இதைக் கேட்டதும் இபுனு உமர் (ரலி) அவர்களுக்கு வெட்கம் வந்துவிட்டது. மனவேதனையோடு வீட்டிற்குச் சென்றார்கள். மகன் முகவாட்டமாக வருவதைக் கண்ட கலீபா அவர்கள், மகனிடம் விபரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். ஆவேசம் வந்தவர்களைப்போல் மகனின் கையைப் பற்றிக்கொண்டு ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு வந்து, உடனடியாக ஹுஸைன் (ரலி) அவர்களின் கையைத் தனது மற்றொரு கையால் பற்றிக் கொண்டு, ''என் மகனிடம் சற்று முன்னர் நீர் கூறிய அதே வாசகத்தை மீண்டுமொருமுறை கூறும்,'' என்று கேட்டுக் கொண்டார்கள். இளவல் ஹுஸைன் (ரலி) அவர்கள் திகைத்துப் போய், கலீபாவைத் தரக்குறைவாக, அதுவும் தம் பாட்டனாரின் அடிமை என்று கூறியது தவறல்லவா? என்ற மனக்குறையுடன் பதில் கூறாமல், அமைதியாக நின்றார்கள். அப்போது கலீபா அவர்கள் வாலிபர்கள் இருவரின் கரங்களையும் பற்றியவர்களாக, நாயகம் (ஸல்) அவர்களின் ரவ்லாவின் முன் வந்து சேர்ந்தார்கள். அது சமயம் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. தேம்பித்தேம்பி அழுதவண்ணம், ''யாரஸூலுல்லாஹ்'' என்னைத் தங்களுடைய அடிமை என்று தங்களுடைய அருமைப் பேரர் தமது வாயால் கூறிவிட்டார். இதோ அவரும் சாட்சியாக உடன் நிற்கிறார். தாங்கள் அதை ஏற்றுக்கொள் வீர்களாக! தாங்கள் என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டு விட்டால், நான் ஈருலகிலும் மேன்மையடைந்தவனாவேன்!'' என நெடுநேரம் கூறிக்கொண்டே தேம்பித்தேம்பி அழுதுக் கொண்டிருந்தார்கள்.

**'ரலியல்லாஹு அன்ஹு'**

**சுவர்க்கத்தைக்கொண்டு நன்மாராயம் பெற்ற இந்தப் புண்ணிய நாதரின் செய்கை; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதும்,**

அவர்களின் சந்ததிகள்மீதும் காட்டப்படவேண்டிய அன்புக்கு அறிவிப்பாக இருப்பதுடன், அப்துன்நபி, அப்துர் ரசூல், குலாம் ரசூல் என்று பெயர் வைப்பது 'குப்ரு' என்று கூறுவோருக்கு மறுப்பாகவும் இருக்கிறது.

## கலீபா உதுமான் (ரலி) அவர்களின் வாழ்விலிருந்து:

ஒரு சமயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஒரு மிஸ்கீன் வந்து கலியாணச் செலவுக்காக பணம் தேவை என்று கேட்டுக் கொண்டார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அது சமயம் ஏதும் வசதி இல்லாததால்; ஸய்யிதுனா 'உதுமான்' (ரலி) அவர்களின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர் அங்கு சென்று அல்லாஹ் வின் பெயரைச் சொல்லி உதவி கேட்டபோது, ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவருக்குப் பத்து பொற்காசுகள் கொடுத்து அனுப்பினார்கள். அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, ''தமக்குக் கிடைத்தது போதாது'' என்று முறையிட்டுக் கொண்டார். மீண்டுமொரு முறை அவரை ஸய்யிதுனா உதுமான் (ரலி) அவர்களிடம் செல்லும்படியும், இந்தமுறை ''நபி அவர்களின் முகத்திற்காகத் தாருங்கள்'' என்று கேட்கும் படியும் நபியுல்லாஹ் (ஸல்) சொல்லி அனுப்பினார்கள். அவர் அதுபோல் சென்று வேண்டினார். ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் முன்போல் அல்லாது அவரை வரவேற்று இருக்கச் செய்து விட்டு, வீட்டிற்குள் சென்று, சிறிது நேரத்திற்குப்பின் திரும்பி வந்து அவர்முன் பண முடிச்சுகள் பலவற்றை வைத்து வேண்டியதை எடுத்துச் செல்லும்படி கூறினார்கள். யாசகருக்குத் திகைப்பும் வியப்பும் ஏற்பட்டுவிட்டது. வீட்டைவிட்டும் விரைந்து வெளியேறி நபி (ஸல்) அவர்களிடம் ஓடோடிச் சென்று, நடந்தவைகளைக் கூறினார். ''ஹஜ்ரத் உதுமான் (றலி) அவர்களுக்குக் கோபம் வந்து விட்டதோ?'' என்று அவருக்குச் சந்தேகம். நபி (ஸல்) அவர்கள் உடனடியாக ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களை அழைத்துவரச் செய்து காரணத்தை வினவினார்கள். அதற்கு உதுமான் (ரலி) அவர்கள் கொடுத்த பதில் இதோ வருமாறு:

''யாரஸூலுல்லாஹ்! இவர் அல்லாஹ்வின் பெயரைக் கூறி யாசகம் கேட்டார். அதற்குப் பத்து பொற்காசுகளைக் கொடுத்தேன். மீண்டும் வந்து உங்களின் முகத்திற்காக வேண்டினார். என்னால் அவ்வரை மறுக்கவே முடியவில்லை. அல்லாஹ் ஒருவன் இருக்கிறான்; அவனுடைய கருணையும் அன்பும் எங்களுக்குக் கிடைக்கும் என்று காட்டித் தந்தவர்கள் தாங்கள் தானே. தாங்கள் இல்லையெனில் நாங்கள் மிருகங்களாகத்தானே இருந்திருப்போம். எங்களுக்கு மிக அண்மையிலிருந்து, தாங்கள் காட்டிய வழியின் மூலமாகத் தானே அல்லாஹுவை நாங்கள் காண்கிறோம். அவ்வாறிருக்கத் தங்கள் பெயரைக் கூறிக் கேட்பவருக்கு என்னிடம் இருக்கும் அத்தனையையும் அள்ளிக் கொடுத்தாலும் ஈடாகாதே!'' எனப் பகர்ந்தார்கள்.

'ரலியல்லாஹு அன்ஹு'



## ஸய்யிதுனா அபூபக்கர் (ரலி)
## ஸய்யிதுனா அலீ (ரலி) ஆகியோரின் வாழ்வில்:

இவைபோன்று பல நூறு நிகழ்ச்சிகள் நடந்ததையும்; இவர்கள் இருவரும் ரசூலே கரீம் (ஸல்) அவர்களின் ஷரீஅத்திற்கும், தரீகத்திற்கும், முறையே அடுத்த பிரதிநிதிகளாக இருந்து செயலாற்றினர் என்பதையும் நாம் அறிவோம். 'ரலியல்லாஹு அன்ஹு'.

## புனித ஸஹாப்பாக்களின் அன்புப்பெருக்கு:

'ஹுதைபிய்யா' என்ற இடத்தில், நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் 'ஒளு'ச் செய்தபோது முஸ்லிம்கள், அந்தத் தண்ணீரை மிக மிக மகிமை பொருந்தியதாகக் கருதியதனால், தண்ணீரில் ஒரு துளிகூட பூமியில் விழ மனம் சகித்துக்கொண்டார்களில்லை. இந்தச் சம்பவ நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த குரைஷியர்களின் தூதுவரான 'உவாபின் மஸ்ஊது' என்பவர் மிக்க விரைவாக குரைஷியர்களிடம் சென்று, ''குரைஷிகளே! சீக்கிரமாக வந்து முஹம்மது (ஸல்) அவர்களிடம் சமாதானம் செய்து கொள்ளுங்கள். நான் எத்தனையோ முறை கைஸர், கிஸ்றா முதலிய சக்கரவர்த்திகளின் தர்பாருக்குச் சென்றிருக்கிறேன். ஆனால், முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி இருப்பவர்கள், அவருக்குச் செய்யும் சங்கை மிக மரியாதையைப்போல், நான் எங்கும் பார்த்ததே இல்லை. அவர்களெல்லோரும் அவருடைய ஓரே சயிக்கினையைக் கொண்டு, அடிமைகள்போலாகி விடுகின்றனர்; அவருடைய உமிழ்நீரைக்கூட பூமியில் விழவிடுகிறார்களில்லை'' எனக்கூறினார். (ஹுதைபிய்யா உடன்படிக்கைக்கு இது ஒரு முக்கிய காரணமாயிருந்தது.)

'பத்ரு யுத்தத்திற்காக இறுதி அறிக்கை வெளியட்டபோது, நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், முஸ்லிம்களை நோக்கி, ''இதுபொழுது யுத்த விஷயமாக உங்கள் அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறதென்று'' வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் ஸஅதிப்னு முஆத் (ரலி) முன்வந்து, ''அல்லாஹ்வுடைய ரஸூலே! எந்த நிலைமையிலும் தாங்கள் யாருடன் உடன்படிக்கை செய்து கொண்ட போதிலும், அல்லது உடன்படிக்கையை நீக்கிக்கொண்ட போதிலும், நாங்கள் தங்களுடனேயே இருப்போம். தாங்கள் எங்களுடைய சொத்து சுதந்திரங்களையெல்லாம் ஒப்புக் கொண்டு, எங்களுக்காகக் கொஞ்சம் விடுவதைப் பொருந்திக் கொள்கிறோம். நாங்கள் தங்களது ஒவ்வொரு கட்டளைகளையும் சிரமேல் தாங்கி நடப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தங்களிடம் கொடுக்கும் காசு பணங்களானது, எங்களிடம் மீதமிருப்பவைகளைவிட மேலானதாக இருக்குமென்று கருதுகிறோம். நாங்கள் தங்களுடனேயே இருப்போம். தாங்கள் கடலில் குதிப்பதற்கு அனுமதி அளிப்பீர்களாயினும், உடனே குதித்துவிடத் தயாராக இருக்கிறோம்,'' எனத் தெரிவித்துக் கொண்டார்.

ஹஜ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள், ''அல்லாஹ்வுடைய ரஸூலே! நாங்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய, கூட்டத்தார்கள் சொன்னதைப் போன்று, (அதாவது) 'நீங்களும் உங்களுடைய ஆண்டவனும் சேர்ந்து சண்டை போடுங்கள். நாங்கள் இந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்'' என்பது போன்று ஒருக்காலும் சொல்ல மாட்டோம். நாங்கள் தங்களை, முன்பின் வலது பக்கம் இடதுபக்கம் சூழ்ந்து கொண்டு, தங்களுக்காக எங்களுடைய உயிர்களை தியாகம் செய்வோம்.'' எனக் கூறினார்கள்.

இவைபோன்று மஹப்பத்தின் அளவிடற்கரிய சம்பவங்களை ஸஹாபாப் பெரு மக்களின் வாழ்க்கை வரலாற்றில் காணலாம்.

'ரலியல்லாஹு அன்ஹு'

ஆகவே, நாமும் அவர்களைப்போல் நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மேல் அன்பும், பிரியமும் வைத்து, அருமை பெருமை பாராட்டி, அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அல்லும் பகலும் அனவரதமும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்துக்கூறக் கடவோமாக.

**'ஸல்லல்லாஹு அலா முஹம்மது**
**ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்.'**



## மவ்லிது (உரூஸ்)

மவ்லிது ஓதும் பழக்கம், திக்ரு வகையைச் சேர்ந்ததே. அவை:- அல்லாஹ்வைப் புகழுதல், அவனது திருத்தூதரை வாழத்துதல், அவனது நல்லடியார்களைப் பெருமைப்படுத்துதல் ஆகிய நற்செயல்களாம்.

''நீங்கள் யாரை உகப்பு வைக்கின்றீர்களோ? அவர்களுடன் இருப்பீர்கள்.'' (நா - வா)

எவர் ரஸூலுடைய மவ்லிதுக்கு வருகை தந்து, அவர்களின் தகுதியை வலுப்பமாக்கி வைத்தால், நிச்சயமாக அவர் ஈமானைக் கொண்டு வெற்றி பெற்றவராக ஆகிவிட்டார்.

(மஃரூபுல் கர்கீ-ரஹ்)

ஒருவர் மவ்லிது ஓதப்படுகிற தலத்தை நாடி நடந்தால், நிச்சயமாக அவர் சுவர்க்கத்துப் பூங்காவனத்தை நாடிவிட்டார். ஏனெனில், அவர் அந்தத் தலத்திற்கு ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் மஹப்பத்தைப் பெறுவதற்காகவே வந்துள்ளார்.'' எவர் என்மீது மஹப்பத்து வைத்தாரோ, அவர் என்னுடனே சுவனபதியில் இருப்பார்'' என்று கோமான் நபி (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள் என்பதாக - ஸிர்ரி யுஸ்ஸிக்தி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், தங்கள் மனையில் ஓரிடத்தை அழகுபடுத்தி, அதில் சில ஸஹாப்பாக்களுடனிருந்து, நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்த பண்புகளை விளக்கிக் கொண்டிருக்க, அண்மையில் இருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் காது தாழ்த்தி அதபுடன் கேட்டுக்கொண்டிருக்கும் சமயம், சர்வரே ஆலம் நாயகம் (ஸல்) அவர்கள், அங்கு வருகை தந்து 'உங்களுக்கு என்னுடைய ஷபாஅத்து வாஜிபாகி விட்டது', என்று திருவுளமானார்கள்.

இதுபோன்று:- அபீதர்தா (ரலி) அவர்களும், நாயகம் (ஸல்) அவர்களும், அமீருல் அன்ஸாரி (ரலி) அவர்களுடைய வீட்டிற்குச் சென்றதில், அங்கு அவர் தம் குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும், நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அவதரித்த அற்புத நிகழ்ச்சிகளைக் கூறிக்கொண்டே ''அந்த நாள் இதுதான்! அந்தப் புனித நாள் இதுவே!'' என்று மகிழ்ச்சி ததும்ப சொல்லிக்கொண்டிருந்ததைக் கண்ட நாயகம் (ஸல்) அவர்கள், ''உமது பேரில் அல்லாஹுத் தஆலா

ரஹ்மத்துடைய வாசலை திறந்துவிட்டான், மலக்குகளெல்லாரும் உமக்காகப் பிழை பொறுக்கத் தேடுகின்றனர்'' என அருளியுள்ளார்கள். (கிதாபுத் தன்விர்)

மவ்லிது ஓதும் பழக்கம், இஸ்லாத்தின் ஆரம்பக் காலம் தொட்டே இருந்து வருகிறது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், அவர்களின் திருச்சமுகம் நின்று, அவர்கள் மீது புகழ்ந்துபாடி, ஹல்ரத் ஹஸ்ஸான் இப்னு தாபித்து (ரலி) அவர்களும், கஅபு இப்னு ஸுபைர் (ரலி) அவர்களும், இன்னும் பல சிறந்த கவிவாணர்களும் சன்மானம் பெற்றனர். அன்றி, அவர்களின் வபாத்திற்குப்பின், மகத்துவமிக்க இமாம்கள், பல ஞான மேதைகள், நபியுல்லாஹ் மீது அவர்களுக்கிருந்த ஆஷிக்கையும், மஹப்பத்தையும் காட்டி புகழ்ப்பாக்கள்பாடி, அதன் மூலம் அவர்களைக் கனவில் தரிசித்து, தத்தம் நாட்டங்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டவர்களின் வரலாறுகள் பலவாகும். ஆகவேதான் மவ்லிது வைபவம், ஒரு கன்னத்தான வணக்கமாகிவிட்டது. இதில் வேறு பல நன்மைகளும் உண்டு.

1) அரபு நாடுகள் அல்லாத பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள், அந்த நாட்டுப் மொழிகளில் உள்ள பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த சிற்றின்பத்தை உணர்த்தும் காவியங்கள், கதாகாலட்சேபங்கள், நாடகம், கூத்து இவற்றால் இழுக்கப்பட்டு, வழிதவறிச் செல்லாமல், பேரின்பமயமான இந்த மவ்லிது, கந்தூரி வைபவங்கள் மிகவும் அவசியம்.

2) தொழுகை, நோன்பு போன்ற மத கடைப்பிடிப்புகள் இல்லாமல், பெயரளவில் மாத்திரம் முஸ்லிம்களாக இருக்கும் பலர், சிறிதளவாவது மார்க்கத்தோடு தொடர்பு வைப்பதற்கும், பல சமயங்களில் மனம் திரும்பி நேர்வழி பெறவும் இது ஒரு இலகுவான முறையாகும்.

3) மவ்லிது கந்தூரிகளை விபரம் தெரியாமல், அனாச்சாரம் என்று ஒதுக்கிவிடுவதால், பாமர மக்களுக்குத் தீனோடு உள்ள சிறிதளவு தொடர்பும் அற்றுப்போய், காலப்போக்கில், அவர்கள் பூரணமாக வெளியேறும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

4) இது ஒரு வகையில் தவ்ஹீதை வற்புறுத்துகிறது. அல்லாஹ்விற்குப் பிறப்பும், இறப்பும் இல்லை. ஆனால், மனிதர்களான நபிமார்களுக்கும், அவ்லியாக்களுக்கும் பிறப்பு (மவ்லிது)ம், இறப்பு (வபாத்து)ம் உண்டு என்பதை வலியுறுத்துவது மட்டுமல்ல, அடிக்கடி அல்லாஹ்வின் திருநாமத்தைக் கேட்கும்போது, **'ஜல்ல ஜலாலுஹு'** என்றும், நபிகள் கோமான் (ஸல்)அவர்களின் திருப்பெயர் கேட்கும் போது, **அல்லாஹும்ம ஸல்லி அலா ஸய்யிதினா முஹம்மதின் வ ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.'** எனவும், நபிமார்கள் நாமம் வரும் போது **'அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம்'** எனவும் அவ்லியாக்களின் பெயர் கூறும்போது **'ரலியல்லாஹு அன்ஹு'** எனவும் மனமகிழ்ந்து கூறுவதால், அனேக நன்மைகள் கிடைக்கப்பெறுவதுமன்றி, அவர்களின் அன்பைப் பெறுவதால் நமது சிரமங்களை அல்லாஹ் அகற்றி விடுகிறான்.



மவ்லிது வைபவத்தை நேரில் கண்டு பாராட்டிய மற்றைய சமயத்தவர்களில் பலர், இஸ்லாத்தைத் தழுவிய வரலாறுகள் பல. அவற்றில் ஒன்று:-

## அப்துல்லாஹிப்னு இஸ்மாயீல் (ரஹ்) கூறுகிறார்கள்:

மிஸ்ரு பட்டணத்தில் ஒருவர் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மவ்லிது கந்தூரியை, அன்ன பதார்த்தங்களுடன் மிகவும் சிறப்பாக வருடந்தோறும் நபியுல்லாஹ் பிறந்த மாதத்தில் மவ்லிது நடத்திவந்தார். அவர் வீட்டின் அடுத்த பாகமாக ஒரு யஹூதி வசித்து வந்தார். அவரின் மனைவி கணவரைப் பார்த்து ''வருஷந்தோறும் இந்த மாதம் வந்தால், அடுத்தவீட்டு முஸ்லிம் பெரும் தொகையைச் செலவு செய்து, மக்களை அழைத்து, வீட்டில் பிரார்த்தனை நடத்தி, மகிழ்ச்சியோடு உணவளித்து சங்கை செய்கிறாரே, என்ன காரணம்? என்று கேட்க, அதற்கு அவர், ''இந்த நாள் முஸ்லிம்களின் நபி முஹம்மது பிறந்த நாள். அதற்காக இந்தவிதமான சங்கையும் சிறப்பும் செய்து கொண்டாடுகிறார்கள்'' எனக் கூறினார். அதைக் கேட்ட அந்தப் பெண் ஒன்றுமே பேசாமல் மௌனமாயிருந்தாள்.

இரவானதும் யஹூதியும் அவர் மனைவியும் நித்திரை செய்தனர். அந்தப் பெண்ணின் கனவில் பக்கத்து வீட்டில் மவ்லிது கந்தூரி நடப்பது போலவும், அது சமயம் சங்கையான அழகுடைய ஒருவரும், அவருடனே ஸஹாப்பாக்கள் ஒரு கூட்டமும், அவரைப் பெருமைப்படுத்தியவர்களாக வருவதையும் கண்டு, அந்தப்பெண் அவர்களில் ஒருவரிடம், ''இவர்கள் யார்? எங்கே போகிறார்கள்?''

எனக் கேட்க, அந்த மனிதர் 'இவர்கள் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபியாகும். இவர்கள் அந்த முஸ்லிமான மனிதரின் வீட்டிற்குப் போய், அங்குள்ளவர்களுக்கு சலாம் சொல்லி ஸியாரத்துச் செய்யப் போகிறார்கள்'' எனக் கூறினார். உடனே அவள் ''அவர்களோடு நான் உரையாடினால் பதில் சொல்வார்களா?'' என்றதும், ''ஆம்'' என்றார் அவர். உடனே அந்தப் பெண் நாயகத்திருமேனியிடம் சென்று ''யாமுஹம்மத்' (முஹம்மதே) என்றதும், 'லப்பைக்' என்று நபியுல்லாஹ் பதில் சொன்னதைப் பார்த்து ஆச்சரியமாக, 'நான் வேறு மதத்திலிருக்க, எனக்கு இந்தவித சங்கையான வார்த்தையைக் கொண்டு எதற்காகப் பதில் சொன்னீர்கள்' என்றதும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்:

''நீ நேர்வழி பெறுகிறதை நிச்சயமாகத் தெரிந்தே அல்லாமல் உன்னுடைய கூப்பிடுதலுக்கு இந்தவித பதில் சொல்லவில்லை'' என மொழிந்தார்கள். இதைக்கேட்ட அந்தப் பெண்:

''நீங்கள் சங்கையான நபி. வலுப்பமிக்க நற்குணமுள்ளவர்கள். உங்களுக்கு மாறு செய்பவன், இரு பதியிலும் கெட்டான். ஆகவே உங்கள் முபாரக்கான கரத்தைப் பற்றியதாக நினைத்து, இதோ நான் இஸ்லாத்தைத் தழுவி விட்டேன்'' எனக் கூறிக்கொண்டே திருக் கலிமாவை மொழிந்து, பின் தனது மனத்தில், நமது பொருள்களை ஸதகாக் கொடுத்து, நபி மீது மவ்லிது சிறப்பாக நடத்த வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டாள்.

காலையில் எழுந்ததும் அவளின் கணவர் மவ்லிது நடத்தும் வேலைக்காக மிகவும் சுறுசுறுப்புடன் எத்தனிப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று, ''இது எதற்காக என்ன காரணம்?'' என வினவியதற்கு அவர் ''நீ இரவு இஸ்லாத்தைத் தழுவினாயல்லாவா? அந்த சங்கையாளர் முஹம்மது நபியின் மவ்லிதை நடத்தப் போகிறேன்'' என்றார். அதற்கவள் ''அது உமக்கு எப்படித் தெரிய வந்தது?'' எனக் கேட்க, நீ இஸ்லாத்தைத் தழுவியதும், நான் அவர்களின் கரத்தைப் பிடித்து, இஸ்லாத்தில் ஆகிவிட்டேன். அந்த நபி எனக்கு அறிவித் தார்கள்'' எனக் கூறினார்.

(மவ்லித் ஷரபுல் அனாம்)

இவைபோன்று பல நூறு நிகழ்ச்சிகளைச் வரலாற்று நூல்களில் காணலாம்.



**ஹதீது:-**

'**யா**ராகிலும் ஒருவன், என்னையாவது கஃபாவையாவது கனவில் கண்டால், அந்தக் கனவு உண்மையானதாயிருக்கும். ஏனெனில், ஷெய்த்தான் என்னுடைய உருவத்தில் வரமாட்டான்'' (நா.வா)

அரேபியாவின் நஜ்து மாகாணம் நீங்கலாக, எல்லா அரபு நாடுகளிலும் மவ்லிதுகள் இருந்து வருவதுடன், மக்கா, மதீனா, ஜித்தா, தாயிபு ஆகிய ஊர்களில் தனிப்பட்ட மவ்லிதுகள் நடைபெறுகின்றன.

முல்லா அலி காரி (ரஹ்) அவர்கள் 'ஷரஹ் மனாஸிக்' என்ற நூலில் எழுதுகிறார்கள்:

நமதருமை நாயகம் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் வபாத்தாகி இரு நாட்கள் வரை கலீபா நியமனத்திலும், அடக்கத் தலத்தை நிர்ணயிப்பதிலும், காலதாமதமாகி, கடைசியாக ஸய்யிதுனா அபூ பக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டபின், நாயகி ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்களது வீட்டின் அறையிலேயே தபன் செய்யப்பட்டார்கள். அன்று மதீனா வாசிகள் உள்பட, அங்கு வந்திருந்த முஸ்லிம்கள் யாவருக்கும், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் 'ஈஸால்' தவாபுக்காக வேண்டி உணவு தயார் செய்தார்கள். 'யாது காரணத்திற்காக இவ்விதம் செய்கிறார்கள்' என்று கூடி இருந்தோர், ஒருவருக்கொருவர் வினவியதற்கு, இன்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உரூஸ் என்பதாக விஷயம் தெரிந்தவர்கள் விடை பகர்ந்தனர்.

'உரூஸுடைய நாளைப் பேணி ஸியாரத்துச் செய்வதில் மிகுந்த நற்பலன்கள் உண்டு.' (நூல், பத்ஹுல் ஹக்கு)

அவ்லியாக்களுடையவும், அன்பியாக்களுடையவும் மவ்லிது முதலான மதுஹுகளை ஓதி வருவதால், அந்த நாதாக்களின் கிருபா நோக்கம் உண்டாகி, அவர்களுடைய துஆப்பேற்றையும் பெற்றுக் கொள்ள அல்லாஹ் அருள் புரிகிறான்.

(ஜுனைதுல் பக்தாதி (ரஹ்)

## மவ்லிது ஓதுவதின் ஷர்த்து

ஐங்காலத் தொழுகையில் பேணுதலாக இருப்பவர்களைக் கொண்டு, மவ்லிது ஓத வைப்பது மிக நன்று. எதற்கானால், அந்த

ஓதலினால் தொழுகை கலாவாகும்படி, இரவெல்லாம் விழித்திருந்து ஓதி ஸுப்ஹுத் தொழுகையைக் கலாவாக்கும் பொடுபோக்கான நபர்களால், எந்தப் பலனையும் அடைவதரிது. பர்லான வணக்கத் திற்குப் பழுது வருத்தும் அமல்களெல்லாம் வீணானதே. அது ஹராம் என்றும் சொல்லப்படுகிறது.

மவ்லிது மஜ்லிஸ்களுக்கு மலக்குகள் வருகிறார்கள். நபிமார்கள், வலிமார்கள், நாதாக்களின் ரூஹுகள் ஹாளிறாகின்றன. அந்த இடத்தில் ஹராமான செய்கைகள் நடைபெறாமலும் அந்த மவ்லிதுக்கு ஹராமான சம்பாத்தியம் சம்பந்தப்படாமலும் இருக்க வேண்டும்.

إِنَّ اللهَ لَا يَنْظُرُ إِلَىٰ صُوَرِكُمْ وَأَمْوَالِكُمْ وَلٰكِنْ يَنْظُرُ إِلَىٰ
قُلُوبِكُمْ وَأَعْمَالِكُمْ

நிச்சயமாக அல்லாஹ் (ஜல்) உருவத் தோற்றத்தையாவது, உங்கள் செல்வங்களையாவது பார்ப்பதே இல்லை. ஆனால் உங்கள் மனப்பான்மைகளையும், உங்கள் செயல்களையுமே அவன் பார்க்கின்றான். (ஹதீது)

## 2-வது ஹத்யா
## நபி பெருமானாரின் சுற்றத்தாரை நேசித்தல்

إِنَّمَا يُرِيدُ اللهُ لِيُذْهِبَ عَنْكُمُ الرِّجْسَ أَهْلَ الْبَيْتِ
وَيُطَهِّرَكُمْ تَطْهِيرًا ۝

**(நபியுடைய) ''வீட்டுக்காரர்களே! உங்களைவிட்டும் சகல அசுத்தங்களையும் நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமானவர் களாகவேயிருக்க அல்லாஹு விரும்புகிறான்.''**

இங்ஙனம் நபிகள் நாதரின் குடும்பத்தவர்களை அல்லாஹு பரிசுத்தப்படுத்தியும், பாவம் என்பதே இன்னதென அறியாதபடியும், ஒரு குறைவும் இல்லாதபடியும் செய்திருப்பதால், ரஸூல் (ஸல்) அவர்களையும் **'அவ்வாதுர் ரஸூல்' 'அஹ்லபைத்து'** களாகிய 'கதீஜா' 'ஆயிஷா' 'அலி' (ரலி) 'பாத்திமா'(ரலி) 'இமாம் ஹசன்' (ரலி) 'இமாம்



ஹுஸைன்' (ரலி) ஆகிய இவர்களை மஹப்பத்து வைப்பதிலும், மரியாதை செய்வதிலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மஹப்பத்தும், ஷபாஅத்தும் கிடைக்கும் என்பதாக இமாம்கள் எல்லோரும் ஒருமிக்கக்' கூறி இருக்கின்றார்கள்.

மாதிஹுஸ்ஸிப்தைன் மாப்பிள்ளை ஆலிம் வலியுல்லாஹ் அவர்கள் தங்களுடைய ''மவாஹிபுஸ் ஸைய்ன்'' என்ற நூலில், ''நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் குடும்பத்தார்களையும் நேசிப்பது, இரண்டும் இரண்டு 'பர்ளு'களாகும். இந்த இரண்டு பர்ளுகளுக்கு மிடையில், எந்த வித்தியாசமுமில்லை'' என்று குறிப்பிடுகிறார்கள். இது சிரமமில்லாததோர் வணக்கமாகும்.

***அங்கே ஓர் நிகழ்ச்சி:-***

*ஸய்யிது ஜஃபர்ஸாதிக் (ரலி) அவர்கள், (குர்ஆனில்):-*

***'பதலக்கா ஆதமு மின் ரப்பிஹீ கலிமாத்தின் பதாப அலைஹி'* என்ற ஆயத்திற்கு விளக்கம் தருவதாவது:-**

*ஆதம் ஹவ்வா அலைஹி முஸ்ஸலாம் இருவர்களும், சுவன பதியில் மகிழ்ச்சியோடிருக்கும்போது, ஒரு சமயம், 'ஜிப்ரீல்' (அலை) அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்று, சுவனபதியில் பொன் வெள்ளி இவைகளால் கட்டப்பட்ட ஓர் மாளிகையில் புகுந்து, அதன் சிறப்பைக காட்டினார்கள். அந்த மாளிகையின் தூண்களெல்லாம் பச்சை மரகதத்தினாலிருக்கின்றது. அதில் சிவந்த மாணிக்கத்தினால் ஒரு கட்டில் இருக்கிறது. அதன் நடுவில் ஒரு கொலு, அதில் ஓர் பெண்ணின் வடிவம் (ஸூரத்) உண்டாகியிருப்பதும், அதன் தலையில் கிரீடமும், இரு காதுகளில் பாளி (காதணி)யும், கழுத்தில் சவடி, அதன் ஒளிவும் சோபிதமும் இவ்வளவென சொல்வதற்கரிது. இந்தக் காட்சியைக் கண்ணுற்ற நபி ஆதமும் ஹவ்வாவும் மிக ஆச்சரியமானார்கள்.*

*ஆதம் (அலை) அவர்களுக்கு, ஹவ்வா (அலை) அவர்களின் வடிவமும் அழகும் மறந்துபோய், 'ஜிப்ரீல்' (அலை) அவர்களிடம் ''இந்தச் சவுந்தரி யார்?'' என வினவ, அதற்கவர்கள் ''இது பாத்திமா''. அந்தக் கிரீடம் அவரது தந்தை 'முஹம்மது' (ஸல்), அந்தத் தாலி அவரின் கணவர் அலி (ரலி), இரண்டு காதணியும் அவரின் மக்கள் ஹஸன், ஹுஸைன் இருவருமாவர்.'' என' பகர்ந்தார்கள். பின்னர்.*

ஆதம் நபி அவர்கள் தலையை உயர்த்தி, அந்தக் கொலுவின் உயரே பார்க்க, அங்கு ஒளிவினால் ஐந்து திருப்பெயர்கள் கொண்ட வாசகமொன்று பொறிக்கப்பட்டிருந்தது. அது அல்லாஹ்வின் சமூகத்தில் நின்றுமுள்ளதாகும். அவை:

أَنَا الْمَحْمُودُ وَهٰذَا مُحَمَّدٌ وَأَنَا الْأَعْلٰى وَهٰذَا عَلِيٌّ رض وَأَنَا الْفَاطِرُ وَهٰذِهٖ فَاطِمَةُ وَأَنَا الْمُحْسِنُ وَهٰذَا الْحَسَنُ فَمِنِّي الْإِحْسَانُ وَهٰذَا الْحُسَيْنُ

உரை:

**நான் 'மஹ்மூது'. இவர் 'முஹம்மது'. நானும் புகழப்பட்டவன், இவரும் புகழப்பட்டவர். நான் சகல குறைகளை விட்டும் உயர்ந்தவன், இவரும் உயர்ந்தவர். இன்னும் நான் படைக்கின்றவன், இவர் மாய்கையை விட்டும் நீங்கியவர்; நான் உபகாரம் செய்கிறவன்; இவருக்கு என்னில் நின்றும் உபகாரமுண்டு, மற்றவர்களுக்கும் அதுபோல் உண்டு.''** என்ற வாக்கியங்களைக் கண்டுப் புதுமையானார்கள் உடனே ஜிப்ரீல் (அலை) அவர்கள்:-

''ஓ! ஆதமே இந்தப் பெயர் (அஸ்மாக்)களைப் பாடமிட்டுக் கொள்ளுங்கள். இந்த மகத்தான திருப்பெயர்கள் தக்க தருணத்தில் உங்களுக்குத் தேவைப்படலாம்'' எனக் கூறினார்கள். சில காலம் சென்ற பின்,

நபி ஆதம் ஹவ்வா (அலை) இருவருக்கும், அல்லாஹுத்தஆலா கொடுத்திருந்த சிறப்புகளைக் கண்டு மனம் பொறுக்காமல், 'இப்லீஸ்' பொறாமை (ஹஸது) வைத்து, ''ஷஜ்ரதுல் குல்து' என்ற மரத்தின் கனியை அருந்துபவர் ஊழிகாலம் வரை பல பாக்கியங்களுடன் சுவனபதியில் நிலையாக இருப்பார்'' எனச் சொல்லிக் கலைத்தான். ஏற்கெனவே, அல்லாஹு 'அந்த மரத்தை நெருங்க வேண்டாம் (கனியைப் புசிக்காதீர்) என்று விலக்கல் செய்திருந்தும், அதனை மறந்த ஆதம் அவர்கள், அவசரப்பட்டு அந்தக் கனியைப் புசித்த காரணத்தால், பல சோதனை களுக்கு ஆளாகி, இந்த உலகிற்கு அனுப்பப்பட்டார்கள். இங்கு 300 வருட காலம் அவர்கள் செய்த தவறை நினைத்து நினைத்து அழுது, இறைவன்பால் பாவ மன்னிப்புக் கோரியும், அது அங்கீகரிக் கப்படாமல் இறுதியாக, முன்னர் சுவனபதியில் பொறிக்கப்பட்டிருந்த திருக்கலிமாவும், மாளிகையினுள் கொலுவில் கண்டு மகிழ்ந்த ஐந்து



திருப்பெயர்களும் ஞாபகத்திற்கு வந்ததும், அதைச் சொல்லி அல்லாஹ்விடம் முறையிட்டு வேண்டினார்கள். கருணாகரனாகிய அல்லாஹ் அந்தக்கணமே அவர்களின் பிழைகளைப் பொறுத்து, பழைய சிறப்பையும் மகிழ்ச்சியையும் கொடுத்தருளினான். இதனையே இறைவன்:

**'ஆதம் சில வாக்கியங்களைத் தன் இறைவனிடமிருந்து (கற்று) எடுத்துக்கொண்டார். (அந்த வாக்கியங்களைக் கொண்டு, பிரார்த்தனை செய்தார்) அதனால் அவரை (அல்லாஹ்) மன்னித்து விட்டான்.'**

(2 -37)

ஆதம் நபி அவர்கள் சுவனமாளிகையில் கண்டு கற்று, பின் அதனைக் கூறி, தாம் சுவர்க்கம் செல்வதற்குக் காரணமாக இருந்த நபி முஹம்மது (ஸல்) அலீ (ரலி) சித்தினா பாத்திமா (ரலி) ஹஸன், ஹுஸையன் (ரலி) ஆகிய ஐவரையும், அரபியர்கள், 'கம்சஸ்ஸகிய்யா' என்றும், பார்சியர் 'பஞ்சத்த நப்பாக்' எனவும் சிறப்பித்துக் கூறுவர்.

இந்தத் திருநாமங்களை உரைப்பதாலும், வஸீலா தேடுவதாலும், கேட்கும் துஆ அங்கீகரிக்கப்படும் என்றும், ஹதீதில் காணப்படுகிறது.

சஃதீ ஷீராஜி (ரஹ்) அவர்கள் நாயகக் குடும்பத்தினரை வஸீலாவாகக் கொண்டு அல்லாஹுத் தஆலாவை விளித்து:-

**குதா யா ப- ஹக்கே பனீ பாத்திமா**
**கெபர் கவ்ல் ஈமான் குனம் காத்திமா**
**அகர் தஃவ தும் றத் குனீ தர் கபூல்**
**மனோ தஸ்தோ தாமானே ஆலெ ரஸூல்**

**உரை:-**

**இறைவா! பாத்திமா நாயகி (ரலி) அவர்களுடைய சந்ததிகளின் பொருட்டால், எனது முடிவை ஈமானுடன் ஆக்குவாயாக!! நீ எனது பிரார்த்தனையை நிராகரித்தாலும் சரி, அங்கீகரித்தாலும் சரி, நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தாரின் முந் தாணியைப் பற்றிப் பிடித்தவனாக இருக்கின்றேன்!!! என்று கூறினார்கள்.**

**இவைபோன்று, இமாம்களும் ஷரஅய்ப்பேணிய நாதாக்களும், இவர்களைக்கொண்டு உதவி தேடி இருக்கின்றார்கள். நாமும் அவர்களை மிகப் பிரியத்தோடும், மரியாதையோடும் புகழ்ந்து,**

நேசம்பூண்டு பின்பற்றி இகத்திலும், பரத்திலும் சுவர்க்கம் பெற கடமைப்பட்டிருக்கின்றோம்.

## தலைப்பாத்திஹாவில், மாப்பிள்ளை ஆலிம் (ரஹ்) அவர்கள்:

தாமதியா மறு கை தாங்கி ஷபா அத்தைத் தாரும்....பின்
கியாமத்து நாளில் ஸலாமத்தில் நாங்களெல்லோரும்....

(யாகுர்றத்)

கஃபா நுழைந்திடும் கம்கஸ்ஸ கிய்யத்தின் வாழ்வே...எங்கள்
தவ்பா கபூலாகத் தக்க சிபாரிசு தாவே

(யாகுர்றத்)

என்று வேண்டுகிறார்கள்.

அஹ்ல பைத்துகளின் பொருட்டுத் துன்பம் துயரங்கள் நோய் நொம்பலங்கள், மற்றும் இக்கட்டான சந்தர்ப்பங்களில், அவர்களை விளித்துப் பாதுகாவல் தேடி மனச்சாந்தி அடைவதற்கு மனமிளகி ஓதப்படும் பைத்து ஒன்று இங்கு தரப்படுகிறது.

لِي خَمْسَةٌ أُطْفِي بِهَا حَرَّ الْوَبَاءِ الْحَاطِمَةِ
اَلْمُصْطَفَى وَالْمُرْتَضَى وَابْنَاهُمَا وَالْفَاطِمَةِ

**லீ கம் ஸதின் உதுபூ பிஹா ஹர்ரல் வபாஇல் ஹாதிமா**
**அல் முஸ்தபா வல் முருதளா வப்னா ஹுமா வல் பாத்திமா.**

'வபா', 'ஜுத்ரி', தஃஊ' எனும் அனல் போன்ற (கொடிய) வெப்ப நோய்களையும், மற்றும் துன்பங்களையும் அகற்றக்கூடிய அரண் போன்ற ஐந்து பாதுகாவலர்கள் நமக்கு உண்டு. அவர்கள்: (1) நபிகள் நாயகம் (ஸல்) (2) ஸெய்யிதுனா அலிய்யில் முர்தளா (ரலி) (3) ஸெய்யிதுனா இமாம் ஹஸன் (ரலி) (4) ஸெய்யிதுனா இமாம் ஹுஸைன் (ரலி) (5) சித்தினா பாத்திமா ஸஹ்ரா (ரலி) ஆகியவர்கள் ஆவர்.

இந்த பைத்தை ஓதுவதால், அவர்களின் மகத்துவத்தினால் நிச்சயமாக அந்த நோய்கள் அகன்று விடுவதைக் காணலாம். இவர்களை நேசித்து உகப்பு வைப்பது போன்று, இவர்களது



சுற்றத்தார்களையும், வழித் தோன்றல்களையும், நாம் மிகப் பிரியத்தோடும் சங்கையோடும் புகழவும், நேசம் பூண்டு பின்பற்றி நடக்கவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## ஸாதாத்துகள்

பாத்திமா நாயகி (ரலி) அவர்களின் வயிற்றிலிருந்து கியாம நாள்வரை வந்து கொண்டிருப்பவர்களே ஸாதாத்துகள் ஆவர்.

நபிகள் கோமான் (ஸல்) அவர்களின் வாரிசுகளான ஸாதாத்து மார்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததற்காக, இமாம்களான ஹனபீ, ஷாபிஈ, ஹன்பலி ஆகிய மூவரும் அப்பாசிய கலீபாக்களால் துன்புறுத்தப்பட்டதும், இமாம் மாலிக் அவர்கள், ஸாதாத்துமார்களின் தலைவர் நப்ஸுஜக்கிய்யா (ரலி) அவர்களை கலீபாவாக ஆக்கும்படி, கலீபா மாமூனை நிர்ப்பந்தித்து, அவர் அவ்வாறு தனக்குப்பின் கலீபாவாக நியமித்ததும், ஆனால், பதவி ஏற்குமுன் அவர் காலமாகி விட்டதும், சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. இஃதன்றி:

இமாம்களான கஸ்ஸாலீ, பூசிரி, சுயூத்தி, ஷஅரானி, இப்னு அரபி போன்றோர்களும், இந்திய மகான்களான முஜத்தித் அல்-மதனி, ஷாஹ் அப்துல் அஸீஸ் தெஹ்லவீ, வேலூர் அஃலா ஹஸரத் போன்றோர்களும் நாயகம் (ஸல்) அவர்களின் மஹப் பத்திலும், தணியாத காதலிலும் மூழ்கித் திளைத்து, தங்களை அல்லாஹ்வின் அவ்லியாக்களாக ஆக்கிக் கொண்ட நிகழ்ச்சிகள் பல. அல்லாமா 'இக்பால்' தமக்கு ஞான அறிவு ஏற்பட்டது நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் சந்ததிகள் மீதும் தமக்கு ஏற்பட்ட மெய்க் காதலினால்தான் என்று கூறுகிறார்கள். மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்களும் இவ்வாறே மொழிந்துள்ளனர். மாமன்னர்கள் ஒளரங்கசீப்பும், மஹ்மூது கஜனவியும் ஒளுவில்லாமல் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரையே உரைப்பதில்லை என்ற வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். காயல் தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் தமது 'அஹ்மதுல்லாஹ்' பைத்தில், தம்மை நபி (ஸல்) அவர்களின் அடிமை என்று வர்ணித்து இருக்கின்றார்கள். ஒளரங்கசீப் அவர்களால் செய்து முடிக்கப்பட்ட 'பத்தாவா ஆலம் கீரிய்யா' என்ற பெரும் சட்டப் புத்தகத்தின், ஆசிரியர்கள் கூட்டமான பன்னிருவர்களில் ஒருவரான, இமாம் ஸதகதுல்லாஹ் அப்பா அவர்கள், நாதாக்களான அவர்களது முன்னோர் பின்னோர்களும், நபி (ஸல்) அவர்களின் மஹப்பத்தில் ஊறிப்போனது நாம் அறிந்ததே.

கீழக்கரை தைக்கா ஸாஹிபு வலியுல்லாஹ் அவர்கள், ஒவ்வொரு 'அத்த ஹிய்யாத்'திலும் ''அஸ்ஸலாமு அலைக்கு அய்யு ஹன்னபிய்யு'' (நபியே உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக!) என்று ஓதும்போது, ஒவ்வொரு முறையும் நபி (ஸல்) அவர்களின் திருமுகத்தைக் கண்ணால் காட்சியாகக் காணக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த மகான், நாயகம் (ஸல்) அவர்களின் மீது பாடிய 1000-ம் பைத்துகளுக்கு மேற்பட்ட 'ஷப்இய்யா' என்ற பாம லை முழுவதும் பேரன்பினால் ததும்பிக்கொண்டிருக்கிறது - மாப்பிள்ளை ஆலிம் வலியுல்லாஹ் அவர்கள் 'மின்ஹத்துஸ் ஸரந்தீப்' போன்ற பல நூல்கள் இரஸூல் (ஸல்) அவர்களின் மஹப்பத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பதுடன், நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றியும், அவர்களின் மூதாதைகளைப் பற்றியும் தர்க்கம் புரிவோருக்கு வாயடைப்பாகவும், இருக்கிறது. பல்லக்குவலியுல்லா அவர்கள் ''முஹம்மது'' என்ற சத்தம் காதில் விழுந்ததும், உடல் குலுங்கக் கூடியவர்களாக இருந் தார்கள். ஷெய்கு நாயகம் அஹ்மது அப்துல் காதிறு வலியுல்லாஹ் அவர்கள், நபி (ஸல்) அவர்களின் மஹப்பத்தும், அவர்களின் வாரிசு களான ஸாதாத்துக்களின் மஹப்பத்தும் தான் ஈமான் பரிபூரண மடைவதற்குக் காரணம் என்பதைச் சொல்லியும் நிரூபித்தும் காட்டினார்.

கவ்து நாயகம் (ரலி) அஜ்மீர் காஜா நாயகம் (ரலி) ரிபாயி ஆண்டவர்கள் (ரலி) நாகூர் ஆண்டவர்கள் (ரலி) ஏர்வாடி ஆண்டவர்கள் (ரலி) புகாரித் தங்கள் (ரலி) கோட்டாறு, ஸெய்யிது பாபா 'காஸீம் வலியுல்லாஹ் (ரலி) ஆகியோர் எல்லாம் ஸாதாத்து மார்களேயாவர்.! சாதாரண குதுபுகளைவிட, ஸாதாத்துகளில் தோன்றும் குதுபுமார்கள் பலமடங்கு அந்தஸ்தில் உயர்ந்தவர்களா வார்கள் என்று இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை ஆலிம் (ரஹ்) அவர்கள் தமது ஹஸனைன் மவ்லிதில் குறிப்பிடுகிறார்கள். எனவே,

இவர்களை அளவு கடந்து நேசிப்பதின் காரணமாக, விலாயத்தும் நற்பதவியும் பெற்றுக்கொண்ட அனேக பெரியோர்களைப்பற்றிப் பெரிய நூல்களில் விரிவான விளக்கங்களைக் காணலாம். அதுபோன்றே ஸாதாத்துமார்களைக் கேவலப்படுத்துபவருக்கு, இந்த உலகத்திலேயே சிறுமைத்தனம் ஏற்பட்டதற்கும் பல சான்றுகள் இருக்கின்றன.



## தப்பான வியாக்கியானம்

*''நபியே கூறுவீராக! நான் உங்களைப் போன்ற மனிதன்தான்.''*
*(16 - 110)*

என்ற இந்த ஆயத்தை, விபரம் புரியாத சில முல்லாக்கள், அடிக்கடி ஓதிக் காட்டுவதும், நபி (ஸல்) அவர்களைச் சாதாரண மனிதர்தான் என்று கூறுவதும், தற்காலத்தில் வழக்கமாகிவிட்டது. இதில் இரண்டு விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று: அல்லாஹ் இந்த வாக்கியத்தில் நாயகம் (ஸல்) அவர்களை முன்னோக்கி 'நீர் மற்ற மனிதர்களைப் போன்றவர்தான்' என்று சொல்லிவிடாமல் 'நீர் கூறுவீராக (மனிதர்களே!) நான் உங்களைப் போல் மனிதன்தான்'' என்று நீர் மாத்திரம் சொல்லிக்கொள்ளும். அவர்களும் உம்மைச் சொல்லுவதற்கில்லை என்ற குறிப்பு 'குல்' என்ற பதத்திலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. இரண்டாவதாக: அல்லாஹ் நபியைப் பார்த்து ''நீர் இவ்வாறு சொல்லும்'' என்று உத்தரவிட்டானே தவிர, நம்மை முன்னோக்கி, ''முஃமின்களே! நபி உங்களைப்போன்று ஒரு மனிதர்தான் என்று கூறுங்கள்'' எனக் கூறவில்லை.

இது எவ்வாறெனில், ஒரு பேரரசர் அல்லது ஜனாதிபதி தம்முடைய கவர்னர் ஒருவரைப் பார்த்து, ''நீர் உம்மைச் சாதாரண மனிதராகக் காட்டிக்கொள்ளும்' என்று உத்தரவிடுவது போன்றதுதான். இந்த உத்தரவை பொதுமக்கள் எவரேனும் தவறாகப் புரிந்துகொண்டு, கவர்னரைச் சாதாரண மனிதர்போல் அழைக்கவோ, பாராட்டவோ முயற்சி செய்தால், அரசாங்கத்தில் தண்டனை கிடைக்கும் அல்லவா? அது போலவே ஜனாதிபதியிடமிருந்து உத்தரவு வந்திருப்பதால், நானும் கவர்னரைச் சாதாரண மனிதர் என்றுதான் அழைப்பேன் என்று ஒருவர் கூறுவாரானால், அவர் மட்டமான புத்தியுடையவர் என்று பொதுமக்கள் கருதுவது போலவே, இந்த ஞான சூனியர்கள் மேற்குறிப்பிட்ட ஆயத்தை வைத்து நபி (ஸல்) அவர்களை இலேசாக எடை போடுவதும் புத்தியீனமான செய்கையாகும்.

கலெக்டர், ஐ.ஜி.பி. முதலிய பெரிய உத்தியோகத்தர்கள் கடிதங்களில் உங்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியன் (Your Obedient Servant) என்று எழுதுவது வழக்கம். அதை வைத்துக்கொண்டு நாம் அப்படிக் கருதுவது சரியாகுமா?

**(நபியே!) "இவர்களுடைய கல்வி, ஞானம் இவ்வளவு தூரம்தான் செல்கின்றது (இதற்குமேல் செல்வதில்லை) நிச்சயமாக உமதிறைவன், தன்னுடைய வழியிலிருந்து தவறியவன் யாரென்பதையும் நன்கறிவான்."** *(53 - 30)*

திருக் குர்ஆனுக்குள்ள தப்ஸீர் ஞானமும், ஹதீது பற்றிய வியாக்கியானமும் அறியாதவர்களுள் சிலர், தங்கள் மனம்போன போக்குக்கு, குர்ஆன் ஷரீப் ஆயத்துகளுக்கு ஸபப்-நுஜூல் தெரியாது, தப்பும் தவறுமாக, தமது சூழ்நிலைக்குத் தக்கவாறு பொருள் கூறி மேற்கோள்கள் காட்ட முற்பட்டிருக்கின்றனர்.

"குர்ஆனுக்கு ஒருவன் தனது யோசனையைக் கொண்டு வியாக்கியானம் செய்வானேயானால் காபிராகிவிட்டான்", என்றும், 'எவன் தன்னுடைய அறிவைக் கொண்டு குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்கின்றானோ, அவன் தன்னுடைய இடத்தை நரகத்தில் எடுத்துக்கொள்வான்' எனவும், அண்ணலெம் பெருமானார் (ஸல்) அருளியுள்ளார்கள்.

திருமறையில் அல்லாஹ்

**(நபியே!) உமதிறைவன், அவர்களுடைய இருதயங்கள் மறைத்து வைத்திருப்பதையும், (அதற்கு மாறாக) அவர்கள் வெளியிடுவதையும் நன்கறிவான் எனக் கூறுகின்றான்.** *(28 - 69)*

## 3-வது ஹத்யா
## தீனை (மார்க்கத்தை)ப் பின்பற்றுதல்

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ

**"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கமாவது இஸ்லாமேயாகும்."**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மார்க்கப் பிரச்சாரம் செய்யும்படி இறைவன் புறத்தால் இருந்து கட்டளை வந்தபோது, அவர்கள் தங்கள் உறவினர்களை அழைத்து "முர்றத்தின் கூட்டத்



தார்களே! பனீ முத்தலிபுகளே! என் அருமை மகள் பாத்திமாவே! நீங்கள் அனைவரும் தீனுல் இஸ்லாத்தைத் தழுவாவிட்டால், உங்களுக்கு நேரிடும் சிரமத்தையும், துன்பங்களையும் தட்டி விலக்குவதற்கு என்னால் முடியாது" என்று எச்சரிக்கின்றேன். "ஆகவே நீங்கள் அனைவரும் பரிசுத்த தீனில் சேர்ந்து, உங்கள் உடல் களை நரகத்தின் கொடிய நெருப்பிலிருந்து காத்துக் கொள்ளுங்கள். ஒருவன் குரைஷி வம்சமாக இருப்பினும், அவன் தீனில் சேரா விட்டால் நரகமே அடைவான். ஒரு ஹபஷி தீனுல் இஸ்லாத்தைத் தழுவினால், அவன் அடிமையாக இருந்தாலும், சுவர்க்கவாதி ஆகுவான்" என்று கூறினார்கள்.

இஸ்லாம் என்பது 'தவ்ஹீதை'யும், 'ஷரீஅத்'தையும் ஏற்றுக் கடைப்பிடிப்பதேயாம். பாவா ஆதம் (அலை) அவர்கள் நபியாக வந்த காலம் முதல் இஸ்லாமே சன்மார்க்கமாக இருந்து வருகிறது. இதைத் தவிர மற்றவைகள் எல்லாம் திருத்தப்பட்டவைகளேயாம்.

கதாதா (ரலி) கூறுவதாவது:- இஸ்லாம் என்பது **"லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி"** என்று பகர்வதும், இறைவனிடமிருந்து வந்த திருகுர்ஆனை அங்கீகரித்து, அதன்படி நடந்து அவனுக்கு நன்றி பாராட்டுவதுமாகும். ஹதீது ஷரீபில் கண்டபடி, தீனுல் இஸ்லாத்தை நமக்கு அளிக்கப்பட்டதற்காக நாம் நமது ஆயுள்வரை இறைவனுக்கு இடைவிடாது நன்றி செலுத்தி வரவேண்டியது கடமை யாகும்.

இதனையே, தக்கலை அப்பா ஞானமேதை பீர்முஹம்மது ஸாஹிப் வலியுல்லாஹ் அவர்கள் தங்கள் ஞானப்புகழ்ச்சியில்:-

ஆதம் பெறு மக்களெல்லாரிலும் நன்மையன்பு கொண்டே
வேத நபியிர சூலும்மத்தாக்கும் வெகு நன்றிக்குப்
பாதங்கள் மேலுஞ் சிரங்கீழு மாய்ப்பத்து நூறாயிர மாண்
டோதித் தவஞ்செய்தாலும் போதா தாமன்று கந்ததுக்கே

எனக் கூறியுள்ளார்கள்.

அல்லா(ஹ்)வுத் தஆலா ஒரு மனிதனுக்கு நிஃமத்தைக் கொடுத்தால், அதற்காக அவன் நன்றி பாராட்ட வேண்டியவனா கின்றான். ஆனால் தீனுல் இஸ்லாம் என்னும் மார்க்கத்தை அல்லா(ஹ்) நமக்கு அளித்திருப்பது, மற்றெல்லா நிஃமத்தைக் காட்டிலும் மிக மிக மேலானதாகும். இதற்குரிய நன்றியை நாம் எவ்வளவு தூரம்